விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 18 ஞாயிற்றுக்கிழமை (01.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 134

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392
(சி-4475)

# தேர்தலில் மகிந்த-மைத்திரி இனி போட்டியிட மாட்டார்கள்

## சிறிலங்கா சுதந்திரக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷவும் இனியொரு தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட மாட்டார்கள் என அறிவித்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் இருவருக்கிடையிலான மோதல்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

15 ஆம் பக்கம் பார்க்க....



## திருட்டை தடுக்க முயற்சித்த குடும்பஸ்தருக்கு வெட்டு

(யாழ்ப்பாணம்)


திருட்டுச் சம்பவத்தை தடுக்க முயற்சித்த வீட்டு உரிமையாளர் மீது திருடன் கைகோடரியால் தாக்கியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் அராலி செட்டியார் மடம் பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் நடராஜன் (வயது 49)

16 ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ முகாமுக்குள் சம்பந்தன் அத்துமீறி நுழையவில்லை-ரணில்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராணுவ முகாம் ஒன்றுக்குள் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் அத்துமீறி நுழைந்ததாக சில ஊடகங்கள் தவறான செய்திகளை வெளியிட்டுள்ளதாக பிரதமர் விமர்சித்துப் பேசியுள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

## விக்னேஸ்வரன், மாவை உள்ளிட்ட நால்வருக்கு நீதிமன்று அழைப்பாணை

(கொழும்பு)

வடமாகாண சபையினால் உருவாக்கப்பட்ட அரசியல் தீர்வு திட்ட வரைபுக்கு எதிராக கொழும்பு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கும் நிலையில் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் உள்ளிட்ட 4 பேருக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அரசியலமைப்பு மறுசீரமைப்பு முயற்சியில் வடமாகாண மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களும் இடம்பெறும் வகையில் வடமாகாண சபையினால் 19 பேர்கொண்ட குழு உருவாக்கப்பட்டு அரசியல் தீர்வு திட்ட வரைபு தயாரிக்கப்பட்டது.

15 ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கின் தீர்வுத் திட்ட வரைபை சம்பந்தனிடம் கையளிக்கும் நிகழ்வு விக்கி இன்மையால் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த தீர்வுத்திட்டத்தின் முன்மொழிவுகளை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க கட்சி தலைவருமான இரா.சம்பந்தனிடம் கையளிக்கும் நிகழ்வு வடக்கு முதலமைச்சரின் பங்குபற்றல் இன்மையால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.


வடக்கு மாகாண முதலமைச்சர் சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதியை சந்திப்பதற்காக கொழும்பு சென்றிருந்த நிலையில், அந்த சந்திப்பு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

அந்நிலையில் வடக்கு மாகாண அவைத்தலைவர் ஆகியோருக்கு கூட முன்னறிவித்தல் செய்யப்படாமல் சபாநாயகரிடம் வடக்கு தீர்வு திட்ட முன்மொழிவுகளை முதலமைச்சர் சமர்ப்பித்திருந்தார்.

முதலமைச்சரின் அதிரடியான

15 ஆம் பக்கம் பார்க்க....

## ஆங்காங்கே இடியுடன் மழை
## பொன்னாலையில் மினி சூறாவளி
## கட்டிட கூரைகள் காற்றில் பறந்தன



(யாழ்ப்பாணம்)

பொன்னாலை பகுதியில் நேற்றைய தினம் சனிக்கிழமை மதியம் திடீரென்று வீசிய மழையுடன் மினி சூறாவளியால் வீடுகள், கடைகள் மற்றும் பொதுக் கட்டிடங்களின் கூரைகள் என்பன சேதமாகியுள்ளன.

15 ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டு எதிரணி மே தின நிகழ்வு கிருலப்பனை மைதானத்தில் இன்று

(கொழும்பு)

மகிந்த ராஜபக்‌ஷவுக்கு ஆதரவான கூட்டு எதிர்க்கட்சியின் மேதினக் கூட்டத்தில் 10 அரசியல் கட்சிகளும் 100 தொழிற்சங்கங்களும் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷவுக்கு ஆதரவான கூட்டு எதிர்க்கட்சியின் மே தினக் கூட்டம் இன்று கிருலப்பனை மைதானத்தில் மகிந்த தலைமையில் நடைபெறவுள்ளது.

மதியம் ஒரு மணியளவில் நாரஹேன்பிட்டி சாலிகா மைதானம் அருகே ஆரம்பமாகும் ஊர்வலம் பார்க் வீதி, பொல்ஹேன்கொட சந்தி, பேஸ்லைன் வீதி ஊடாக கிருலப்பனை மைதானத்தை சென்றடை

16 ஆம் பக்கம் பார்க்க....

## ஆணைக்குழுவில் நிஷாந்த ஆஜர்

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமான சேவை நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்கிரமசிங்க நேற்று ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகளுக்காக ஆஜராகினார்.

ஸ்ரீ லங்கன் விமான சேவையில் நடந்துள்ளதாக கூறப்படும் பாரிய ஊழல், மோசடிகள் குறித்து ஜனா

16 ஆம் பக்கம் பார்க்க....

## கடும் வெப்பத்தை தொடர்ந்து கடும் குளிர், வெள்ளப்பெருக்கு

### காலநிலை தொடர்பில் எச்சரிக்கை

(கொழும்பு)

பசுபிக் பெருங்கடலில் ஏற்பட்ட, எல் நினோ எனப்படும் வெப்ப சலனத்தின் தாக்கத்தினால், பெரும்பாலான ஆசிய நாடுகள் கடும் வெப்பம் மற்றும் வரட்சியின் பிடியில் சிக்கியுள்ள நிலையில், இந்த ஆண்டு இறுதியில் லா -நினா என்ற குளிர் சலனத்தின் பிடியில் சிக்க நேரிடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு தொடங்கிய எல்-நினோ காலநிலை மாற்றத்தினால், பிலிப்பின்ஸ், மலேசியா உள்ளிட்ட ஆசிய நாடுகளில் வரலாறு காணாத கடும் வெப்பம் நிலவியது. இந்தியா,

16 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஜீவகவாத ஒத்தட பத்து

முதுகுத்தண்டு,கழுத்து, கணுக்கால், முழங்கால், இடுப்பு மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய இடங்களிலும் கார்ட்டிலேஜ் எனப்படும் எலும்பு திசுக்கள் குறைதல், திசுக்கள் கடினமடைதல் அல்லது தேய்மானம் ஆகியன காரணமாக ஏற்படும் வலிகளுக்கு ஜீவகவாத ஒத்தட பத்து மருந்தை பயன்படுத்துவதன் மூலம் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனைப் பயன்படுத்துவதன் மூலம் எலும்பு மூட்டுக்களில் திசுக்களின் வளர்ச்சி அதிகரிக்கும்.

**Manufactured by:**

Jeewaka Herbal Products (pvt) Ltd
Yakkala


சந்தைப்படுத்துவோர்

**சிவா நறுமணப் பூங்கா**

இல.288, ஆஸ்பத்திரி வீதி , யாழ்ப்பாணம்
(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகாமையில்)

(C-4476) தொ.பே - 021 - 222 2567

# துப்பாக்கிச் சூடு; ஒருவர் பலி



முல்லேரியா, பேதியாகொடை பிரதேசத்தில் ஒருவர் துப்பாக்கியால் சுட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந் தெரியாத மூன்று நபர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் காயங்களுடன் முல்லேரிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

கிரிபத்கொடை, மாகோல பிரதேசத்தில் வசிக்கும் 41 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக முல்லேரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (செ-12)

## பணியாளர்கள் தேவை

**கிளிநொச்சியில் இயங்கிவரும் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு கீழ்வரும் பதவிகளுக்கு பணி ஆட்கள் தேவை**

01. சிட்டை எழுதுநர் (35 வயதுக்கு மேல்)
02. சிட்டை சரிபார்ப்பவர் (பெண் - 35 வயதுக்கு மேல்)
03. விற்பனையாளர்
04. பொருட்களை ஒழுங்கமைத்து வைக்கக் கூடியவர்
(03, 04: 25 வயதுக்கு மேல்)

**தொடர்பு : 071 735 4308**

(4346)

## Aachi Foods Restaurant
## ஆச்சி பூட்ஸ் றெஸ்ரோறன்ற்

மிகமிகச் சுத்தமும், செயற்கைச் சுவையூட்டிகள் அற்றதும், யாழ்ப்பாணப் பாரம்பரியத்தைக் கொண்டதும், குறுகிய காலத்தில் அதிகளவான வாடிக்கையாளரைப் பெற்று உணவு விற்பனையில் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் முன்னணி வகிக்கும் நிறுவனமாக விளங்கும்

## ஆச்சி பூட்ஸ் றெஸ்ரோறன்ற்

147, பலாலி றோட், திருநெல்வேலி - 021 222 5001
யாழ்.மருத்துவபீடம் கன்ரீன்
மானிப்பாய் நவீன சந்தை, மானிப்பாய் - 076 675 7466
இல.102, சுன்னாகம் - 077 468 8286
கண்டி றோட், சாவகச்சேரி - 077 427 8900
கைதடி கிழக்கு, கைதடி - 021 205 7455 (Factory)

(சி-4473)

## மீண்டும் ஸ்ரீதேவி வில்லிசைக்குழு



(10.07.2016 வரை)
உங்கள் ஆலய
திருவிழாக்களில்
அழைத்து மகிழுங்கள்

தொடர்பு-வில்லிசை சக்கரவர்த்தி
**கலைமாமணி Dr.S.S.குருஜீ**
T.P:-0757428011, 0767256024
**நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில்.**

(சி-4487)

# மரண அறிவித்தல்



## அருளம்பலம் சத்தியேந்திரன்

வெள்ளாமுள்ளிவாய்க்காலை பிறப்பிடமாகவும், சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் சத்தியேந்திரன் (சத்தி) நேற்று (30.04. 2016) சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு புதல்வனும், சரோஜினி (புதுக்குடியிருப்பு), சரவணமுத்து (குமுழமுனை), அமிர்தலிங்கம் (கோட்டக்கல்வி பணிப்பாளர் - கிளிநொச்சி), அமரர் தியாகராசா, மங்கயக்கரசி (தேவிபுரம்), சூரியகலா (புதுக்குடியிருப்பு), சகுந்தலா (பதிவாளர் - கரைதுறைபற்று), வசந்தா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), கனகமணி (குமுழமுனை), கானபவாணி (பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), சிவலோகநாயகி (புதுக்குடியிருப்பு), சண்முகம் (தேவிபுரம்), நவரத்தினராசா (புதுக்குடியிருப்பு), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் தற்காலிக இல்லமான முதலாம் வட்டாரம், முள்ளியவளையில் இன்று (01.05.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெள்ளாமுள்ளிவாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொ.பே: 077 166 2045,
077 866 8836

தகவல் :
குடும்பத்தினர்.

(சி-4485)

## வடமாகாண நீர்வள அபிவிருத்தி ஆய்வரங்கு
## Northern Province Water Resources Development Colloquium 2016

### ஆய்வுக் கட்டுரைகளுக்கான அழைப்பு

வடமாகாண நீர்வளத்தினை மேம்படுத்தல், வடமாகாண நீர்வளத்தின் நின்றுநிலைக்கக்கூடிய உச்சப் பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்ளல் என்னும் இரு இலக்குகளை எய்தும் நோக்குடன் வடமாகாணத்திற்கென ஒரு நீரியல் கொள்கையினை வகுக்கும் முயற்சியின் முன்னோடியாக வடமாகாணசபையின் அமைச்சர் சபைத் தீர்மானத்துக்கு அமைவாக ஆய்வரங்கு ஒன்றினை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாணம் பிராந்திய ரீதியாக புவியியல் மற்றும் நீர் மூலங்கள் என்பவற்றின் அடிப்படையில் வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. இதைக் கருத்திற்கொண்டு, வடமாகாணத்தின் நீர்வளத்தினை மீட்டெடுத்தல், பாதுகாத்தல், பங்கிடுதல், முகாமைசெய்தல் எனும் விடயப்பரப்புக்களை உள்ளடக்கி அதற்கான தொழில்நுட்பம் சார்ந்த, சுற்றுச்சூழல் சார்ந்த, விவசாயம் மற்றும் பிறதொழிற்றுறை சார்ந்த, சட்டவாக்கம் சார்ந்த மூல உபாயங்களை ஆராய்ந்தறிதல் இவ்வாய்வரங்கின் நோக்கம் ஆகும்.

இவ்வாய்வரங்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்க விரும்பும் ஆய்வாளர்கள் 300 சொற்களிற்கு மேற்படாத தங்களின் ஆய்வுச்சுருக்கத்தினை எதிர்வரும் 01.06.2016ஆம் திகதிக்கு முன்பதாக **பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்), இல.82 செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு அல்லது **npwrdc@gmail.com** என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அவசியமேற்படின் கூடுதல் விபரங்களை இரண்டு பக்கங்களிற்கு மேற்படாத இணைப்பாகச் சமர்ப்பிக்கலாம். ஆய்வுச்சுருக்கத்தில் தங்களின் தொலைபேசி இலக்கம், முகவரி, மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும்.

சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக்கட்டுரைகள் துறைசார் நிபுணர் குழுவினால் தெரிவுசெய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படும் ஆய்வுச் சுருக்கங்கள் விரிவான ஆய்வுக்கட்டுரைகளாக சமர்ப்பிக்கப்படுவதற்காக உரியவர்களுக்கு அறியத்தரப்படும்.

**செயலாளர்**
**விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு, வடமாகாணம்**
இல.04 புருடி ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம்

(சி-4484)

# குடிசை எரிந்து நாசம்



வடமராட்சி கிழக்கு மணற்காட்டில் உள்ள குடிசை ஒன்று தீப்பிடித்து எரிந்து நாசமானதாகச் தெரிவிக்கப்படுகிறது. கடந்த 28 ஆம் திகதி நண்பகல்12 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மணற்காட்டைச் சேர்ந்த இராசலிங்கம் யசோதரன் என்பவரது குடிசையே முற்றாக எரிந்து நாசமானது.

நண்பகல் 12 மணியளவில் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த வேளை குடிசையில் தீப்பொறிபட்டு தீப்பற்றியதாக தெரிவிக்கப்படுகிறது.அயலவர்கள் வந்து அணைக்க முற்பட்ட போதும் குடிசை தீயில் எரிந்து உடைமைகளும் நாசமாகின. தீயில்எரிந்த வீட்டை மருந்தங்கேணி பிரதேசசெயலர் கே.கனகேஸ்வரன் சென்று பார்வையிட்டதுடன் தற்காலிக தேவைகளை பூர்த்தி செய்து கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-60)

# தனக்குத்தானே தீ மூட்டிய குடும்பப்பெண் உயிரிழந்தார்

கணவன் -மனைவிக்கு இடையில் ஏற்பட்ட சண்டையில் தீமூட்டிக் கொண்ட மனைவி நேற்று சனிக்கிழமை உயிரிழந்ததாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் பிள்ளையார் கோயிலடி தொண்டைமானாறைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயான மோகனராசா சாந்தினி (வயது-30) என்பவர் தனக்குத்தானே தீ மூட்டிக் கொண்டுகணவனான மாணிக்கவாசகர் மோகனராசா (வயது -35) என் பவரை கட்டியணைத்துள்ளார்.

இருவரும் படுகாயங்களு க்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இதில்மோகனராசா சாந்தினி என்பவர் சிகிச்சைபலனின்றி நேற்று சனிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில்உயிரிழந்தார். கணவர் தொடர்ந்தும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறரர். மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (இ-60)


## வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை
## Special Treatment for Rheumatism

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Low back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Slipped disk), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), மூட்டுத்தேய்மான வாதம் (Osteoarthritis), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

**ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251
(2272)


# சமஷ்டி நாட்டை பிரிவினைக்கு கொண்டு செல்லும்

# 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதே பொருத்தம்

## முன்னாள் அமைச்சர் கெஹலிய ஆலோசனை

(கொழும்பு)

**மட்டுப்படுத்தப்பட்ட பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களுடன் மேல் சபையொன்றையும் இணைத்து 13 ஆவது திருத்த சட்டத்திற்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதே பொருத்தமானதாக அமையும். இதுவே ஒற்றையாட்சியின் கீழ் சாத்தியமான தீர்வாக அமையும் என்று மகிந்த அணியின் முக்கியஸ்தரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பாதுகாப்பு பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

ஆனால் அதனை விடுத்து சமஷ்டி முறையில் தீர்வு காண முயற்சித்தால் அது நாட்டைபிரிவினைக்குகொண்டு செல்லும் என்பதுடன் ஒற்றையாட்சியின் கீழ் ஒருபோதும் சமஷ்டி முறைமைக்கு செலவும் முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டைப் பிரிக்க மாட்டோம். பிரிவினைக்கு துணை போகமாட்டோம் என்று சத்தியப்பிரமாணம் செய்துவிட்டே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் இவ்வாறு சமஷ்டி குறித்து பேசுகின்றனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு நியாயமான தீர்வுத் திட்டத்தை கோரிநின்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இன்று கடும்போக்காளர்களாக மாறி சமஷ்டி முறைமையின் அடிப்படையில் தீர்வைக் கோருவது ஆச்சரியமளிக்கிறது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை நாங்கள் புதிய அரசியல் சிந்தனை கொண்ட தலைவர்களாக பார்த்தோம். ஆனால் அவர்கள் தற்போது அவ்வாறு செயற்படவில்லை.

நாங்கள் எப்போதுமே 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தயாராக இருந்தோம். அதாவது ஒற்றையாட்சி முறைமையின் கீழ் ஒருபோதும் இந்த நாட்டில் சமஷ்டி முறைமையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# வடக்கில் இம்முறையும் மேதின எழுச்சி நிகழ்வுகள்

## அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இம்முறையும் மேதின எழுச்சி நிகழ்வுகளை அனுஷ்டிப்பதற்கு பெருமெடுப்பில் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தமிழர் தரப்பில் பிரதானமான கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள், ஆசிரியர் சங்கங்கள் தமது மேதின கொண்டாட்டங்கள் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவித்தல்களை விடுத்துள்ளன.

இதனடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதினக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மருதனார் மடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு பிற்பகல் 3 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். அத்துடன் இக்கூட்டத்திற்கு அனைத்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்திருக்கின்றது. எனினும் இந்த மேதின அழைப்பு தொடர்பில் விடுக்கப்பட்ட துண்டு பிரசுரத்தில் விருந்தினர்கள் பட்டியலில் வடக்கு மாகாண முதலமைச்சரது பெயர் குறிப்பிடப்படவில்லை.

வடக்கு மாகாண முதலமைச்சரை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மேதின கூட்டத்திற்கு அழைக்கப்படாமை குறித்து கட்சிக்குள் பல கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இன்னும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மேதின கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் அவசர அவசரமாக வெளிநாடு சென்றுள்ளனர்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இணைந்து கூட்டாக நடத்தும் தொழிலாளர் தின நிகழ்வு பருத்தித்துறையில் இடம்பெறவுள்ளது. பருத்தித்துறை சிவன்கோவில் திருமண மண்டபத்தில் இன்று மாலை 3 மணிக்கு மேதின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

இதில் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற் போனோரை கண்டறிதல் ஆகியவற்றை வலியுறுத்தியும், தமிழ்த்தொழிலாளர்கள், தமிழ் விவசாயிகள், தமிழ் மீனவர்கள் ஒடுக்குமுறையிலிருந்து விடுபடல், காணி அபகரிப்பை தடுத்தல், மீள் குடியேற்றத்தை வலியுறுத்துதல், இராணுவ மயமாக்கலை தடுத்தல், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான கைதுகளை நிறுத்தல், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத் தல் என்பன முக்கிய விடயங்களாக கொள் ளப்படவுள்ளன.

இலங்கை ஆசிரியர் சங்கமும் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் இணைந்து நடத்தும் மேதின நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். முன்னதாக யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகும் மேதின பேரணி குமாரசாமி வீதியூடாக பலாலி வீதியை அடைந்து பரமேஸ்வரா சந்தியை அடைந்து மீண்டும் பல்கலைக்கழகத்தை அடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி ஆர்ப்பாட்டப் பேரணி பொதுக் கூட்டத்துடன் நடத்த வுள்ளது.

வலி.கிழக்கு ஆவரங்கால் சந்தியிலிருந்து மேதினப் பேரணி பி.ப 4 மணிக்கு ஆரம்பமாகும். புத்தூர் சுன்னாகம் வீதியில் அமைந்துள்ள கலைமதி விளையாட்டு மைதானத்தில் மே தினக் கூட்டம் மாலை 6 மணிக்கு நடைபெறும்.

வவுனியா நகரிலும் எமது கட்சி மேதினப் பேரணியையும் பொதுக் கூட் டத்தையும் நடத்தவுள்ளது.

இவ்வாறு ஏனைய கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள், சங்கங்கள் ஆகியவற்றின் மேதின கூட்டங்கள், ஊர்வலங்கள், வடக்கு முழுவதும் நடைபெற ஏற்பாடாகி உள்ளன.

இதற்கு பொதுமக் கள் அனைவரையும் திர ண்டு வந்து ஆதரவு வழங்கி உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளுக்காக குரல் கொடுக்குமாறு வலியுறுத்தியுள்ளன. (இ-4)


## குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை
## Special Treatment for Gastric Ulcer


சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer),வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.

**ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

(2579)

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

# முச்சக்கரவண்டி விபத்து; ஒரே குடும்பத்தில் மூவர் காயம்



(கிளிநொச்சி)

குஞ்சுபரந்தன் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் முச்சக்கரவண்டி தடம் புரண்டதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பூநகரியில் இருந்து கிளிநொச்சி நோக்கி மூவரையும் ஏற்றி கொண்டு சென்றுகொண்டிருந்த முச்சக்கர வண்டியின் கைபிடியில் கோளாறு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக குஞ்சுபரந்தன் போரிக கடவை அம்மன் கோவில் சந்திக்கு அருகில் உள்ள எல்லைக்கல்லில் முச்சகர வண்டி மோதி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் காயமடைந்த மூவரும் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்

காயமடைந்த மூவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய், தந்தை, மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

# கொல்கத்தாவை வென்றது டெல்லி டேர்டெவில்ஸ்




கொல்கத்தா அணிக்கு எதிரான போட்டியில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

டெல்லியில் நேற்று நடந்த போட்டியில் கொல்கத்தா மற்றும் டெல்லி டேர்டெவில்ஸ் அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணியின் அணித்தலைவர் கௌதம் கம்பீர் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதனையடுத்து களமிறங்கிய டெல்லி அணியின் தொடக்க வீரர்களான குயின்டன் (1), ஸ்ரேயாஸ் (0) ஏமாற்றினர்.

அடுத்துவந்த கருண் நாயர் 68 ஓட்டங்களும், பில்லிங்ஸ் 54 ஓட்டங்களும் எடுக்கவே, 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 186 ஓட்டங்கள் எடுத்தது.

இதனை தொடர்ந்து 187 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா அணி களமிறங்கியது.

ஜாகீர்கான் வேகத்தில்அணித்தலைவர் கம்பீர் 6 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த வீரர்களும்சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்கவே, 18.3 ஓவரில் 159 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.


முடிவில் டெல்லி 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (க)

## இன்றைய போட்டிகள்

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதரனத்தில் நடைபெற்று வருகிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும்,மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து விண்மீன் அணியும் மோதவுள்ளன. (க)

# கருத்தரங்கில் உறங்கிய பசில்



(கொழும்பு)

கொழும்பு பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் வண.எல்லே குணவங்ச தேரரின் **56இன் இறுதி** கருத்தரங்கு நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, முன்னாள் பிரதியமைச்சர் சரத் வீரசேகர உட்பட முக்கியஸ்தர்கள் உறக்கத்தில் காணப்பட்டனர். (செ-12)

# மரண அறிவித்தல்



## திருமதி
## பொன்னம்பலம் பொன்னம்மா

பண்ணாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் பொன்னம்மா அவர்கள் நேற்று (30.04.2016) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - வள்ளியாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், பொன்னம்பலம் அவர்களின் பாசமிகு துணைவியாரும், அமரர் சீனிவாசகம் (வவுனியா), கிருஸ்ணமூர்த்தி (CTB), சறோஜா, அமரர் ஆறுமுகசாமி, தேவமலர், பேரின்பநாதன் (பிரான்ஸ்), தேவராசா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவமூர்த்தி (சுவிஸ்), சிவநேசன் (சுவிஸ்), சிவறஞ்சினி (ஜேர்மனி), சிவறஜனி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாமினி, தயாளினி, நந்தகுமார், பத்மநாதன் (நில அளவைத் திணைக்களம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவஜன், பானுஜா, சிந்துஜன், சிலோஜன், நிறோஜன், நிதுஷன், நிருபன் ஆகியோரின் செல்லப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பண்ணாகம்.
தொ.பே: 077 539 1425

தகவல்:
குடும்பத்தினர்.

(4348)

## வீடு வாடகைக்குண்டு

யாழ்பலாலிவீதியில்நகரில்இருந்து 1km தொலைவில் அமைந்துள்ள வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு:- 077 711 0281 (4328)

## காணி விற்பனை

கொடிகாமம் கச்சாய் வீதியில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 076 702 6426 (4341)

## காணி விற்பனைக்கு

யாழ்.நகரிலிருந்து 3 மைல் தூரத்தில் அல்லைப்பிட்டியில் வெள்ளைக் கடற்கரைக்கு ஓரமாக 45 பரப்பு காணி விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் மட்டும் நேரடியாக தொடர்பு கொள்ளவும். 077 910 7242 (4331)

## கடை விற்பனைக்குண்டு

ஸ்ரான்லி றோட்டில் வியாபார முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் மாடிக் கடை விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 077 910 7242 (4331)

## SB TRAVELS & TOURS (PVT) LTD

SPECIAL AIR FARES

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | 21,800/- | LONDON | 88,600/- |
| MADURAI | 17,400/- | TORONTO | 148,200/- |
| TRICHI | 27,600/- | MALDIVES | 17,500/- |
| BOMBAY | 32,000/- | PARIS | 86,699/- |
| BENGALURE | 28,900/- | NEWYORK | 107,000/- |
| KOCHI | 26,400/- | MELBOURNE | 99,800/- |
| DELHI | 47,400/- | CANTON | 71,900/- |
| MALAYSIA | 26,600/- | PERTH | 104,200/- |
| SINGAPORE | 27,500/- | NARITA | 77,900/- |
| BANGKOK | 29,900/- | AUCKLAND | 130,900/- |
| ONEWAY: DUBAI-16,800/- | | SYDNEY | 104,600/- |

DOHA-16,800/-, ABUDHABI-18,800/-Onwards, SHARJAH- 14,500/- Onward

0% NET FARE

*Condition Apply

VISA CARD ACCEPTED.

குழுவாக டிக்கட் பெறுபவர்களுக்கு 5% கட்டணக்கழிவு

IATA ACCREDITED AGENT (சி-4479)

எதிர்பாராத மிகக்குறைந்த அதிக கட்டணக்கழிவுடன் டிக்கட்டுகளும், விசா ஏற்பாடு உட்பட அனைத்தும் ஒரே இடத்தில் சிறப்பாக செய்து கொள்ள இன்றே அழையுங்கள்:

0771083480,81,82,83 | 0766911080, 81, 82,83

0212229555 / 0212228555

Call us on : 0094 112540540 / Mobile: 0094 771083480/81

e-mail : bookings@sbairfares.com

No324, ALUTHMAWATHA ROAD, COLOMBO-15. TEL-011 2540280
No: 132, SRI KATHERASAN STREET, COLOMBO 13. TEL -011 2333322
NO:216, KASTHURIYAR ROAD, JAFFNA. TEL-021 2229555

E-mail: sbtravels99@yahoo.com Contact for Travel Insurence


# மரண அறிவித்தல்

## திருமதி செல்வராசா புவனேஸ்வரி (சின்னக்கிளி)



நயினாதீவு ஆறாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்கிளி என்று அன்பாக அழைக்கப்பட்ட செல்வராசா புவனேஸ்வரி 29.04.2016 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பூமாலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் வேலுப்பிள்ளை- தனம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்வராசாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற நாகம்மாவின் (புஸ்பம்) அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பூவிலிங்கம் மற்றும் சதாசிவம் (சதா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், செல்வகுமார் (செல்வா- வலம்புரி பத்திரிகை), யோகவதனி (வதனி- சுவிஸ்), நவக்குமார் (நவா- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாந்தரூபி, சுரேஸ் (சுவிஸ்), தனுஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சந்திரகுமார் (சுங்கப் பரிசோதகர்- யாழ்.), காலஞ்சென்ற சந்திரமலர் (மலர்) மற்றும் விஜயகுமாரி, கிருபாகரன், காலஞ்சென்ற கிருபாநிதி மற்றும் கலாநிதி, விஜயகரன், தயாநிதி (இத்தாலி), சதீஸ்குமார் (இத்தாலி) ஆகியோரின் சிறிய தாயாரும் கைலேஸ்வரியின் அன்புப் பெரியதாயாரும், சிந்துஜா, கபிஷனா, அனுஜா (சுவிஸ்), சுஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02.05.2016 திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**35, முள்ளி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.** (சி-4482) **குடும்பத்தினர்.**

# இராசி பலன்

01.05.2016
(சித்திரை 18, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
நவமி பிற்பகல் 2.44 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 4.59மணிவரை
சுபநேரம்8.57-10.27 மணிவரை
இராகுகாலம் 4.27-5.57 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சூரி சுக் புத | | |
| சந் கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூசம், ஆயிலியம் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**இடபம்:** வாழ்க்கைத்தரம் உயர வழி வகை செய்வீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்:** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பார்கள், வழிபாடு மகத்துவம் தரும், கொடுக்கல் - வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள்.

**கடகம்:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களை முடிப்பதில் கொஞ்சம் சிரமங்கள் ஏற்படலாம், போசன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்:** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலைகள் உருவாகும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்,எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் நாள்,உடல் நலன் சீராகி உற்சாகப்படுத்தும்.

**துலாம்:** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்,பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** வளர்ச்சிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**தனுசு:** பொருளாதார நிலை உயர்வடையும்,உடன்பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர்,முயற்சிகள் எளிதில் கைகூடும்,போசன சுகமுண்டு.

**மகரம்:** நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், காணாமல்போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு,கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**கும்பம்:** ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள்வீர்கள்,போசன சுகமுண்டு, ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்:** உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம்,தொழிலில் சிறுமாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், சயனசுகக் குறைவான நாள்.

# நெஞ்சம் நிறைந்த கிருஸ்ணா...



அமரர்
சிதம்பரநாதன்
கிருஸ்ணதாஸ்

29.04.2016 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய யாழ்ப்பாண பாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரனை வேண்டுகின்றேன்.

## கனகசபை தர்மகுலசிங்கம்

பழமுதிர்ச்சோலை,
காரைநகர்.

144,பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4484)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 25.07.1933

இறப்பு 04.05.2013

அமரர் திருமதி நாகரெத்தினாம்பாள்
தியாகராசா

திதி- அபரபக்க நவமி
01.05.2016

மூன்று ஆண்டுகள் சென்றாலும்
வாழ வழி அமைத்த உங்களை மறக்க முடியுமா
அன்புடனும் பாசத்துடனும்
பேரப்பிள்ளைகளை வளர்த்தீரே...
அவர்களின் ஒளிமயமான வாழ்விற்கு
எம்பெருமான் ஞான செல்வவிநாயகரின்
ஆசியும் அருளும் பெற்று வெற்றி பெற்றுள்ளீர்...
ஓம் சாந்தி!

25,புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.


கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(4301)

# கொழும்பு துறைமுகத்தில் பிரெஞ்சு போர்க்கப்பல்

## புதிய உறவுகள் துளிர்கின்றன





(கொழும்பு)

இலங்கையுடன் உறுதியான கடற்படை கூட்டு ஆரம்பிக்கப்படுவதற்கான தருணம் இதுவேயாகும் என்று பிரெஞ்சுக் கடற்படை தெரிவித்துள்ளது.

பிரெஞ்சுக் கடற்படையின் ஆகோனிட் போர்க்கப்பல் நேற்று முன்தினம் ஒருவார காலப் பயணமாக, கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தப் போர்க்கப்பலுக்கு, இலங்கை கடற்படை பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தது.

இதன் பின்னர், இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன ஆகியோர் பிரெஞ்சுப் போர்க்கப்பலுக்குச் சென்று பார்வையிட்டதுடன், அதன் கட்டளை அதிகாரியான, கப்டன் லோரன்ட் மாசார்ட் டி கிரமொன்ட்டைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இதற்கிடையே கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த பின்னர் பிரெஞ்சுப் போர்க்கப்பலின் கட்டளை அதிகாரியான கப்டன் லோரன்ட் மாசார்ட் டி கிரமொன்ட் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கூட்டு ஆரம்பிக்கப்படுவதற்கு இது நல்ல நேரம் என்று தெரிவித்தார்.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் இலங்கையும், பிரான்சும் ஒரே கரிசனையைக் கொண்டுள்ள நாடுகள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, இந்த நிகழ்வில் உரையாற்றிய இலங்கைக்கான பிரெஞ்சுத்தூதுவர் ஜீன்மரின் சூ, ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் பிரெஞ்சுப் போர்க்கப்பல் ஒன்று இலங்கை வந்திருப்பதாகவும், இதனையடுத்து, மேலும் பல பிரெஞ்சுப் போர்க்கப்பல்கள் வரவுள்ளதாகவும் தெரிவித்தார்.

பிரெஞ்சுப் போர்க்கப்பல் கொழும்பில் தரித்து நிற்கும் போது இருதரப்பு கடற்படை உறவுகளை வலுப்படுத்தும் பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் எதிர்வரும் மே 5 ஆம் நாள் கொழும்பு துறைமுகத்தை விட்டுச் செல்லும் போது கூட்டுப் பாதைப் பயிற்சியிலும் இருநாடுகளின் கடற்படைகளும் ஈடுபடவுள்ளன.

கொழும்பில் தரித்திருக்கும் பிரெஞ்சுப்போர்க்கபலன ஆகோனிட், 34 ஏவுகணைகளைக் கொண்ட, நவீன போர்க் கப்பல் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-5)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**விற்பனைக்கு**
மாருதி சுசுகி ALTO LXI வகையைச் சேர்ந்த கார் விற்பனைக்குண்டு.
**தொடர்புகளுக்கு: 077 314 9904**
(சி-4471)

**Centre For Holistic Healing**
**நிறைவாழ்வு மையம்**
Vocational Training Centres
பெண்கள் தொழிற்பயிற்சி நிலையங்கள்
CERTIFICATE AWARDING CEREMONY
சான்றிதழ் வழங்கும் நிகழ்வு
Exhibition, and Sale of Garments & Food Items
ஆடைகள், சிற்றூண்டிகள் கண்காட்சியும் விற்பனையும்.
C.H.H. Building
Mc. Leod Hospital
Inuvil
நிறைவாழ்வு மையம்
மக் / லியோட் வைத்தியசாலை
இணுவில்.
Date:03/05/2016
நடைபெறும் திகதி: 03/05/2016
Ceremony Begins at 10.00 a.m
ஆரம்பம்: காலை 10.00 மணி
(சி-4465)





**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறிவித்தல்**

*2016 உயர் திருவிழாக் காலத்தில் தற்காலிக கடைகள் அமைத்தல், உடை தேங்காய் பெற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றுக்கான ஏலம் கூறுதல் 07.05.2016*

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் வருடாந்த உயர் திருவிழா 2016.06.06ஆம் திகதியன்று ஆரம்பமாகி 2016.06.21 ஆம் திகதியன்று நிறைவு பெற உள்ளது.

இக்காலப்பகுதியில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்குரிய; நிர்வாகத்தினால் சுட்டிக்காட்டப்படும் இடங்களுக்கான பகிரங்க ஏலம் கூறுதலும், உடை தேங்காய்க்கான பகிரங்க ஏலம் கூறுதலும் 2016.05.07ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறும்.

ஏலத்தில் பங்குகொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமுகமளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு:-

1. குளிர்பானக் கடைகள் நடத்துபவர்கள் முறையான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

2. சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

ஏலத்தில் முதல் நிலை பெற்றவர்கள் அன்றைய தினமே ஏலத் தொகையின் மூன்றில் ஒரு (1/3) பங்கினைச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினை பத்தாவது நாள் திருவிழாவுக்கு முன்னதாகச் செலுத்தி முடிக்க வேண்டும்.

அன்னையின் பணியில்
பொ.அன்பரசன்
செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.
(சி-4478)



**கல்யாண மாலை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா:25சூரிசெவ் 11 இல்
உயரம்: 5’3"
தகைமை/தொழில்:A/L/லண்டன் PR
தொ.இ: B/4305

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 18
உயரம்: 5’8"
தகைமை/தொழில்:BSc/ அரசதொழில்
தொ.இ: B/4306

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 29சூரிசெவ் 11 இல்
உயரம்: 5’7"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/4307

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 46 உயரம்: 5’4"
தகைமை/தொழில்:A/Lலண்டன் PR
தொ.இ: B/4308

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 45
உயரம்: 4’10"
தகைமை/தொழில்:பட்டதாரி/ அரசதொழில்
தொ.இ: G/5169

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 33
உயரம்: 5’6"
தகைமை/தொழில்:A/Lலண்டன் NOT PR
தொ.இ: G/5172

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 55
உயரம்: 5’2"
தகைமை/தொழில்:BA/ விரிவுரையாளர்
தொ.இ: G/5181

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 27
உயரம்: 5’3"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/5183

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# அதீத- அரசியல்மயமாகும் முன்னாள் போர்வலய, தற்போதைய வெடிபொருட் கண்டுபிடிப்புக்கள்

## யாழ்.சாவகச்சேரி பகுதியிலுள்ள ஓர் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுத தொகுதியும் தற்கொலை அங்கியும்



புதிய அரசும் முறை சாராது தனிப் பாணியில் ஒன்றிணைந்த எதிர்க் கட்சியான பெரும்பான்மை சிங்கள கட்சிகளும் ஏனைய அதிருப்திக் குழுக்களுமாக அண்மையில் தமிழ் பெரும்பான்மை வடமாகாணத்திலுள்ள சாவகச்சேரியின் மீசாலைப் பகுதியைச் சேர்ந்த வீடொன்றில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட வெடிபொருள் தொகுதி பற்றிய பிரச்சினையை அதீத விதமாக அரசியல் மயப்படுத்தி வருவது இலங்கை அரசியலில் வேதனைக்குரிய மற்றுமொரு திருப்பமாகியுள்ளது.

தனித்தமிழ் மாகாண நிர்வாகமோ தமிழ் தேசியக் கூட்டமைப்போ அல்லது அதிகாரபூர்வமான அரசாங்க எதிர்க் கட்சி என்ற வகையில் அதன் சிங்கள, தமிழ் கட்சிகளும் மேற்படி விடயம் பற்றி பேச வேண்டுமானால் அவை இத்தனித்துவமான நிகழ்வு பற்றி என்னதான் பேச்போகின்றன என இனிமேல் தான் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

தற்போதைய நிலையில் அது பற்றிய விபரங்கள் வெளிவருவது பெரிதும் தாமதமாகவே காணப்படுகிறது. விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டிருப்பதால் வெளிவரக் கூடிய எந்தவொரு தவறான சிறுதகவலுங்கூட மோசமானதும் தவறானதுமான வழி நடத்தலுக்கு காலாகி, அதுவே சம்பந்தப்பட்ட அல்லது ஆர்வமாயிருக்கும் தரப்புக்களுக்கு உத்வேகமோ குழப்பமோ ஏற்படுத்திவிடலாமென்பதால் பாதுகாப்புச் செயலர் தரப்பிலிருந்து தகவல்கள் தாமதிக்கப்படுவது மன்னிக்கப்படத்தகாததொன்றல்ல!

இதனால் நாட்டிற்கு அச்சுறுத்தல் எதுவுமில்லை என நாட்டு மக்களுக்கு அவர் வழங்கும் உறுதிப்பாடுங்கூட வழமையாக மேற்கொள்ளப்படும் சாதாரண நடைமுறையே என்பதால் இது விளங்கிக் கொள்ளப்பட முடியாத ஒன்றுமல்ல!

இந்த அடிப்படையிலேயே இணைந்த எதிர்க்கட்சியுங்கூட நடைமுறையிலிருக்கும் “‘தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கம்’ தேசிய பாதுகாப்புக்குக் கொடுக்க வேண்டிய அரசியல் முக்கியத்துவத்தை இதற்குக் கொடுக்கவி ல்லை” என்ற பொருளற்ற குற்றச்சாட்டுக்களெதனையும் எழுப்புவதற்குரிய நேரடி ஆதாரம் எதுவுமில்லை. மகிந்த ராஜபக்சவுடைய ஆட்சிக் காலத்திலுங்கூட இவருக்கு முன்னர் பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்சவும் இதுபோன்ற பாதுகாப்பு சம்பந்தப்பட்ட அநேக விடயங்களிலும் அதிகார பூர்வமற்ற அறிக்கைகளையே நாட்டிற்கோ ஊடகங்களுக்கோ வெளியிட்டு வந்திருப்பது சாதாரணமான நடைமுறையாகவே இருந்தது. அப்போதைய பாதுகாப்புச் செயலர் விடயத்தில் அதிகாரம் பற்றிய பொது மக்களது பார்வை வித்தியாசமான ஒன்றாகவே இருந்தது. அதாவது, பாதுகாப்புச் செயலர் ராஜபக்ஷ (கோத்தபாய) அவர்கள் ஜனாதிபதி ராஜபக்ஷ (மகிந்த) அவர்களது மதிப்பிற்குரிய சகோதரராக இருக்கிறார் என்பதே அதுவாகும். அந்த நேரத்தில் இலங்கை இராணுவத்தின் ஓர் ஓய்வுபெற்ற அதிகாரியொருவராகவே அவர் இருந்தாரென்பது மற்றுமொரு ‘பிளஸ்பொயின்ற்’ விடயமாகவும் இருந்தது. இந்த இருவித மகோன்னதத? அதிகார முத்திரைகளுமே? தற்போதைய பாதுகாப்புச் செயலருக்கு (ஹெட்டியாராச்சி)

> **சண்டே லீடர் பத்திரிகையில் “அதீத- அரசியல்மயமாகும்முன்னாள்போர் வலயதற்போதைய வெடிபொருட்கண்டுபிடிப்புக்கள்” எனும் தலைப்பில்என். சத்தியமூர்த்தி எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்.**

கிடையாது. இலங்கையின் இந்த வித அபூர்வமான சந்தர்ப்ப சூழ்நிலைக்குப் புறம்பாக பார்த்தால், வேறு நாடுகளில் பாதுகாப்புச் செயலரது வார்த்தைகளுக்கிருக்கும் முக்கியத்துவம் அமைச்சின் உயர் அந்தஸ்திலுள்ள ஒருவரது அதிகாரத்திற்கோ, பிரதமர் அல்லது ஜனாதிபதியவர்களது அதிகாரத்திற்கோ சமமான ஒன்றாகவே இருக்கிறது. போருக்குப் பின்னர் நிலவும் தற்போதைய நல்லாட்சி சூழ்நிலையில் பாதுகாப்புச் செயலர் ஒருவரது வார்த்தைக்கான மதிப்பு- கௌரவம் என்பது அதே மதிப்பிற்குரிய அதே அந்தஸ்திற்கான ஒன்றே தவிர வேறொன்றுக்குரியதல்ல- அதாவது அதற்கு கூடிய ஒன்றுமல்ல, குறைந்த ஒன்றுமல்ல! தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கத்திற்குள் ‘SLFP’ பங்காளிகளை முற்றுமுழுதாக ஈர்த்து உள்வாங்கிக் கொள்ளும் முயற்சி காரணமாக நிலவுகின்ற அரசியல் பதற்ற சூழ்நிலைகளிலுங்கூட இதுவே நியதியாகக் கொள்ளப்படுவதுடன் முழுமை பெற்ற ஓர் தேசிய ஒருமைப்பாட்டு அரசிலும் இதுவேதான் நிலை!

**அரசியல் யதார்த்தம்**

சில ஊடகங்களின் படி பொலிஸார் கைப்பற்றியிருந்த பொருட்களில் ஒரு தற்கொலை அங்கி அடங்கலாக நான்கு கிளைமோர் கண்ணிவெடிகள், 12 கி.கி. ‘TNT’ வெடி மருந்து கொண்ட மூன்று பொதிகள், இரண்டு பற்றறி தொகுதிகள் மற்றும் 9 மி.மீ அளவிலான 100 சுற்றுரவைகளும் அடங்கும். முன்னாள் போராளியொருவரது மனைவி/ வாழ்க்கைத் துணைவியாக வாழ்ந்து வரும் பெண்ணொருவரே அந்த நபரது போதைப் பொருள் தொடர்பு பற்றி பொலிஸாரை எச்சரித்து உசார்ப்படுத்தியிருந்தார். ஊடகங்கள் சில இவ்விடயம் பற்றி கூடுதல் தகவல்களை வெளியிட்டிருந்த போதிலும் எதிர்பார்த்தது போலவே அவை அதிகார பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டவையாக இல்லை. இந்த மனைவி வழங்கிய தகவலை அவரது ஊடல் பேச்சு என்ற வகையில் தவிர்த்துப் பார்த்தாலும் கூட பொலிஸார் தங்கள் சொந்த முயற்சியால் இதற்கான புதிர் முடிச்சுக்களை அவிழ்த்திருக்கவுங் கூடும். அப்படியானால் அது எப்போது- எப்படி நிகழ்ந்தது என்ற கேள்விக்கே விடை இன்னுமில்லை. அது எப்படியிருந்தாலும் சாவகச்சேரியில் நிகழ்ந்த இந்த தனித்துவமான நிகழ்வானது நாட்டின் பாதுகாப்பிற்கான பொறிமுறையை மீண்டும் முற்றுமுழுதான எச்சரிக்கை நிலைக்கு உசார்ப்படுத்தியிருக்க வேண்டும்.

சிலவேளை இந்த நிலையானது முந்திய பிந்திய அரசுகள் முன்னர் எதிர்கொண்டிருந்த ஒரே பாரிய முனையான ‘புலி எதிர்ப்பு’ என்ற நிலைப்பாட்டின் மீதான இறுக்கங்களை தளர்த்துவதற்கான தருணம் இதுவல்ல என்ற விதமான முடிவிற்கே நாட்டின் அரசியல் தலைமைகளை நெருக்கித் தள்ளுவதாகவும் இருக்கலாம்.

தற்போதைக்கு இச்சம்பவமானது பெரிதும் தொடர்புகளற்றதும் தனித்துவமானதுமான முன்னைய போர்க்கால எச்சசொச்சங்களாக இருக்கலாமென்பதுடன் முன்னைய ராஜபக்ஷக்களது ஆட்சிக்காலத்திலும் நிகழ்ந்த இது போன்ற சம்பவங்கள் அண்மைக் காலங்களாகவோ கிட்டிய அல்லது தொலைதூர எதிர்காலத்திலோகூட நிகழாதென்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. ஆனாலும் தேசிய பாதுகாப்பிற்கான புதிய அரசாங்கத்தின் கடப்பாடென்பது வெறுமனே அரசியல் விவாதத்திற்குரிய ஒரு விடயமாகி விடவில்லை. தள யதார்த்தம் எதுவாக இருந்தாலும் உண்மையில் அரசியல் யதார்த்த நிலையே விவாதத்திற்குரியதாக இருக்கிறது. எனவே போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை இயல்பு நிலைக்குத் திருப்புவது அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பது போன்ற தற்போதைய நடைமுறைச் செயற்பாடுகள் மட்டில் அரசியல் அதிகார சக்தயோ அல்லது நாட்டின் பாதுகாப்பு நிலையோ அல்லது இரண்டும் சேர்ந்தே விழிப்பு நிலையில் இருக்கிறதா? என்பதையிட்டு அரசியல் யதார்த்த நிலை அரசுக்கு நம்பிக் கையூட்டுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். “பொறுப்புக்கூறலுக்கான விசாரணைகளின் நம்பகத்தன்மை”க்கும் “நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வு” மற்றும் “சர்வதேச சமூகத்துடன் அரசினது வாக்குறுதிகள் ஏற்படுத்தவிருக்கும் உறவு நிலைச் சமன்பாடு”களும் மேற்கூறிய அரசின் நிலைப்பாடுகளைப் பொறுத்ததாகவேயிருக்கும்.

**ஆளுநரது அக்கறைகள்**

மேற்படி ஆயுத விடயம் மட்டிலான எதிரணிக்கருத்திற்கு முரணாக அரசு எதுவுமே பேசாத போதிலும் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் போருக்குப் பிந்திய அண்மைக்காலப் புதிய சம்பவமாக இருக்க முடியாதென்றே ஊடகப் பகுப்பாய்வுகள் அடித்து கூறுகின்றன. (தொடரும்)

**தமிழில்-யோகர்**

# மகிந்தவின் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியிடமே தீர்வுகள்

## அதிகார ஆசையை கைவிடக் கோருகிறார் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தினருக்கு இருக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் மாத்திரமே உள்ளதாக சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி விவகாரங்கள் அமைச்சர் எஸ்.பி. திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.**

இதனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் கட்சியினரை மகிந்த ராஜபக்ஷ நேசிப்பவராக இருந்தால், அதிகாரம் மீதான ஆசையை கைவிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உதவ வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

துரதிர்ஷ்டவசமாக முன்னாள் ஜனாதிபதியிடம் அப்படியான நிலைமையை காண முடியவில்லை எனவும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த ராஜபக்ஷ கட்சியையும் கட்சியினரையும் நேசிப்பவராக இருந்தால், நிலைமையை புரிந்து கொண்டு ஒதுங்கியிருந்து மைத்திரிக்கு உதவ வேண்டும்.

அவரிடம்தான், மகிந்த குடும்பத்தினரின் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் உள்ளன.

எனினும் மகிந்த ராஜபக்ஷ இன்னும் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தை கைவிடவில்லை.

இதுதான் இங்குள்ள துரதிர்ஷ்டம்.ஏதோ ஒரு அதிர்ஷ்டம் காரணமாக மைத்திரி வந்து கட்சியின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்றார்.

கட்சியை பொறுப்பேற்றதன் பயனை கட்சிக்கும் கட்சியினருக்கும் கிடைக்க செய்து, கட்சியை பாதுகாக்க வேண்டும் எனில், முன்னாள் ஜனாதிபதி கொஞ்சம் பின்நோக்கி சென்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சியை வழிநடத்திச் செல்ல இடமளிக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரின் பெரும்பாலானவர்கள் மகிந்தவிடமே உள்ளனர். அவர், இதனை தனது மற்றும் தனது குடும்பத்தினரின் பாதுகாப்புக்காக பயன்படுத்தி வருகிறார்.இது சரியா எனவும் எஸ்.பி. திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார். (இ-5)

## வாகன விலை அதிகரிக்காது

வெளிநாட்டு நாணய மாற்றில் ஏற்பட்ட தளம்பல் நிலை காரணமாகவே கடந்த காலங்களில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் விலை அதிகரித்ததே தவிர வற்வரி அதிகரிப்பினால் அல்ல என அகில இலங்கை வாகன இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் மகிந்த சரத்சந்திர தெரிவித்தார்.

மேலும் மே 2 ஆம் திகதிக்கு முன்னர் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு அதிகரிக்கப்பட்ட 15 சதவீத வற்வரி தாக்கம் செலுத்தாது எனவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

நவீன ரக வாகன இறக்குமதியாளர் சங்கம் மற்றும் பயன்படுத்தப்பட்ட வாகன இறக்குமதியாளர் சங்கம் உட்பட்ட பிரதிநிதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் ரவிகருணாநாயக்க ஆகியோரை கடந்த புதன்கிழமை சந்தித்தனர். இதன் போது குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் போது வாகன இறக்குமதி தொடர்பில் எழும் சட்டப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் குழு ஒன்று அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் எமது சங்கத்தினால் வற்வரி அதிகரிப்பினால் ஏற்பட்ட தாக்கத்தினை குறைப்பதற்கு நிலையான முறைமை ஒன்றை கடைப்பிடிப்பதற்கு பிரேரித்திருந்தோம். குறித்த யோசனையை பரிசீலிப்பதாகவும் அவர் உறுதியளித்திருந்தார்.

அந்த வகையில் மே மாதம் 2 ஆம் தகதிக்கு முன்பதாக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு எவ்வித வரி அதிகரிப்பும் ஏற்படுத்தப்படமாட்டாது. ஆனாலும் கடந்த காலங்களில் அனைத்து வாகனங்களுக்குமான விலை 3 இலட்சம் முதல் 4 இலட்சம் வரையில் அதிகரிப்பு எற்பட்டிருந்தது. இதற்கு காரணம் கடந்த காலத்தில் நாணய மாற்றில் ஏற்பட்ட தளம்பல் நிலையாகும். தற்போது காணப்படும் பொருளாதார முறைமையினால் வாகன இறக்குமதி துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## வாரம் ஒரு தகவல்

### அன்பே வெல்லும்

**அமெரிக்காவில் உள்நாட்டுப்போர் நான்கு ஆண்டுகாலம் கடுமையாக நடந்து கொண்டிருந்தது. இது முடிந்ததும் இப் போருக்குக் காரணமாக இருந்தவர்களைத் தூக்கிலிட வேண்டுமென அங்குள்ள முக்கியமானவர்கள் ஜனாதிபதி லிங்கனிடம் வற்புறுத்திக் கூறினார்கள்.**

**இதற்கு பதிலாக லிங்கன் 'தீர்ப்புக் கூறும் பொறுப்பு நமக்கல்ல. அது இறைவனுக்கே. மேலும் பழிக்குப் பதிலாக பழிவாங்குதல் நலம் தரும் செயலல்ல. குற்றவாளிகளிடமும் அன்பையே காட்டுதல் வேண்டும். அதுவே அவர்களை நம்முடன் இணைப்பாக்கும். எனவே அவர்களைத் தூக்கிலிடவோ கொலை செய்யவோ என்னால் நடக்குமென யாரும் எதிர்பார்க்கவேண்டாம்' என அவர் உறுதியாகவும் அழுத்தமாகவும் தெரிவித்து விட்டார்.**

**உள்நாட்டில் போர் எழக் காரணமாக இருந்தவர்களை ஜனாதிபதி லிங்கன் பழிவாங்க மறுத்து விட்டார் என்ற இச் செய்தியைக் கேட்ட மக்கள் வியப்பெய்தினர்.**

**மானிடருக்குள் இவர் ஒரு தெய்வம் என அவரை மனமார வாழ்த்திக் கொண்டனர்.**

**கவிஞர் தே.ப.பெருமாள்**


## 2054 இல் அனைத்து மதங்களும் அழிந்துவிடும்

# பௌத்த மதம் கோலோச்சும்

## நீதியமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)

சிங்கள - பௌத்தவர்களின் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய அநாகரிக தர்மபால வேற்று மதங்களை விமர்சிக்கவோ கொச்சைப்படுத்தவோ இல்லை. மாறாக சிங்கள பௌத்தவர்களே அவ்வாறு நடந்து கொண்டனர் என நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.



2054 இல் அனைத்து மதங்களும் அழிந்துவிடும். பௌத்த தர்மமே கோலோச்சும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அநாகரிக தர்மபாலவின் 83 ஆவது நினைவுதினம் நேற்று முன்தினம் காலை கொழும்பு மருதானையிலுள்ள அநாகரிக தர்மபால நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இங்கு உரையாற்றுகையிலேயே அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

எமது நாடு ஆக்கிரமிப்பாளர்கள் கைகளில் சிக்கியிருந்த காலத்தில் டேவிட் சில்வா என்ற பாதிரியார் நாட்டுக்குள் மிஷனரிகளை வியாபிக்கச் செய்து பௌத்த தர்மத்தை கொச்சைப்படுத்தும் வகையில் நடந்துகொண்டார்.

பௌத்தத்தை பின்பற்றுபவர்கள் கிணற்றுத் தவளைகள் என விமர்சித்தார்.

இதன்போதே பாணந்துறை விவாதத்தை நடத்திய மீகெட்டுவத்தே குணாநந்த தேரர் பௌத்த தர்மத்தின் உயர்வை உலகப் புகழ் பெறச் செய்தார்.

இதனோடு அநாகரிக தர்மபாலவும் சிங்கள பௌத்த எழுச்சியின் போராட்டத்தை ஆரம்பித்தார்.

அவர் மதங்களை கொச்சைப்படுத்தவோ, விமர்சிக்கவோ இல்லை.

மாறாக சிங்கள பௌத்த மக்களே இதனைச் செய்தனர். அவருடைய பேச்சுக்கள் கடுமையானதாக இருந்தன.

கலாநிதி ஜோர்ஜ் பீரிஸ் மலலசேகர ஒரு நிகழ்வில் வைத்து தர்மபாலவை விமர்சித்தார்.

ஜோர்ஜ் என்ற ஆங்கிலப் பெயரையும், பீரிஸ் என்ற போர்த்துகீச பெயரையும் வைத்துள்ளீரே வெட்கமில்லையா என பகிரங்கமாக விமர்சித்தார்.

இதன்பின்னரே மலலசேகர தனது முதல் பெயரை குணபால என சிங்களப் பெயராக மாற்றினார்.

இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் கடுமையான வார்த்தைகளை பிரயோகித்து சிங்கள பௌத்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார்.

இன்று அதன் பலனாகவே சிங்கள பெயர் கள் நிலைத்து நிற்கின்றன.

பௌத்த தர்மம் தொடர்பாக சிங்களகோர டோள்கியோவில் தர்மபால ஆற்றிய உரைகள் தொடர்பாக இன்று வெளிநாடுகளில் ஆராய்ச்சி செய்யப்படுகின்றன.

புத்தர் பிறந்த புத்தகாயாவை இந்தியாவில் அன்று இந்துக்கள் பலாத்காரமாக கைப்பிடித்திருந்தனர்.

இதற்கு எதிராக இந்தியாவில் நீதிமன்றம் சென்று வழக்காடி அதனை மீட்டெடுத்து பௌத்தர்களுக்கு பெற்றுக் கொடுத்தார்.

இந்தியாவின் அரசியலமைப்பை உருவாக்கிய அம்பேத்கர் அநாகரிக தர்மபாலவின் பௌத்த கருதுக்களினால் ஈர்க்கப்பட்டு, பௌத்தத்தை தழுவியதோடு பல இந்தியர்களை பௌத்தர்களாக்கினார்.

உலகில் உள்ள மதங்கள் அனைத்தும் 2054 ஆம் ஆண்டளவில் அழிந்துவிடும்.

ஆனால் பௌத்த தர்மம் கோலோச்சும் என மறைந்த விஞ்ஞானி ஆதர் சி கிளாக் தெரிவித்துள்ளார் என்றார்.(இ-5)

# மே தினம் உணர்த்தும் உண்மை

மே தினம் உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமையையும், உறுதியையும் குறிக்கும் தினம். போராடினால் வெற்றியை அடைய முடியும் என்பதை உறுதிபடுத்திய தினம்.

அமெரிக்காவில் 1890 ஆம் ஆண்டு 8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் ஓய்வு, 8 மணி நேரம் உறக்கம் என்னும் கோரிக்கையை வலியுறுத்தியும், உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கேட்டும் தொழிலாளர்கள் போராடினர். இதை எதிர்த்து அமெரிக்க அரசு, ஈவிரக்கமற்ற தாக்குதலை நடத்தியது. ஏராளமான தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

உலகத் தொழிலாளர்களின் துன்பத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து, முதலாளிகளை ஒழித்துக் கட்டி தொழிலாளர்கள் ஆட்சியில் அமர்ந்தால்தான் அனைத்துவிதமான துன்பங்களும் தீரும் என்றும், முதலாளிகள் உலக வரலாற்றின் வளர்ச்சிப் போக்கையே தடுத்து வருகின்றனர் என்றும், இதனை முடிவுக்குக் கொண்டு வரும் வல்லமை தொழிலாளர்களிடம் மட்டும்தான் உள்ளது என்றும் கூறி இதையெல்லாம் செய்வதற்கு, "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்றும் கூறினார் ஒப்பற்ற பொதுவுடைமைக் கொள்கையை உலகுக்குத் தந்த ஆசான் கால் மார்க்ஸ். இவ்வாறு அவர் கூறி 42 ஆண்டுகள், உலகெங்கும் உள்ள தொழிலாளர்களின் இடைவிடாத போராட்டத்தால் இந்த வெற்றி நிலைநாட்டப்பட்டது.

தொழிலாளர்களின் உழைப்பினால்தான் உலகமே இயங்குகிறது. தொழிலாளர்களின் உழைப்பு இன்றி எந்தப் பொருளும் உருவாவதில்லை என்பதை உணர்ந்தனர். தாம், விலங்குகளைவிட கீழ்த்தரமாக நடத்தப்படுவதையும், உழைப்பின் பலன்களை எல்லாம் அனுபவிக்கும் முதலாளிகள், தொழிலாளர்களை வறுமையிலும் துன்பத்திலும் இருக்கும்படி செய்கின்றனர் என்பதை உணர்ந்து ஒன்றுபட்டு உரிமைக்காகப் போராடினர்.



1886 ஆம் ஆண்டு அமெரிக்க தொழில் நகரங்களான நியூயோர்க், சிகாகோ, பிலடெல்பியா, மில்விக்கி, சின்சினாட்டி, பால்டிமோர் என அமெரிக்கா முழுவதும் 3,50,000 தொழிலாளர்கள் பங்கேற்ற மாபெரும் வேலை நிறுத்தம் தொடங்கியது. இந்த வேலை நிறுத்தத்தில் 1200க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். தொழிலாளர்களின் எழுச்சிமிக்க வேலை நிறுத்தத்தினால், அமெரிக்க பெரு நிறுவனங்கள் மூடப்பட்டன. ரயில் போக்குவரத்து நடைபெறவில்லை. வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற தொழிலாளர் ஊர்வலங்கள் அமெரிக்காவை உலுக்கியது. மிச்சிகனில் மட்டும் 40,000 தொழிலாளர்களும், சிக்காகோவில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலாளர் இயக்கங்களை இணைத்து "அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு" என்ற இயக்கம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்கம் 8 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து தொடர்ந்து போராட்ட இயக்கங்களை நடத்தியது. அத்தோடு மே 1, 1886 அன்று நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. இவ்வியக்கமே மே தினம் பிறப்பதற்கு காரணமாகவும் அமைந்தது.

இவ்வாறு உலகெங்கும் நடந்த போராட்டத்தின் விளைவாக அமெரிக்காவில் இதற்கான வெற்றியை அடைந்தனர். தொழிலாளர்களின் போராட்டத்தால் நிலைகுலைந்த அரசு அவர்களின் கோரிக்கையை 1890 ஆம் ஆண்டு ஏற்றது. தொழிலாளர்களின் இந்த வெற்றியை குறிக்கும் விதத்தில் மே முதல் நாள் தொழிலாளர் தினமாக மே தினம் என்று உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்தியாவில் சென்னையில்தான் முதன் முதலில் மே தினம் கொண்டாடப்பட்டது. பொதுவுடைமைவாதி ம.சிங்காரவேலர் 1923 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றம் அருகே உள்ள கடற்கரையில் தொழிலாளர் தின விழாவைக் கொண்டாடினர்.

இந்தியாவில் முதலாளிகளின் சுரண்டலை எதிர்த்து, தங்கள் உரிமையை அடைவதற்கான போராட்டம் இன்றுவரை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. தொழிலாளர்கள் சாதி, மதம், இனம், மொழி ஆகியவற்றை கடந்து தொழிலாளர்கள் என்னும் உணர்வுடன் ஒன்றுபட்டு போராடினால் வெற்றி கிடைத்தே தீரும் என்பதை மே தின வரலாறு நமக்கு உணர்த்துகின்றது.

## 05.2016 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1328 - ஸ்கொட்லாந்தைத் தனிநாடாக இங்கிலாந்து அங்கீகரித்தது. ஸ்கொட்லாந்து விடுதலைப் போர் முடிவுக்கு வந்தது.
- 1707 - இங்கிலாந்து மற்றும்ஸ்கொட்லாந்து இணைகப்பட்டு பெரிய பிரித்தானியா என்ற ஒரு நாடாகியது.
- 1834 - பிரித்தானியக் குடியேற்ற நாடுகள் அடிமைத் தொழிலை நிறுத்தின.
- 1840 - உலகின் முதலாவது அதிகாரபூர்வ ஒட்டகூடிய தபால்தலை, பென்னி பிளாக் ஐக்கிய இராச்சியத்தில் வெளியிடப்பட்டது.
- 1851 - லண்டனில் பெரும் பொருட்காட்சி விக்டோரியா மகாராணியினால் திறந்து வைக்கப்பட்டது.
- 1925 - சீனாவில் அனைத்து சீன தொழிற்சங்கங்களின கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இதுவே இன்று 134 மில்லியன் உறுப்பினர்களுடன் உள்ள உலகின் மிகப்பெரிய தொழிற்சங்கம் ஆகும்.
- 1940 - கோடை கால ஒலிம்பிக் போட்டிகள் போர் காரணமாக நிறுத்தப்பட்டன.
- 1948 - கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்கப்பட்டது. கிம் உல்-சுங் அதன் முதலாவது ஜனாதிபதியானார்.
- 1950 - குவாம் ஐக்கிய அமெரிக்காவின் பொது நல வாயத்தில் இணைக்கப்பட்டது.
- 1956 - இளம்பிள்ளைவாத நோய்த் தடுப்பு மருந்து அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1961 - கியூபாவை சோசலிச நாடாகவும் தேர்தல் முறையை ஒழித்தும் அதன் பிரதமர் பிடெல் காஸ்ட்ரோ அறிவித்தார்.
- 1987 - இரண்டாம் உலகப் போரின் போது அவுஷவிட்ஸ் வதைமுகாமில் கொல்லப்பட்ட யூதப் பெண்மதகுரு ஈடித் ஸ்டெயின் பாப்பரசரால் புனிதப்படுத்தப்பட்டார்.
- 1993 - இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாச மே தினப் பேரணியில் வைத்து மனிதக் குண்டுதாக் குதலின் மூலம் கொல்லப்பட்டார்.
- 2004 - சைப்பிரஸ், செக் குடியரசு, எஸ்தோனியா, ஹங்கேரி, லாத்வியா, லித்துவேனியா, மால்ட்டா, போலநது, சிலோவாக்கியா, சிலவேனியா ஆகிய ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தன.
- 2006 - புவேர்ட்டோ ரிக்கோ அரசு நாட்டின் பணவீக்கம் காரணமாக பாடசாலைகளையும் அரச நிறுவனங்களையும் மூடியது.
- 2011 - அல்கொய்தா தலைவர் ஓசாமா பின்லேடன் அமெரிக்கப் படையினரால் பாகிஸ்தானில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### பிறப்புக்கள்

- 1951 - கோர்டன் கிரீனிட்ச், மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் துடுப்பாளர்
- 1971 - அஜித் குமார், தமிழ்த் திரைப்பட நடிகர்

### இறப்புகள்

- 1965 - ஜி. என். பாலசுப்பிரமணியம், கர்நாடக இசைப பாடகர், நடிகர் (பி. 1910)
- 1993 - ரணசிங்க பிரேமதாசா, இலங்கை ஜனாதிபதி (பி. 1924)
- 2011-ஓசாமா பின்லேடன், அல்கொய்தா தலைவர் (பி. 1957)

### சிறப்பு நாள்

மே தினம் - உலகத் தொழிலாளர் தினம்

### உலகத் தொழிலாளர் தினம்

மே நாள் அல்லது மே தினம் எனப்படும் உலகத் தொழிலாளர் தினம் ஆண்டு தோறும் மே 1 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுவதாகும். 18 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் - 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வேகமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளி கள் பலரும் நாளொன்றுக்கு 12 முதல் 18 மணி நேரக் கட்டாய வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இதற்கெதிரான குரல்களும் பல்வேறு நாடுகளில் ஆங்காங்கே எழத் துவங்கியது. இதில் குறிப்பிடத்தக்கது இங்கிலாந்தில் தோன்றிய சாசன இயக்கம் (chartists). சாசன இயக்கம் 6 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து தொடர் இயக்கங்களை நடத்தியது. அதில் குறிப்பிடத்தக்கது 10 மணி நேர வேலை கோரிக்கை.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 45 | 70 | 40 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 65 | 90 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 90 | 60 | 90 | 100 | 70 |
| தக்காளி | 130 | 100 | 120 | 80 | 100 | 140 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 45 | 50 | 50 | 60 | 50 |
| கோவா | 80 | 100 | 70 | 80 | 80 | 100 | 70 |
| கரட் | 120 | 100 | 70 | 80 | 80 | 120 | 80 |
| பூசணி | 30 | 20 | 15 | 40 | 50 | 40 | 40 |
| புடோல் | 70 | 30 | 30 | 60 | 40 | 80 | 50 |
| வாழைக்காய் | 30 | 100 | 25 | 40 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 100 | 80 | 100 | 140 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 90 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 160 | 100 | 120 | 100 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 40 | 80 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | — | 100 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 80 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 130 | 100 | 100 | 120 | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 80 | 80 | 70 | 220 | 80 |
| கறிமிளகாய் | 80 | 100 | 50 | 80 | 80 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 250 | 400 | 150 | 250 | 200 | 400 | 250 |
| போஞ்சி | 180 | 200 | 100 | 160 | 160 | 300 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 20 | 35 | 50 | — | 60 | 70 |
| கீரை - 1பிடி | 20 | 50 | 20 | 30 | 40 | 20 | 20 |
| தேசிக்காய் | 400 | 400 | 300 | 400 | 300 | 500 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 30-50 | 15-30 | 50 | 35 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 120 | 300 | 100 | 160 | 140 | 120 | 150 |
| வெங்காயப்பூ | — | 200 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 100 | 40 | 70 | 40 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 20 | 50 | 20 | 30 | 40 | 30 | 35 |
| வல்லாரை | 10 | 50 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | — | — | — | — | — |

# ஒட்டுமொத்த உழைக்கும் வர்க்கத்தினரின் அபிலாஷைகளை யதார்த்தமாக்குவோம்

## ஜனாதிபதி மே தினச் செய்தியில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**புதிய பொருளாதார அரசியல் அவகாசத்தினுள் காலடி வைத்துள்ள தற்போதைய சூழலில், மலர்ந்துள்ள இம் மே தினத்தில் ஒட்டுமொத்த உழைக்கும் வர்க்கத்தினரின் அபிலாஷைகளை யதார்த்தமாக்குவதற்கு குறிக்கோளுடன் செயற்பட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ள மே தின செய்தியில் தெரிவித்துள்ளார்.**

உலகெங்கிலும் உள்ள பாட்டாளி மக்கள் இன்று தம் கரங்களில் ஏந்தும் சிவப்பு நிறக் கொடி தொழிலாளர்கள் ஒற்றுமையினதும் தொழிலாளர் வெற்றியினதும் நீண்ட வரலாற்றைக் குறித்து நிற்கின்றது.

உலகவாழ் பாட்டாளி மக்கள் என்ற ரீதியில் நெற்றி வியர்வை சிந்தி பெற்றுக் கொள்ளப்பட்ட வெற்றி மே முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது.

தொழிற்சாலையில், வேலைத்தளத்தில், பண்ணையில் அல்லது வேறெந்த இடத்திலும் வியர்வை சிந்தி தமது உழைப்பினை வழங்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் விடும் பெருமூச்சு மற்றும் துயரம் ஆகியன மே தினத்தின் உயிர் மூச்சாகக் கருதப்படுகிறது.

தொழிலாளர்களின் ஊழியம் எனும் சிறிய பற்களைக் கொண்ட சில்லுகளின் கூட்டுச் செயற்பாட்டினூடாகவே உற்பத்தி எனும் பாரிய இயந்திரம் தொழிற்படுகிறது.

உலகம் முன்னேறிச் செல்லும் ஒவ்வொரு கட்டத்திலும் எவரேனும் ஓர் உழைப்பாளி சிந்தும் வியர்வை மற்றும் கண்ணீர் ஆகியன அடையாளமாக அமைகின்றது.

மே தினத்தை அனுஷ்டிப்பதன் மூலமாக உலகம் இவ் வியர்வைக்கும் கண்ணீருக்குமே தனது கௌரவத்தை தெரிவிக்கின்றது.

மே தினத்தன்று வரிசைப்படுத்தப்படும் ஒவ்வொரு கொடியும் இரத்தத்தினால் உயிர்ப்பிக்கப்படும் ஆச்சரியம் நிறைந்த வியர்வை மற்றும் கண்ணீருக்கு நன்றி தெரிவிப்பதற்கே மேலுயர்த்தப்படுகிறது.



1956 இல் நாம் வென்றெடுத்த மக்கள் வெற்றியின் பின்னர் எமது பாட்டாளி மக்களின் தொழில்சார் உரிமைகளை வென்றெடுக்கக் கூடிய வினைத்திறன் மிக்க பாதையில் நாம் இன்று தடம் பதித்துள்ளோம்.

2015ல் நாம் அடைந்த புதிய ஜனநாயக சுதந்திரப் பிரவேசத்தினூடே, புதிய பொருளாதார, அரசியல் அவகாசத்திற்குள் காலடி வைத்துள்ள தற்போதைய சூழலில், மலர்ந்துள்ள இம் மே தினத்தில் ஒட்டுமொத்த உழைக்கும் வர்க்கத்தினரின் அபிலாஷைகளை பெற்றுக்கொண்ட வெற்றியினை யதார்த்தமாக்குவதற்கு அர்ப்பணிப்பதனை, எமது மே தினத்தின் குறிக்கோளாகக் கொள்வோம்.

ஒட்டுமொத்த பாட்டாளி மக்களினதும் வெற்றிகளும் உரிமைகளும் பாதுகாக்கத்தக்க ஒரு மே தினம் மலரட்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## வாழ்க்கைப் போராட்டத்தை வெற்றி கொள்ள புதிய உத்வேகம் பிறக்கட்டும்- பிரதமர் வாழ்த்து

தொழிலாளர் வர்க்கத்தின் வேலைத்தளப் போராட்டத்தைப் போன்றே வாழ்க்கைப் போராட்டத்தையும் வெற்றிகொள்ள இந்த மே தினமானது புதிய உத்வேகத்தை வழங்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது மே தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் சமூக மேம்பாட்டிற்காக வியர்வை சிந்தி, ஊழியத்தை அர்ப்பணித்து தமது பங்களிப்பினை வழங்குகின்ற வேலைசெய்யும் மக்களின் தினமாகும்.

தொழிலாளர் வர்க்கத்தினர் ஒட்டுமொத்த சமூகத்துக்கும் ஆற்றும் பணிக்கு நன்றியைத் தெரிவிக்கின்ற, அவர்களது ஊழியப் பங்களிப்பினை மதிப்பீட்டுக்கு உட்படுத்துகின்ற, அதற்கு உரிய பெறுமானத்தை வழங்குகின்ற, அவர்களது நலனுக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற, அதற்கான ஒழுங்குமுறையான கலந்துரையாடல்கள் ஆரம்பமாகின்ற ஒரு நாளாக மேதினத்தை மாற்றிக் கொள்வது நம் அனைவரினதும் பொறுப்பாகும்.



தொழிலாளர் வர்க்கத்தினருக்காகக் குரல் கொடுக்கும் தொழிற் சங்கங்கள், தமது அரசியல் தேவைகளை விட வேலைசெய்யும் மக்களின் உரிமைகள் மற்றும் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி செயற்படுவது தொழிலாளர் வர்க்கத்தினதும், நாட்டினதும் நலனுக்குக் காரணமாய் அமையும். அதற்குத் தேவையான பின்புலத்தை உருவாக்கிக் கொடுப்பது அரசினது அபிலாசையாகக்காணப்படுகிறது. தொழிலாளர் வர்க்கத்தின் வேலைத்தளப் போராட்டத்தைப் போன்றே வாழ்க்கைப் போராட்டத் தையும் வெற்றிகொள்ள இந்த மே தினமானது புதிய உத்வேகத்தை வழங்கும் என எதிர்பார்ப்பதோடு அவர்களுக்கு வெற்றிகிடைக்கட்டும் எனப் பிரார்த்திக்கிறேன் என்றும் பிரதமர் தனது செய்தியில் தெரிவித்துள்ளார். (இ-5)

## மே தினத்தன்று கிருலப்பனையில் திருடர்கள் பலரை கைது செய்யலாம்

### அமைச்சர் ஹரீன் தெரிவிப்பு

விசேட நிதி குற்றப்புலனாய்வு பிரிவின் கிளை காரியாலயமொன்றை மே தினத்தன்று கிருலப்பனையில் திறந்தால் பொது எதிரணியில் மறைந்துள்ள திருடர்கள் பலரை கைது செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என டிஜிற்றல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பொது எதிரணியுடன் நேருக்கு நேர் மோதுவதற்கு நாம் தயாராக உள்ளோம். மே தினத்திற்கு இலட்சக்கணக்கானோரை நாம் களமிறக்குவோம். நாம் மோதுவதற்கு தயார். பொது எதிரணியினர் தயாரா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின கூட்டத்திற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்வாரா? என்பது தொடர்பில் எந்தவொரு தகவல்களும் கிடையாது. இருந்தாலும் மறைமுக பிரமுகராக சில வேளைகளில் கலந்து கொள்ள முடியும் என் றும் அவர் சுட்டிக் காட்டினார். புறக்கோட்டையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான



சிறி கொத் தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

## மே தினம்

மே ஒன்று
உழைப்பாளர்-தம்
உரிமைக்கு
குரல் கொடுக்கும் நாள் இன்று
உழைப்பாளப் பெருந்தகைகளே...
உழைப்புக்கேற்ற
ஊதியம் உங்களுக்கு வேண்டும்

உலகெங்கும்
உழைப்பாளர் இருப்பதால் தான்
நாடுகள் தோறும்
அபிவிருத்தியில் உயர்கிறது
தொழிலாளர் வர்க்கத்தை
மதியாத நாடு
பொருளாதாரத்தில் சரிந்துமே போகும்...

உழைப்பாளருக்கு
தினந்தோறும் கிடைக்காத நீதி
ஆண்டுக்கு ஒருமுறை
கடவினால் கிடைக்குமோ...?
கட்சிகள்
பல தம் கொடிகளை உயர்த்தி
அரசியல் கொள்கைகள்
பரப்புவர் இன்று...

மேடைகள் போட்டு
உரிமை முழக்கமும் செய்வர்
உழைப்பாளர் உரிமையே
உலகினில் பெரிதென்று...
மறுநாள்
"குடிகாரன் பேச்சு
விடிந்தால் போச்சென்பர்"
இந்நிலையே இங்கெமக்கு....

"தொழிலாளி வர்க்கம்
மாடாய் உழைத்து ஓடாய் தேய"
முதலாளி வர்க்கம்
அவர்களை சுரண்டியே வாழுது...
அதிகார வர்க்கமே....!
உழைப்பவர் யாவரும்
உலகினில். உயர்ந்திட
அவர் தம் உரிமையை
உலகினில் உயர்த்துங்கள்

*யாழ்.உரும்மையூர்*
*து.திலக்*

விடியலை நோக்கி
விழி தொலைக்காதவன்
உழைத்து உழைத்து
விடியலை தேடுபவன்

பிறர் உழைப்பில்
பிழைக்க பிடிக்காதவன்
உழைப்பாலே உயர
துடிப்பவன்

உழைப்புக்கு மட்டுமே
முதலானவன்
பிறர் உழைப்பில்
ஒன்றும் தின்னாதவன்

என் பார்வையில்
தாயும் நீயும் ஒன்று தான்
தாய் ரத்தத்தை பாலாக்குகிறாள்.. நீ
அதை வியர்வையாக்குகிறாய்

நீ உயர்த்திய தோளால்
உயர்ந்திருக்கிறது சமுதாயம்
நீ உயர்த்திய கரங்களால்
மலர்ந்திருக்கிறது மறுமலர்ச்சி

உன் வியர்வை நாற்றம்
அது உன் நாட்டை
மணக்க செய்யும்
மகரந்த துளிகள்

உழைப்புக்கு ஓய்வு
கொடுத்து விட்டால்
விடியலை காண முடியாது
எந்த ஒரு தேசமும்
எந்த ஒரு ம்னிதனும்.

*வன்னி மைந்தன்*
*முறிகண்டி லக்சிதரன்*

# கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு துக்கதினமாக இம்முறை தொழிலாளர் தினம் அனுஷ்டிக்கப்படும்

## முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கும் த.தே.கூட்டமைப்பினருக்குமிடையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் மீனவர்கள் தெரிவிப்பு





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட மனவர்கள் தமது பிரச்சினைகள் தீர்க்கப்படாமையை அடுத்து இமமுறை மேதினத்தை கறுப்புத் தினமாக கொண்டாடப் போவதாக கூறியதுடன்இராணுவம் கடற்படையினர் ஆகியோர் தமது தொழிலிடங்களை கையகப்படுத்தி வைத்திருப்பதாகவும் அவற்றை மீட்டுத் தருமாறும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கும் இடையில் நேற்றுகாலை 9.30 மணியளவில்முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன்தலைமையில்இடம்பெற்றது.

இந் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா, செல்வம் அடைக்கலநாதன், வைத்திய கலாநிதி சிவமோகன், சாள்ஸ் நிர்மலநாதன்,வடக்கு மாகாண சபை பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், சிவநேசன, முல்லைத்தீவு மாவட்ட மீனவர் சமாச தலைவர் மரியதாஸ், மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.இதன்போதே முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இங்கு கலந்து கொண்ட மீனவர்கள் வெளி மாவட்ட மீனவர்களால் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்துகூறியதோடு சட்டத்தை சரிவர கடைப்பிடிக்காமையாலேயே தாம் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளர் சட்டத்தை சரிவர நடைமுறைப்படுத்துவதில்லை எனவும் அவர் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் முன் வைத்து அவரை நீக்கி புதிய ஒருவரை நியமித்து சட்டத்தை சரிவர நடைமுறைப்படுத்தினாலேயே பிரச்சினைகளை தீர்க்க முடியுமென தெரிவித்தனர்.

இதைவிட கடந்த 2 ஆம் திகதிமுல்லைத்தீவுக்கு வருகை தந்த மீன்பிடி அமைச்சர் பல்வேறு முடிவுகளை எடுத்த போதும் இதுவரை எந்த தீர்மானங்களும் நடைமுறைப்படுத்தப்படவில்லையெனவும் குற்றம்சாட்டினர்.

அதைவிட .கடலட்டை தொழில் காரணமாக தாம் கடுமையாக பாதிக்கப்படுவதாகவும் அத்தொழிலானது 13 மைல்தூரத்திற்கு மேல் தான் செய்ய முடியும் எனவும் ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்தவரை 13 மைல்களுக்கு அப்பால் ஆழ் கடலெனவும் இந்ததொழில் முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்தவரை செய்ய முடியாது எனவும் கூறினார். ஆனால் இந்த அனுமதியை பெறுபவர்கள் இந்த தொழிலை இரண்டு மூன்று கிலோ மீட்டருக்குள் செய்வதனால் தமது தொழில் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஆதலால் முல்லைத்தீவு மீனவர்கள் எக்காலத்திலும் கடலட்டை தொழில் செய்யவில்லை. எனவே இந்த தொழிலை முற்றாக தடை செய்யுமாறும் கோரப்பட்டது.

இதனை விட முல்லைத்தீவு மாவட்டத்தில் கரை வலைப்பாடுகளில் வெளி மாவட்டத்தவர்களின் தொழில் செய்ய முடியாத நிலை காணபடுவதாகவும் இராணுவம், கடற்படை, பொலிஸார்ஆகியோரின் உதவியுடன் எமது தொழிலை முற்றுமுழுதாக மடக்கி சிங்களவர்களுக்கு ஆதரவு வழங்கி வருவதாகவும் தாம் இம்முறை தொழிலாளர் தினத்தை கறுப்பு கொடிகளை பறக்க விட்டு துக்க தினமாக அனுஷ்டிக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதனைவிட இராணுவத்தினர், கடற்படையினர் தமது தொழிலிடங்களை கையகப்படுத்தி வைத்திருப்பதாகவும் அவற்றை மீட்டுத் தருமாறும் கோரிக்கை விடுததனர். மூன்று மணித்தியாலங்கள் இடம்பெற்ற இச்சந்திப்பில் மக்களின் பல்வேறு குறைகளையும் கேட்டறிந்து கொண்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் சார்பாக எம்.ஏ. சுமந்திரன் பாராளுமன்றத்தில் ஒத்திவைப்பு பிரேரணை ஒன்றை முன் வைத்து நாங்கள் ஒருநாள் முழுவதும் முல்லைத்தீவு மாவட்ட மீனவர் பிரச்சினை சம்பந்தமாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரச்சினைகளை எடுத்து கலந்துரையாடி தீர்வொன்றைப் பெற்றுத் தருவ தாகவும் உறுதியளித்தார். (2-281)




## வருடாந்த பொதுக்கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட அரச சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய வருடாந்தப் பொதுக் கூட்டம்நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன், கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ஜே.கில்பேட் குணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.


கௌரவ விருந்தினர்களாக கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், கண்டாவளைப்பிரதேசசெயலர் தி.முகுந்தன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி ப.ஜெயராணி, பூநகரி பிரதேச செயலர் ச.கிஸ்ணேந்திரன், யாழ்.மாவட்ட அ.சே.ஓ.ஊ.நநிதியத்தலைவர்வி.சக்திவேல், வவுனியாமாவட்ட அ.சே.ஓ.ஊ.ந.நிதியத்தலைவர்எஸ்.சுப்பிரமணியம் ஆகியோர் பங்கு பற்றி நிகழ்வைச் சிறப்பிக்கவுள்ளனர்.

இதன் போது கிளிநொச்சி மாவட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவும் வருடாந்தக் கூட்டறிக்கை, செயற்பாட்டறிக்கை, வருடாந்தக் கணக்கறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படவுள்ளன.

எனவேகிளிநொச்சிமாவட்ட கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச அரச சேவை ஓ.ஊ.ந. நிதிய உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளு மாறு கிளிநொச்சி மாவட்ட அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தினர் அறிவித்துள்ளனர்.(2-254)

# 2 1/2 வருடங்களில் சுகாதாரத்துறை பாரிய அபிவிருத்தி அடைந்துள்ளது

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு



( குருமன்காடு )

கடந்த இரண்டரை வருடங்களில் வடக்கு மாகாணத்தின் சுகாதாரத்துறை பாரிய அபிவிருத்தி அடைந்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா செட்டிகுளத்தில் நேற்று முன்தினம் ஆயுர்வேத வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தெரிவித்ததாவது,

வடக்கில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை உருவாக்கப்பட்டு இரண்டரை வருடங்கள் முடிவடைந்துள்ளது. கடந்த காலங்களில் சுகாதாரத்துறையின் அபிவிருத்தியில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை மறுக்க முடியாது.

யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் சுகாதார சேவையின் தேவையும் அதிகரித்துள்ளது. மாகாண சபைக்கு நிதிப்பற்றாக்குறை மற்றும் வேறுபல நிர்வாக சிக்கல்கள் உள்ளபோதும் மாகாண மத்திய அமைச்சுகளின் நிதியை கொண்டு இயலுமானவரை சுகாதார துறையை அபிவிருத்தி செய்துள்ளோம்.

குறிப்பாக சுதேச மருத்துவத்துறையை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவையுள்ளது. பலநூற்றாண்டுகளுக்கு முன்னர் சித்தர்களாலும், முனிவர்களாலும் பயன்படுத்தப்பட்ட சித்த மருத்துவம் எமது பாரம்பரிய வைத்திய முறையாகும். இதனை அழயவிடாது பாதுகாக்க வேணடியது எமது கடமையாகும். இதனடிப்படையில் மேலைத்தேய மருத்துவத்திற்கு இணையாக சுதேச மருத்துவத்துறையையும் அபிவிருத்தி செய்து வருகின்றோம். சித்தமருத்துவத்தின் தலைநகராக கிளிநொசசி மாவட்டம் எதிர்காலத்தில் விளங்கும். இதற்கான நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றோம்.

100 ஏக்கர் காணி கிளிநொச்சி கல்மடு நகரில் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 75 ஏக்கரில் மூலிகைத்தோட்டமும், மிகுதியாகவுள்ள 25 ஏக்கரில்மூலிகை மருந்துகளை தயாரிக்கும் மருந்து தொழிற்சாலையும் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ்நாடு சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் ஆலோசனைகளும் பெற்றுக்கொள்ளவுள்ளதாக தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் குழுக்களின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய செல்வம் அடைக்கலநாதன், முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோ, வடக்கு மாகாண சபை உறுபபினர் இ.இந்திரராஜா, மாகாண சுதேச மருத்துவ ஆணையாளர் திருமதி சி.துரைரட்னம், செட்டிகுளம் பிரதேச சபையின் முன்னைநாள் உப தலைவர் சந்திரமோகன், பிரதேச சபையின் முன்னைநாள் உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதி களும் கலந்துகொண்டனர்.(2-250)

# மேதின கூட்டங்கள்

## கிளிநொச்சியில்...

வடக்கு கூட்டுறவாளர்களால் கொண்டாடப்படவுள்ள மேதினப் பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் கட்சி பேதங்களற்று அனைவரையும் அணி திரளுமாறு கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையில்,

வடமாகாண கூட்டுறவு அமைப்புகளும் கூட்டுறவுத் தொழிற் சங்கங்களும் இணைந்து இம்முறை மேதினத்தை கிளிநொச்சியில் மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதற்குத் தீர்மானித்துள்ளன.

ஒரு காலத்தில் மிகச்சிறப்பாக இயங்கிவந்த கூட்டுறவு அமைபபுகள் மூன்று தசாப்தகாலப் போர் காரணமாகவும், அரசியல் தலையீடுகள் காரணமாகவும், திறந்த பொருளாதார முறைமைக்கு முகம்கொடுக்க முடியாததன் காரணமாகவும் இப்போது பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றன.

கூட்டுறவுத்துறை மீண்டும் மிடுக்கோடு நிமிர்ந்தெழ வேண்டும். அதற்குரிய நம்பிக்கையைக் கூட்டுறவாளர்களுக்கு ஊட்டும் வதமாக மேதினக் கொண்டாட்டத்துக்குப் பலம் சேர்ப்போம். மே முதலாம் திகதி கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் இருந்து பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ள மேதினப் பேரணியிலும் கிளிநொச்சி கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள மே தினக கூட்டத்திலும் கூட்டுறவாளர்கள் அனைவரும் அவர்களுக்கு அனுசரணையாகப் பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் கட்சி பேதங்களற்று அணிதிரள்வோம் என்று குறிப்பிட்டுள்ளார். (2)

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், பொது அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், மகளிர் அமைபபுகள் ஆகியவை ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள தொழிலாளர் தினத்துக்கான பொதுக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு மன்னார் நகர மண்டபதில இடம்பெறவுள்ள மாபெரும் பொதுக் கூட்டம், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதன்போது சிறப்பு வருகையாளர்களின் எழுச்சியுரைகளும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. குறித்த நிகழ்வில் அனைவரையும் தொழிலுறவு உரிமையுடன் கலந்து கொள்ளுமாறு மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அழைபபு விடுத்துள்ளது. (2)

> சுவட்டத்தில் சுவடிநின்று சுவிப் பிதற்றலின்றி
> நாட்டத்தில் கொள்ளாரடி – கிளியே
> நாளில் மறப்பாரடி. – பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# உழைப்பாளர் தினத்தில் உழைப்பை வலியுறுத்துவோம்

இன்று மே முதலாம் திகதி தொழிலாளர் தினம். அடிமைப்பட்டு வேலை செய்தவர்கள் உரிமை பெற்ற நாளின் அடையாள தினம் இது.

தொழிலாளர்களும் மனிதர்கள் என்ற உண்மையை பன்னெடுங் காலத்துக்கு முன்னர் முதலாளித்துவ வர்க்கம் ஏற்றுக்கொண்டமை இந்த உலகில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

இந்த மாறுதல்களைத் தந்த மே ஒன்றில் தொழிலாளர்கள் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றதாயினும் கால அசைவில் மே ஒன்று தொழிலாளர்கள் சார்ந்த பல்வேறு விடயங்களை முன்வைத்து மேற்கொள்ளப்பட வேண்டியதாயுள்ளது.

உலக தொழிலாளர்தினம் அனுஷ்டிக்கப்படுகின்ற இந்த வேளை, இன்றைய எங்கள் இளம் சமூகத்தில் வேலை செய்ய விருப்பமில்லாத இளைஞர் படை ஒன்று உருவாகி வருவதைக் காணமுடிகின்றது.

முன்னைய காலத்தில் தொழிலாளர்களிடம் இருந்து கடுமையாக உழைப்பு வாங்கப்பட்டது. அவர்கள் ஓய்வு உறக்கமின்றிப் பெரும் கஷ்டங்களை அனுபவித்தனர். இதனால் அவர்கள் உரிமை கேட்டுப் போராடினர். அந்த உரிமைகள் கிடைத்தன.

எனினும் இன்றைய நிலைமை அதிலும் குறிப்பாக எங்கள் தமிழினத்தின் நிலைமை தமது உழைப்பை வழங்குவதற்குப் தயாரில்லாத ஓர் இளம் சமூகத்தை உருவாக்கவுள்ளது:

வேலை செய்வதற்குத் தயாரில்லை என்பது அடிப்படை பொருளாதாரத்தையே ஈடாட்டம் காணச் செய்வதாகும்.

உலக நாடுகளில் கடுமையாக உழைத்தால் மட்டுமே வாழமுடியும் என்று சூழ்நிலை இருக்கையில்,

எங்கள் மண்ணில் உழைப்பதற்கு தயாரில்லை; தகுதியான உத்தியோகம் இல்லை என்றால் வேலை செய்யமாட்டேன் என்று அடம்பிடித்தல் என்ற நிலைமைகள் ஒரு உழைப்பாளர் படை தங்கியிருக்கும் ஆளணியாக மாறுவதைக் காட்டுகிறது. இது மிகப்பெரிய இழப்புகளையும் தோல்விகளையும் சமூக சீரழிவையும் தரக் கூடியது.

எனவே இவற்றில் இருந்து எங்கள் உழைப்பாளர் படையான இளம் சமூகத்தை நல்வழிப்படுத்த வேண்டும்.

மற்றையவர்களின் உழைப்பில் தங்கியிருத்தல் என்பது ஏமாற்றத்தையும் சோம்பல்தனத்தையும் தரக் கூடியது என்பதால், எங்கள் மண்ணில் யார் யார் எல்லாம் உழைப்பாளர் தினத்தை அனுஷ்டிக்கிறார்களோ அவர்கள் உழைப்பின் அவசியத்தையும் வலியுறுத்த வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

அரச பணி மட்டுமே கௌரவத்துக்குரியது என்ற நிலைமையை மாற்றி தனியார் துறை, தனிமுயற்சி, கூட்டுமுயற்சி உள்ளிட்ட தொழில்துறைகளிலும் நாட்டம் கொள்வது கட்டாயமானதாகும்.

இந்த உண்மைகளை எடுத்துரைத்து எங்கள் இளம் சமூகத்தை வேலை செய்யும் வர்க்கமாக மாற்றுகின்ற ஒரு நாளாக மே தினத்தின் போக்கை திசை திருப்ப வேண்டிய தேவை உள்ளது என்பதால் உழைப்பாளர்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தல் என்பதோடு கடுமையாக உழைத்தல் என்பதற்காகவும் குரல் கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

இதை இன்றைய மே தினத்தில் ஒலிக்கச் செய்வது அனைவரதும் கடமையும் பொறுப்பும் ஆகும்.

# பேருந்தை மறித்து ரவுடிகள் அட்டகாசம்

## நடத்துநர், பயணி மீது தாக்குதல்

கட்டுக்கடங்காமல் ரவுடிகளிகளின் அடாவடித்தனம் தொடர்ந்து செல்வதாக பொது மக்களினால் விசனம் வெளியிடப்படுகிறது. பருத்தித்துறையில் இருந்து ஆழியவளை நோக்கிச் சென்ற தனியார் பேருந்தை நாகர்கோவில் சந்தியில் மறித்த ரவுடிக் கும்பல் நடத்துநரை இழுத்து விழுத்தி தாக்கியதுடன் தட்டிக் கேட்ட இளைஞனையும் கொட்டன்களால் தாக்கியது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

பருத்தித்துறையிலிருந்து ஆழியவளைநோக்கிச்சென்று கொண்டிருந்ததனியார்பேருந்து மாலை 6 மணியளவில் நாகர்கோவில் சந்தியை நெருங்கிய போது சந்தியில் 20-25 வரையிலான இளைஞர் குழு ஒன்று படுத்திருந்தது.

பேருந்துச்சாரதிபேருந்தை நிறுத்திய போது கொட்டன்களுடன் பேருந்தின் இரு கதவுகள் ஊடாகவும் ஏறி உடத்துறையைச் சேர்ந்தவர்கள் இருந்தால் இறங்கு மாறு உரத்தக் குரலில் சத்தமிட்டது.

அவர்களை ஏன் இறங்கச் சொல்கிறீர்கள் எனக் கேட்ட நடத்துநரை பிடித்து இழுத்து வீழ்த்தி சேட்டைக் கிழித்ததுடன் தொலைபேசியையும்பறித்துஎறிந்துஅவரின் தங்கச் சங்கிலியையும் அறுத்து அட்டகாசம் புரிந்தனர்.

இதனை பேருந்துக்குள் இருந்துஅவதானித்துக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நடத்துநரை ஏன் அடிக்கிறீர்கள் எனக் கேட்ட போது அவரின் தலையில் கொட்டன்களால் தாக்கினர் அக் கும்பல். இதனால் அவர் மயங்கி விழுந்தார். வீழ்ந்தவரையும் சரமாரியாகத் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தனையும் முடிய இரவு பேருந்தை மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் நிறுத்திய சாரதி மருதங்கேணிப்பொலிஸாருக்கு விடயத்தைக் கூறியதுடன் காயமடைந்த வரை மருதங்கேணிவைத்திய சாலையில் அனுமதித்தனர். அங்கிருந்து அவர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவ்வளவு நடைபெற்றும் பொலிஸார் எதுவித நடவடிக்கையும் எடுக்க வில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து நேற்று சனிக்கிழமை காலையில் இருந்து வடமராட்சிக் கிழக்கிற்கான சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் தமது சேவையினை பகிஷ்கரிப்புச் செய்தன. தமக்கும் பேருந்துப் பயணிகளுக்கும் பாதுகாப்பில்லை என்பதால் பேருந்து சேவையில் ஈடுபட்முடி யாது என அவர்கள் கூறினர்.

இது விடயம் புலனாய்வுப் பிரிவு மூலம் மேலிடத்திற்கு தெரியவரவே பொலிஸார் உடனடியாக தலையிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த நபரை பருத்தித்துறை வைத்தியசாலைக்குச் சென்று பொலிஸார் பார்வையிட்டுடன்தனியார்பேருந்து சங்கத்தினருடனும் கலந்துரையாடினர்.

பிரதேச செயலர், பொலிஸார் இணைந்து தமக்கு எவ்வித இடையூறும் விளைவிக்கப்படாது என உறுதி மொழி கொடுக்கப்பட்டதாக தனியார் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து நண்பகலிலிருந்து பேருந்து சேவையில்ஈடுபடவுள்ளதாகதெரிவித்த அவர்கள் ஏதேனும் இடையூறுகள் ஏற்பட்டால் பொலிஸாரும் பிரதேச செயலருமே பொறுப்பேற்க வேண்டும் எனவும் கூறினர். (இ-60)


# மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5 மணி வரை யாழ் பிரதேசத்தில் சங்கத்தானை, டச்சு றோட், அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு, சோளாவத்தை, வங்களாவடி, மண்கும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம், மண்டைதீவு கடற் படை முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில கோவில குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, வெளிக் குளம், கோவில் புதுக்குளம், சமணன்குளம், கூமரசங்குளம், ஆசிகுளம், தெற்கிலுப்பைக்குளம், கல்நாட்டினகுளம், எல்லப்ப மருதங்குளம், குகன் நகர், ஊர்மிளா கோட்டம், ஸ்ரீரங்கன் ஆலை, நல்லதம்பி ஆலை, தெய்வேந்திரம் ஆலை பிரதேசங்களில் மின் தடைப்படும். (இ-9)

## குருதேவரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஸ்ரீமத் பகவத்கீதை வினாவிடைப் போட்டி (பாடசாலை மாணவர்களுக்கானது)

வினா இல.01
(அத்.1.ஸ்லோ. 1)
ஸ்ரீமத் பகவத்கீதை உபதேசம் செய்யப்பட்ட இடம்?
விடை: குருஷேத்ரப் போர்க்களம்
வினா இல.02
(அத்.2 ஸ்லோ 1)
ஸ்ரீமத் பகவத்கீதை மனித வாழ்வில் என்றும் பயன் தருவது. இதை ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு உபதேசித்த நோக்கம் என்ன?
விடை: அர்ஜுனனுக்கு ஏற்பட்ட மனக்குழப்பத்தை தீர்த்தல்

# நாம் பலருக்கு மே தினத்திற்கு வழிவகுப்போமா?



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

களைப்பில் மனிதன் வளைந்தான். சளைக்காமல் பலர் விழித்தனர். ஒதுங்காமல் இன்னும் பலர் கொதித்தனர். நுழைந்தது கேள்விகள். திரண் டனர் பலர் திக்கெங்கும். விளைந்தது போராட்டம். சிறை உக்கிரமானது சர்வதேசப் புரட்சி. உழைக்கும் நேரம் எட்டு மணியாக்கி உரிமையை போராடி வென்றனர் தொழிலாளர்கள்.

இன்று உலக தொழிலாளர் தினம். உலகத்தை இயங்கவைக்கும்உன்னத உழைப்பாளியின் திருநாள் என்று கூட நாம் கூறலாம். கத்தோலிக்க திருச்சபையின படி தொழிலாளர்களுக்கு பாதுகா

## பரமபிதா காட்டிய பாதை

வலராக புனித சூசையப்பர் - யோசேப் இருக்கிறார். 1955ம் ஆண்டு திருத் தந்தை பன்னிரெண்டாம் பத்திநாதர் மே மாதம் முதல் நாளை தொழிலாளர்களின் பாதுகாவலராகிய புனித யோசேப்பின் திருநாளாக அறிவித்தார். நாசரேத்தின் தச்சுத்தொழிலாளியாகிய புனித சூசையப்பர், தொழிலின மாண்பு மற்றும் அதன் அவசியம் குறித்து நமக்கு நினைவூட்டுகிறார். தொழில் என்பது, உலகிற்கு வகுக்கப்பட்ட இறைதிட்டத்தின் ஒரு பகுதி.

18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் - 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வேகமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளிகள் பலரும் நாளொன்றுக்கு 12 முதல் 18 மணி நேரக் கட்டாய வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதற்கெதிரான குரல்களும் பல்வேறு நாடுகளில் ஆங்காங்கே எழத் தொடங்கியது. 1830களில் பிரான்சில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகள் தினமும் கட்டாயமாக 15 மணி நேரம் உழைக்க வேண்டி இருந்தது. இதை எதிர்த்து அவர்கள் பெருமவேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர். அவுஸ்திரேலியாவில் மெல் பேர்னில் கட்டடத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகள் உலகிலேயே முதன் முதலாக 8 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து 1856 இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, வெற்றியும் பெற்றனர். இது தொழிலாளி வர்க்க போராட்டத்தின் மைல் கல்லாக அமைந்தது.

சார் மன்னரின் ஆட்சி யின் கீழ் ரஷ்யத் தொழிலாளிகள் பெரும் துன்பங்களுக்கு ஆளானார்கள். இங்கும் 1895 - 1899க்கு இடைப்பட்ட காலத்தில் நூற்றுக்கணக்கான வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. 1896 ஏப்ரல் மாதத்தில் லெனின் மே தினத்திற்காக எழு திய சிறு பிர சுரத்தில், ரஷ்யத் தொழிலாளிகளின் நிலைமை குறித்து விரிவாக அலசியதோடு, ரஷ்யத் தொழிலாளர்களின் பொருளாதார போராட்டம் - அரசியல் போராட்டமாக எழுச்சி கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்தினர். தொழிலாளிகளின் 8 மணி நேர வேலைக்கான போராட்டங்களே ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

அமெரிக்காவில் 1832 இல் பொஸ்டனில் கப்பலில் பணியாற்றிய தச்சுத் தொழிலாளர்கள் 10 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்தனர். அதே போல், 1835இல் பிலடெல்பியாவிலும், பென்சில்வேனியாவிலும் இதே கோரிக்கையை முன்வைத்து இயக்கம் நடத்தப்பட்டது. பென்சில்வேனியாவில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களும், ரயிலவே தொழிலாளர்களும் குறைவான வேலை நேரத்தை வலியுறுத்தி 1877இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலா ளர் இயக்கங்களை இணை த்து அமெரிக்க தொழிலாளர் கூட்டமைபபு என்ற இயக்கம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்கம் 8 மணி நேர வேலை கோரிக்கையை முன்வை த்து தொடர்ந்து இயக்கங் களை நடத்தியது. அத்தோடு மே 1, 1886 அன்று நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. இவ்வியக்கமே மே தினம் பிறப்பதற்கு காரணமாகவும் அமைந்தது.

தொழில் நகரங்களான நியூயோர்க், சிகாகோ, பிலடெல்பியா, மில்விக்கி, சின்சினாட்டி, பால்டிமோர் என அமெரிக்கா முழுவதும் 3, 50,000 தொழிலாளர்கள் பங்கேற்ற மாபெரும் வேலை நிறுத்தம் தொடங்கியது. இவ் வேலை நிறுத்தத்தில் 1200க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். தொழிலாளர்க ளின் எழுச்சி மிக்க வேலை நிறுத்தத்தினால், அமெரிக்க பெரு நிறுவனங்கள் மூடப்பட்டன. ரயில் போக்குவரத்து நடை பெறவில்லை. வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற தொழலாளர் ஊர்வலங்கள் அமெரிக்காவை உலுக்கியது. மிச்சிகனில் மட்டும் 40 ஆயிரம் தொழி லாளர்களும், சிகாகோவில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

1889 ஜுலை 14 அன்று பாரீசில் சோசலிசத் தொழிலாளர்களின் சர்வதேச தொழிலாளர் பாராளுமன்றம் கூடியது. 18 நாடுகளில் இருந்து 400 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். பிரெட்ரிக் ஏங்கெல்ஸ் உட்பட பலர் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி நேர போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்றும், சிகாகோ சதியை இம்மாநாடு கடுமையாக கண்டித்ததோடு, 1890 மே 1 அன்று அனைத்துலக அளவில் தொழிலாளர்கள் இயக்கங்களை நடத்திட வேண்டும் என்றும் அறை கூவல் விடப்பட்டது.

இந்த அறை கூவலே மே முதல் நாளை, சர்வதேச தொழிலாளர் தினமாக, மே தினமாக அனுசரிப்பதற்கு வழிவகுத்தது.

ஆம் இன்று கட்சிகள் தொகுதியாய் கூட்டங்கள் ஊரெங்கும் உரிமை பேசுகிறது தொழிலாளர் தினமான வைகாசி ஒன்றில். எப்போதும் பணத்தில் குறியானவர்கள் தப்பாக மக்களை ஏமாற்றுபவர்கள், எப்போது தானாகத் திருந்துவார்களோ, அபபோதே இங்கு பலருக்கு மேதினம்.

## இன்றைய போட்டிகள்

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ் .மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும போட்டியில் தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அண்ணாசிலையடி விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உரும்பிராய் ஞானகலா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் வலிகாமம் விக்கு மட்டும் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழகமும் மாலை 4.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் அராலி சில்வஸ்ஸ்ரார் அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட்ரேஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது. (க)

டான்சன் சிறப்பாட்டம்

# சந்திரலிங்கம் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## அச்சுவேலி றொக்கட் சம்பியன்

டான்சன் சகல துறையிலும் அசத்த 2வது முறையாக சந்திரலிங் கம் ஞாபகார்த்தமாக வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது றொக்கெட் விளையாட்டுக்கழகம்.

அமரர் ந.சந்திரலிங்கம் ஞாபகார்த்தமாக கிரிக்கெட் சுற்றுப்போட்டி இம்முறை அச்சுவேலியில் 16 கழகங்களை தெரிவுசெய்து லீக் முறையில் போட்டிகள் யாவும் அச்சுவேலி றொக்கெட் மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.இதில் ஆவரங்கால் மத்திய வி.க.அச்சுவேலி றொக்கட் அணியினரும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகினா். அச்சுவேலி றொக்கட் மைதானத்தில் இறுதிப் போட்டி இடம்பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஆவரங்கால் மத்திய வி.க அணியின் அணித்தலைவர் முதலில் துடுப்பாட்ட தீர்மானித்து ஆடுகளம் புகுந்தார்.15 பந்து பரிமாற்றங்களாக நிர்ணயிக்கப்பட்ட போட்டியில் 13.2 பந்துப் பரிமாற்றங்களில் ஜாக்கியின் துல்லியமான பந்துவீச்சுக்கு முகம்கொடுக்க முடியாமல் சகல இலக்குகளையும் இழந்து 75 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

பந்துவீச்சில் டான்சன் (ஜாக்கி) 3ஓவர்கள் வீசி 18 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பாடிய றொக்கட் வி.க 9.4 பந்துகளில் 4இலக்குகளை இழந்து 2016 ஆம் ஆண்டின் அமரர் ந.சந்திரலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தையும் 15,000 ரூபா பணப்பரிசினையும் வெற்றி பெற்றது. றொக்கட் பந்து வீச்சில் ஆவரங்கால் மத்தி சார்பாக கோபி 4 இலக்குகளையும் கைப்பற்றினார். இறுதிப் போட்டியில் தோல்வியைத் தழுவிய ஆவரங்கால் மத்திய வி.க 10,000 ரூபா பணத்தினையும் வெற்றிக் கிண்ணத்தையும் கைப்பற்றினர்.

துடுப்பாட்டத்தில் டான்சன் 22, நெக்ஸ்மன் 30 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தனா். போட்டியின் ஆட்ட நாயகன் ,தொடர் நாயகன், பந்து வீச்சாளர் என மூன்று விருதுகளையும் றொக்கட் டின் ஜாக்கிஎன அழைக்கப்படும் டான்சன் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# யாழில் முதல் முறையாக நடத்தப்பட்ட கடற்கரை உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

## நேதாஜி வி.கழகம் முதலிடம்











அமரர்கள் பரஞ்சோதி மற்றும் சந்திரமோகனின் ஞாபகார்த்த வல்வை உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட கடற்கரை உதைபந்தாட்டம் அண்மையில் நிறைவடைந்து போட்டியில் நேதாஜி விளையாட் டுக்கழகம் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.

அரையிறுதி ஆட்டத்தில் ரேவடி B விளையாட்டுக்கழகம், இளங்கதிர் B விளையாட்டுக்கழகம், உதயசூரியன் A விளையாட்டுக்கழகம், நேதாஜி விளையோட்டுக்கழகம் ஆகிய நான்கு கழகங்கள் பங்கு பற்றின.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ரேவடி B விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளங்கதிர் B விளையாட்டுக்கழகம் மோதி இளங்கதிர் B விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு சென்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் உதயசூரியன் A விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நேதாஜி விளையாட்டுக்கழகம் மோதி நேதாஜி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு சென்றது.

இறுதிப்போட்டியில் இளங்கதிர் B விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நேதாஜி விளையாட்டுக்கழம் மோதியது. இந்த ஆட்டத்தில் 2.0 என்றகோல் கணக்கில் நேதாஜி வெற்றி பெற்றது.

முதல்மூன்று இடங்களைப் பெற்ற கழங்களுக்கு முறையே 15,000/= 10, 000 /= 5, 000 பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட்டது. 4 ஆம் இடத்தைப் பெற்ற ரேவடி அணிக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்டது.

இறுதிப்போட்டியின் சிறந்த கோல் காப்பாளராக ஜிவிந்தனும் (நேதாஜி விளையாட்டுக்கழகம்), சிறந்த வீரராக தர்சனும் (நேதாஜி விளையாட்டுக்கழகம்), சுற்றுப்போட்டியின் தொடர் ஆட்டநாயகன் விருது –அன் பு விற்கும் (உதயசூரியன் விளை யாட்டுக்கழகம்) வழங்கப்பட்டது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## அரியாலை வெற்றி

அண்மையில் நடைபெற்ற 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட இறுதி ஆட்டத்தில் புனித நீக்கிலார் அணியை எதிர்த்து அரியாலை விளையாட்டு கழகம் மோதிக்கொண்டது. விறுவிறுப்பாக சென்ற ஆட்டத்தில் முதலில் புனித நீக்கிலார் அணியும் பின்னர் அரியாலை விளையாட்டுக்கழகமும் ஒவ்வொரு கோல்களை (1:1) போட் டது. இவ் ஆட்டம் சமநிலையில் முடிந்ததை தொடர்ந்து சமநிலை தவிர்ப்பு உதையில் அரியாலை விளையாட்டு கழகம் வெற்றியீட்டியது. (க)

# பிரதேச செயலகத்துக்கான உதைபந்தாட்டம் கோப்பாய் பிரதேச செயலகம் சம்பியன்




பிரதேச செயலகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டத்தின் இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச அணியை வெற்றிபெற்று சம்பியனாகியது கோப்பாய் பிரதேச செயலக அணி.

கோப்பாய்பிரதேசசெயலக அணிக்கும் யாழ்ப்பாண பிரதேச செயலக அணிக்கும் இடையிலான இறுதிப்போட்டி அண்மையில் அரியாலையில் நடைபெற்றது.

முதல் பாதியாட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியின் வீரன் யூட் ஒரு கோலைப் போட்டார். தொடர்ந்துதனது ஆட்டத்தை வேகப்படுத்திய கோப்பாய் பிரதேச செயலக அணி முதல் கோலை திலிபன் போட ஆட்டம் சூடு பிடித்தது. மீண்டும் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியினர் கோல் போட்டனர்.

முதலாவது பாதியாட்ட முடிவில் யாழ்ப்பாண செயலகம் 2:1 இரண்டாவது பாதியாட்டம் இறுதி நேரத்தில் கோப்பாய் பிரதேச நட்சத்திர வீரன் கோபன் Free kick கோலாக மாற்ற கோல் மூலம் முடிவின் கடைசி நிமிடத்தில் ஆட்டம் 2:2 என்ற சமநிலையில் நிறைவுற்றது.

போட்டியின் வெற்றிக்காக சமநிலை தவிர்ப்பு உதைப்பு வழங்கப்பட்டது. அதை சரியாக பயன்படுத்திய கோப்பாய் பிரதேச அணி 4:3 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

கோப்பாய் பிரதேச செயலக அணி சார்பாக கோபன், திலிபன் தலா 01 விக்கெட்டினை கைப்பற்றினர். (க)

## கரப்பந்தாட்டத்துக்கு விண்ணப்பிக்குக

ஆரியகுளம் சில்வஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் 5 பேர் கொண்ட கரப்பந்தாட்டத்துக்கு (Over Game) விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி போட்டியானது எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டிக்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து விளையாட்டுக்கழகத்திடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் 077 387 1549 076 618 0886 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (க)

# துவிச்சக்கரவண்டி - கார் விபத்து;

## வயோதிபர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

கொக்குவில் குளப்பிட்டி சந்தியில் கார் மற்றும் துவிச்சக்கர வண்டி விபத்துக் குள்ளானதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து சம்பவம் நேற்று காலை ஒன்பது மணியளவில் யாழ்.கே.கே.எஸ்.வீதி குளப்பிட்டி சந்தியில் நடைபெற்றுள்ளது.

இதில் கொககுவில் பகுதியை சேர்ந்த சபாரட்ணம் சிவனேசன் (வயது 68) என்ற வயோதிபர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட யாழ்.பொலிசார், சம்பவ இடத்திற்கு வருகை தந்து விபத்து தொடர்பிலான தகவல்களையும் பெற்றுச் சென்றனர்.

இதேவேளை குறித்த விபத்து சம்பவத்தையடுத்து வீதியில் பொது மக்கள் திரண்டமையால் போக்குவரத்து இடையூறும் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4,30)

# தொலைத்தொடர்பு கம்பத்துடன் கார் மோதுண்டு விபத்து

## கணவன், மனைவி, மகள் காயம்



(பரந்தன்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த கார் தொலைத்தொடர்பு கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் மகன் சிறுகாயங்களுக்கு உள்ளாகி சிகிச்சைபெற்று வீடு திரும்பியுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி பரந்தன் முல்லைத்தீவு வீதியில் முரசுமேட்டை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் புதுக்குடியிருப்பு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவகுரு சின்ராசா (வயது 52) அவரது மனைவியான ஜெயலக்மி சின்ராசா (வயது 52) ஆகியோரே படுகாயம் அடைந்தவர்களாவர்.

பரந்தனில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கார் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் இருந்த தொலைத் தொடர்பு கம்பத்துடன் மோதியதிலேயே மேற்படி விபத்துச் சம்பவித்துள்ளது.

இதில் காரின் முன்பகுதியும், தொலைத்தொடர்பு கம்பமும் பலத்த சேதமடைந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் அறிந்த கிளிநொச்சி பொலிஸார் அவ்விடத் திறகு விரைந்து விசாரணைகளைமுன்னெடுத்திருந்தனர். (செ-2,312)

# இலங்கை மீனவர்கள் 1205 பேர் கைது

(கொழும்பு)

இலங்கை மீனவர்கள் 1205 பேர் இந்திய கடற்படையினரினால் கடந்த ஐந்து வருடங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மீனவர்கள் இந்திய கடற்பரப்பில் அனுமதியின்றி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்தின் காரணமாக, அவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனுடன், 241 படகுகள் கடற்படையினரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்திய மீனவர்கள் 2391 'பேர் இலங்கை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய கடலோர கடற்படை தலைமை அதிகாரி சத்ய பிரகாஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் குறித்த கடற்படை அதிகாரி சத்ய பிரகாஷ் சர்மா ஓய்வு பெறவுள்ள நிலையில் இந்த தகவல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (செ-12)

# மதுபானசாலைகள் இன்று மூடப்படும்

(கொழும்பு)

சர்வதேச தொழிலாளர் தினமான, இன்று ஞாயிற்றுக்கிழமை மே 1ஆம் திகதியன்று, மதுபான சாலைகள் மூடப்படும் என்று கலால திணைக்களம் அறிவித்துள்ளது.

மே தினக்கூட்டங்கள் மற்றும் பேரணிகள் இடம்பெறும் கொழும்பு மாவட்டத்திலும் காலி மற்றும் நுவரெலியா நகர சபை அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள மதுபானசாலைகளே மூடப்படும் என்றும் அத்திணைக்களம் அறிவித்துள்ளது. (செ-12)

# சம்பந்தனிடம் கையளிக்கும்...

முடிவு உறுப்பினர்கள் மற்றும் அவைத்தலைவர் ஆகியோருக்கடையில் அதிருப்தியையும் தோற்றுவித்துள்ளது.

இந்நிலையில் நேற்றையதினம் யாழில் நடைபெறவிருந்த எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தனிடம் தீர்வுத்திட்ட வரைபு கையளிக்கும் நிகழ்வுக்கு கொழும்பிலிருந்து தன்னால் வரமுடியாது என்பதனால் அந்த நிகழ்வை இடை நிறுத்துமாறு அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானத்திடம் கோரியிருந்தார்.

இதனால் குறித்த நிகழ்வு முதலமைச்சர் பங்குபற்றல் இன்மையால் நிறுத்தப்பட்டுள்ளது.

நிகழ்வு இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் வடக்கு மாகாண அவைத்தலைவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இந்த விடயம் தொடர்பாக முதலமைச்சருடன் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டபோது தமது சுகவீனம் காரணமாக கொழும்பில் இருந்து பிரயாணம் செய்வது வசதி அற்றது எனவும் நிகழ்ச்சியை ஒத்திப் போடுவதே சிறந்தது எனத் தெரிவித்துள்ளார். எனவே இன்றைய (நேற்றைய) கையளிப்பு நிகழ்வு ஒத்திவைக்கப்படுகிறது.

அவரது மின்னஞ்சல் பிறிதாக அனுப்பி வைக்கப்படும். ஒட்டு மொத்தமாக இவை எல்லாமே மிகவும் கவலையும் ஏமாற்றமும் தரும செயற்பாடுகள் என்பதும் பதிவு செய்யப்படும் என்றே நம்புகிறேன்.

சம்பந்தன் ஐயாவிடம் எப்படி மன்னிப்பு கேட்பது என்பது எனக்கு தெரியவில்லை. அவருக்கு இரண்டு முறை நேரடியாக அழைப்பு கொடுத்தவன் என்ற வகையில் நான் மிகவும் வருந்துகிறேன்.

முன்மொழிவுகள் பூர்த்தி ஆக்கப்பட்டு விட்டன இனி அவற்றை மேலும் பரிசீலிப்பது என்ற பிரச்சினை எழவில்லை சிங்கள மொழிபெயர்ப்பு பூர்த்தியாக்கியதும் எனது பணி முடிவுக்கு வந்து விடும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

# இராணுவ முகாமுக்குள் சம்...

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் நேற்று உரையாற்றியிருந்த போதே பிரதமர் ரணில் விக்ரமசிங்க இவ்வாறு கூறினார்.

கிளிநொச்சியில் அண்மையில் நடந்த சம்பவம் ஒன்றின்போது, எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான ஆர்.சம்பந்தன், இராணுவ முகாம் ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்ததாக தென்னிலங்கையில் சில அரசியல்வாதிகள் முன் வைக்கும் குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கும் விதத்தில் பிரதமர் இங்கு பேசினார்.

அந்தக் காணிகள் இராணுவத்துக்கோ அரசுக்கோ சொந்தமானவை அல்ல. அந்தக் காலத்தில் யுத்தம் காரணமாக இராணுவம் அவற்றை கையகப்படுத்தியிருந்தது.

அந்தக் காணிகளை ஓரிரு மாதங்களில் இராணுவத்தினர் மீள ஒப்படைப்பார்கள்.

அந்தக் காணிகள் விடுவிக்கப்படுமா இல்லையா என்று மக்களுக்கு சந்தேகம் இருந்ததால், அங்கு பிரச்சினை ஏதும் இல்லை என்பதை உறுதிப் படுத்துவதற்காக சம்பந்தன் அங்கே சென்றார் என்றார் ரணில் விக்ரமசிங்க.

சம்பந்தன் எல்.ரி.ரியைச் சேர்நதவரா? நாட்டை பிரித்தாலும் அவருக்கு நன்மை இல்லை. அவர் இருப்பது திருகோணமலையில். அவர் இருப்பது எங்களோடு.

சம்பந்தர் இராணுவ முகாம் பக்கத்துக்கு செல்லவில்லை. காணிகள் இருக்கும் பக்கத்துக்கு தான் சென்றார் என்று இராணுவத் தள பதியே கூறினார் என பிரதமர் ரணில் விக்கிரம சிங்க குறிப்பிட்டார். (செ-12)

# பொன்னாலையில் மினி சூறாவளி...

கடந்த சில மாதங்களாக சுட்டெரித்து வரும் வெயிலால் மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள நிலையில் யாழ் மாவட்டத்தில் உள்ள பல இடங்களில் நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் திடீரென்று இடி, மின்னலுடன் கூடிய பெரு மழை பெய்தது.

இதன் தொடர்ச்சியாக 2.30 மணியளவில் பொன்னாலையில் மினி சூறாவளியொன்று வீசியது.

இந்த சூறாவளியால் பொன்னாலை தெற்கில் உள்ள நாகராசா அயன் என்ற குடும்பஸ்தரின் வீட்டுக் கூரை சுழல் காற்றினால் முற்றாக தூக்கி வீசப்பட்டது. அண்மையில் வழங்கப்பட்ட இந்திய வீடே இந்த அனர்த்தத்தில் கடும் சேதமாகியது.

இவரது வீட்டுக்கு அண்மையில் அமைந்திருந்த தம்பிராசா குகேந்திரன் என்பவரது அரை நிரந்தர வீட்டின் முன்பக்க கூரையும் தூக்கி வீசப்பட்டது.

மேலும் பொன்னாலை சந்தியில் நாராயணன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தொழிலாளர்களுக்கென கடந்த வருடம் அமைக்கப்பட்ட ஓய்வு மண்டப ஓட்டுக் கூரையின் ஒரு பகுதியும் இந்த கட்டிடத்திற்கு அருகில் வலி.மேற்கு பிரதேச சபையால் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட மீன் சந்தைக் கட்டிடக் கூரையின் ஒரு பகுதியும் தூக்கி வீசப்பட்டுள்ளது.

மேற்படி கட்டிடங்களுக்கு அருகே அமைந்திருந்த நாராயணன் தாகசாந்தி நிலையத்தின் கூரையின் ஒரு பகுதியும் இந்தக் கட்டிடங்களுக்கு நூறு மீற்றர் தூரத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்ற ஐஸ் உற்பத்தி தொழிற்சாலையின் சீற்றுக்களும் தூக்கி வீசப்பட்டன.

பொன்னாலை சந்தியில் குடியேற்றத்திட்டத்தில் உள்ள கடை ஒன்றின் சீற்றுக்களும் தூக்கி வீசப்பட்டதனால் இந்தக் கடையில் இருந்த அரிசி, கோதுமை மாவு உள்ளிட்ட பொருட்கள் நீரில் நனைந்துள்ளது.

இந்த அனர்த்தத்தை கேள்வியுற்ற பொன்னாலை கிராம சேவையாளர் ப.தீசன், மூளாய் கிராம சேவையாளர் ஆர்.சிறீரஞ்சன் மற்றும் வலி.மேற்கு பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். (செ-9)

# ஆணொருவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அருகில் உள்ள கைவிடப்பட்ட காணியில் இருந்து உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் குறித்த பகுதிக்கு மாடு மேய்க்கச் சென்றிருந்த இளைஞன் ஒருவரினால் குறித்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டு,

பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் குறித்த சடலத்தை மீட்டுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற கொண்டு வருகின்றனர். (செ-4)

# தேர்தலில்...

மேற்படி அறிவிப்பை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார வெளியிட்டார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை பகல் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினது ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மைத்திரி - மகிந்த ராஜபக்ஷ ஆகிய இருவருக்கு இடையிலான மோதல்கள் முற்றுப்பெற்றிருப்பதாக கூறிய அவர், கடந்த தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற வேண்டும் என்பதை எதிர்பார்த்தே தாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

எது எவ்வாறாயினும் இந்த இருவரையும் மோதிக்கொள்ளச் செய்யும் தேவைப்பாடு இனியும் இருக்காது என்றும், இவர்கள் இருவரும் எதிர்வரும் காலங்களில் நடைபெறும் தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பாக போட்டியிட மாட்டார்கள் அதற்கு வாய்ப்பில்லை என்றும் சாந்த பண்டார எம்.பி தெரிவித்தார்.

இதேவேளை காலியில் நடைபெறவுள்ள சுதந்திரக் கட்சியின் மே தினக்கூட்டத்தை பகிஷ்கரித்து கிருலப்பனையில் நடைபெறும் கூட்டத்திற்குச் செல்வோரின் தீர்மானம் நேற்று இரவோடு மாற்றப்பட வேண்டும்என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (செ-12)

# விக்னேஸ்வர...

இந்நிலையில், இந்த வரைபுக்கு எதிராக தென்னிலங்கை இனவாதிகள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் வட மாகாணசபையின் தீர்வு திட்ட வரைபுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதற்கமைய தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா முதலாம் எதிரியாகவும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் 2-ம் எதிரியாகவும் அவை தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் 3-ம் எதிரியாகவும் வட மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன் 4-ம் எதிரியாகவும் குறிப்பிடப்பட்டு நேற்றையதினம் நீதிமன்ற அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வழக்கறிஞர் ஊடாக தம் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வட மாகாண சபைமுயற்சிக்கும் என அவை தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் ஊடகங்களுக்கு கூறியுள்ளதுடன், எதிர்வரும் மே மாதம் 12-ம் அல்லது 13-ம், 17-ம் திகதிகளில் திறந்த நீதிமன்றத்தில்இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# கடும் வெப்பத்தை...

இலங்கை போன்ற நாடுகளில் கடுமையான வெப்பம் வாட்டியெடுக்கிறது.

உலகில் மிக அதிகளவு நெல் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றான வியட்நாமில், கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் 33 கோடி மக்களுக்கு குடிநீர் கிடைக்காத நிலை ஏற்படும் அபாயம் நிலவுகிறது.

சீனாவில் உற்பத்தியாகி, 6 தெற்காசிய நாடுகள் வழியாக ஓடும் மேகாங் ஆற்றில், கடந்த பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு நீர் குறைந்து போனது. இதன் காரணமாக பல்வேறு நாடுகளில் வறட்சியும், உணவுப் பஞ்சமும் ஏற்பட்டது.

இந்த நிலையில், எல் நினோவின் தாக்கம், இந்த ஆண்டு நடுப்பகுதியில் குறைந்து விடும் என்று கூறும் விஞ்ஞானிகள், அதனைப் பின்தொடர்ந்து லா -நினா என்ற குளிர் சலனம் இந்த ஆண்டு இறுதியில் தொடங்கும் என்று எச்சரித்துள்ளனர்.

லா- நினா காரணமாக, கடுமையான மழையும், வெள்ளப் பெருக்கும் ஏற்படும் என்றும், இதனால், ஏற்கெனவே வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாய உற்பத்தி, மேலும் கடுமையாக பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா. உதவிச் செயலர் ஸ்டீபன் ஓபிரையன் கூறுகையில்,

இந்த ஆண்டு இறுதியில் வரவிருக்கும் லா-நினா, மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். எல்-நினோவினால் ஏற பட்ட பாதிப்புகளைவிட அது மிகக் கடுமையானதாக இருக்கக் கூடும்.

எல்-நினோவினால் ஏற்கெனவே உலகம் முழுவதும் 6 கோடிமக்கள் அவசர நிவாரண உதவிகளைப் பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த நிலையில், லா-நினாவால் ஏற்படும் வெள்ளப்பெருக்கில் விவசாய உற்பத்தி கடுமையாக பாதிக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

லா- நினா காலநிலை மாற்றத்தினால், கடந்த 2011ஆம் ஆண்டு தொடக்கத்தில் இலங்கை, இந்தியாவில் கடும் குளிரான காலநிலை காணப்பட்டதுடன், அதனால் பலர் இறக்கவும் நேரிட்டமை குறிப்பிடத்தக்கது.(செ-12)

**இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி**
நடத்தும்
இயல், இசை, நாடக அரங்கு
மே 4ஆம் திகதி
தொடக்கம் 8ஆம் திகதிவரை
(4350)

**காணி விற்பனைக்கு**
அளவெட்டி ஜெயாப்பிறஸ் சந்தியிலிருந்து 50 யார் தொலைவில் 4 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.
தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு:-0114949234
(4345)

**பணியாளர் தேவை**
(1) வடிவமைப்பாளர். (Photoshop)
(2) அல்பம், புத்தகம் கட்டுனர் (Binding)
(3) உதவியாளர்
(சி-4472)
மூர்த்தி டிஜிரல்
யாழ்ப்பாணம்.
0772247428

# கூட்டு எதிரணி...

யவுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் இந்த மேதினக் கூட்டத்தில் தற்போதைக்கு பத்து அரசியல் கட்சிகள் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மஹஜன எக்சத் பெரமுன, இலங்கை சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, தேசிய சுதந்திர் முன்னணி, ஜனநாயக இடது சாரி முன்னணி, தேசவிமுக்தி ஜனதா கட்சி, இலங்கை மக்கள் (மஹஜன) கட்சி, பிவிதுரு ஹெல உறுமய, சோமவன்ச அமரசிங்கவின் ஜனதா சேவக கட்சி ஆகிய கட்சிகளே அவையாகும்.

இதற்கு மேலதிகமாக சுமார் நூறு தொழிற சங்கங்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பேரணி ஆரம்பமாகும் இடம் என ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரால் அறிவிக்கப்பட்ட நாரஹேன்பிட்டிய சாலிக மைதானத்துக்குள் எதிர்வரும் 14ஆம் திகதி வரை நுழைய முடியாது என கொழும்பு மேலதிக நீதவான் நிசாந்த பீரிஸ் இடைக்கால தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-12)

**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062
(C-4474)

# ஆணைக்குழுவில்...

திபதி ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி வருகிறது. விசாரணைகளில் கலந்து கொள்வதற்காக நிஷாந்த விக்கிரமசிங்க மற்றும் விமானப் பண்ிப்பெண் நித்தியா சேனானி சமரநாயக்க ஆகியோர் நேற்று பண்டார நாயக்க மாநாட்டு மண்டப சூழலில் இருக்கும் ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு வருகை தந்தனர். நிஷாந்த விக்கிரமசிங்க, முன்னாள ஜனாதிபதி மகிந்தவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவின் சகோதரராவார்.

ஸ்ரீலங்கன் கேட்ரிங் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்று அதிகாரி விசாரணைகளுக்கு சமுகமளிக்காத காரணத்தினால், விசாரணைகள் எதிர்வரும் மே மாதம் 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன. (செ-12)

# திருட்டை தடுக்க...

என்ற குடும்பஸ்தரே படுகாயங்களுக்குள்ளானவராவார். வீட்டின் யன்னலைப் பிரித்துக் கொண்டு திருடன் உள்நுழைவதை அவதானித்த வீட்டின் உரிமையாளர் திருட்டுச் சம்பவத்தை தடுக்க முற்பட்டுள்ளார். இதன்போதே திருடன் தன்வசம் வைத்திருந்த கைக்கோடரியால் வீட்டு உரிமையாளரின் நெஞ்சுப் பகுதியில் ஆழமாக வெட்டி தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளான். சத்தம் கேட்டு விழிப்படைந்த அயலவர்களது உதவியுடன் குறித்த குடும்பஸ்தர் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் முறைப்பாடுகளை பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-30,87)

**அலுவலகம் / வியாபாரத்துக்கு உகந்த கட்டிடம்**
**வாடகை / குத்தகைக்கு**
A-9 வீதி, பளை நகரம்
பளை மத்திய கல்லூரிக்கு அருகாமையில்
பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாக.
வாகன தரிப்பிட வசதியுடன்
இரு வழிப்பாதை
அளவு : 1065 சதுர அடி

தொடர்பு : 077 379 6961
(சி-4486)

**சன்சக்தி ரேடர்ஸ்/லிங்(LINK) ஆட்டோ மீற்றர்கள்**
**யாழ்பாணத்தில் மீண்டும்!**
**2500 ரூபா வரையான விலைக்கழிவுண்டு!**
மே 1ம் திகதி முதல் சகல பயணியர் முச்சக்கரவண்டிகளும் கட்டாயமாக (இயங்கும்)மீட்டர்கள் பொருத்தப்பட்டிருக்கப்பட வேண்டும் - GA, Police
எங்கள் மீற்றர்களை உடன் பொருத்திக்கொள்பவர்களுக்கும் பழைய வாடிக்கையாளர்களுக்கும் விஷேட சலுகைகள் வழங்கப்படும்!
(சி-4488)
மீற்றர்களை 7,500 - 14,500 வரை பெற்றுகொள்ளலாம்
(மாத தவணை அடிப்படையிலும் கொடுபனவு வசதி செய்து கொடுக்கப்படும்)


இலங்கையின் NO.1 மீற்றர்கள்
100% இலங்கைத்தயாரிப்பு!
ஜனாதிபதி விருதுபெற்றது
ISO சான்றிதழ் பெற்ற தொழிசாலையில் தயாரிக்கப்பட்டது
TOS LANKA PVL விருது பெற்றது.....
5வருட சேவையையும் உதிரிபாக வினையோகத்தையும் உறுதி செய்துள்ளோம்.
அங்கிகரம் பெற்றது, தரத்துடன் நம்மாள் நமக்காக நம்நாட்டில் தயாரிக்கப்பட்டது!
உடனடியாக மீற்றர்களை பொருத்தி வரக்கூடிய சட்டசிக்கல்களை தவிர்த்துக்கொள்ளுங்கள்!
சன்சக்தி ரேடர்ஸ்
கிக்விசன்/HIKVISION World No.1 CCTV கமராக்கள்!
rang by asmag Germany/Frankfurt in 2012 and 2015 and IMS USA 2012
4 HD கமராக்கள்
DVR,PowerSupply,
BNC,DCjack
57,000/=
இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

2 Year warranty
www.sunsakthy.com
விலை உயர்ந்தவை ஆனால் தரத்தில் பன்மடங்கு உயர்ந்தவை!.
SST - சன்சக்தி ரேடர்ஸ் இல 651, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்
தொ.இ. 021 221 7994 கை.தொ.இ.077 593 0335

**பணிநிலை வெற்றிடம்**
எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. தேர்வாளர்களின் அனுபவம், ஆற்றலுக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
- அச்சு இயந்திர இயக்குநர் (Offset machine minder)
- அச்சு இயந்திர உதவியாளர் (Offset machine Helper)
- பைண்டிங் (அனுபவம் உள்ளவர்கள், பழக விரும்புவோர்)
- ஸ்கிறீன் பிறிண்டிங் (அனுபவம் உள்ளவர்கள், பழக விரும்புவோர்)

சுயவிபரக்கோவையுடன் 2ஆம், 3ஆம் திகதிகளில் (திங்கள், செவ்வாய்) 9.30 தொடக்கம் 12.00 மணிக்குள் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.
(சி-4481)
PRINT Master
கே.கே.எஸ். வீதி, குளப்பிட்டிச்சந்தி, கொக்குவில்.
T.P. : 021-205 3322 Mobile : 077-6622981



ALL LAPTOPS, DESKTOP REPAIRS ONE DAY SERVICE
உங்கள் கமெராக்களை நீங்களே பரிசோதித்து தெரிவு செய்யுங்கள்
CAMERA STARTING FROM: RS.3750
சகல கணனி, மடிக்கணனி உதிரிப்பாகங்களையும் குறைவான விலையிலும் கூடிய உத்தரவாதத்துடனும் பெறலாம்.
கணனி தொடர்பான சகல பிரச்சினைகளுக்கும் நாடுங்கள்
குறிப்பு: வடமாகாணத்தில் தரமானதும், மலிவானதுமான சேவைகளை எம்மைவிட எவரிடமும் பெற்றுக்கொள்ள முடியாதென்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். Warranty 1 to1 Replace
COMPAQ DELL hp SAMSUNG IBM acer ASUS lenovo TOSHIBA Hotline : 0774192275
NORTH LEAD
VISION OF TECHNOLOGY
No. 6A, Stanley Road,
Sirampiyadi Lane, Jaffna.
Tel : 021-222 4459, 0772533390
(சி-4483)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2047 01.05.2016 தொலைபேசி : 021 222 3378

நாதம் 63







# கையளிக்கப்படும் தீர்வுத்திட்டம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. விதானையார் விசுவலிங்கத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடி மாநாட்டிற்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் கூற, அனைவரும் எழுந்து இறை வணக்கம் செய்து அமர்ந்தனர்.

**வாத்தியார்:** எங்கட இடங்களில இப்ப கொள்ளையும் களவுமாக கண்டபாட்டில நடக்கிறதால மக்கள் ஊன் உறக்கம் மறந்து போயுள்ளனர்.

**கங்காணி:** கடவுளே! வீடு புகுந்து கொள்ளை அடிக்கிறவர்கள் வீட்டுக் கதவைக் கொத்திப் பிளந்தல்லோ உள்ளுக்கு வருகினமாம்.

**வாத்தியார்:** அதுமட்டுமோ வாளுகள், கத்தியள், வீட்டு உரிமையாளர் எதிர்த்தால் உடன வாளால வெட்டு, இந்த அநியாயத்தால கையில மடியில இருக்கிறதைக் கொடுத்துவிட்டு இருப்பம் என்ற முடிவில சனங்கள் இருக்கிறதாகக் கேள்வி.

(வாத்தியார் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கையில் விதானையார் விசுவலிங்கம் ஆலடி மாநாட்டிற்கு வந்து சேர்ந்தார்)

**கங்காணி:** என்ன விதானையார் இன்றைக்குப் பிந்திப் போனியள்.

**விதானையார்:** ஓம் கங்காணியார் ரவுனுக்குப் போய் வீட்டில இருக்கிற நகை நட்டெல்லாத்தையும் வங்கி லொக்கரில வைச்சுப் போட்டு கவரிங் நகையள் கொஞ்சம் வாங்கிக் கொண்டு வந்தனான்.

**வாத்தியார்:** பார்த்தியளே நாங்கள் இங்க கதைக்க விதானையார் வீட்டு நகையள லொக்கரில வைச்சுப் போட்டு வந்திருக்கிறார்.

**மூப்பர்:** அதுமட்டுமோ கிளிட் நகையுமல்லோ வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்.

**பண்டிதர்:** மூப்பர் விதானையார் கிளிட் நகை வாங்கிக் கொண்டு வந்ததைப்பற்றிக் கதைக்கிறியள். எங்கட தலைவிதியை நினைச்சுப் பாருங்க பாப்பம்.

**மூப்பர்:** பண்டிதர் ஐயா என்ன சொல்லுறியள் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களன்.

**பண்டிதர்:** இலட்சக்கணக்கான ரூபாய்களுக்கு தங்க நகையள வாங்கி லொக்கரில வைச்சுப் போட்டு கிளிட் நகை வாங்கி அணியிற பலன் தானே எங்களுக்கு.

**வாத்தியார்:** பண்டிதர் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யிது. தங்க ஆபரணங்களை அணிவதால உடம்புக்கும் நல்லது என்பதாலதான் தமிழர் பண்பாட்டில தங்க நகை அணியிற வழமை வந்தது.



## முதல்வருடன் இசைந்து போவதுதான் ஒரேவழி

ஆனால் இன்றைய சூழ்நிலையில தங்க நகை அணிந்தால் தலை தப்பிறது தம்பிரான் புண்ணியம் என்பதாய்ப்போய்ச்சுது. ஆகையால பெருந்தொகைக்காசு கொடுத்து வாங்கின தங்க நகைகளை வங்கி லொக்கரில வைச்சுப்போட்டு கிளிட் நகைகளை அணிய வேண்டியதாய்ப் போய்ச்சு. பண்டிதர் சொன்னது போல எல்லாம் எங்கட தலைவிதி.

**விதானையார்:** அது சரி வாத்தியார் கொள்ளையர் தொடர்பில எங்கட வடக்கு மாகாண ஒரு கதையையும் காணல. என்ன சங்கதி?

**பண்டிதர்:** உஷ்... அவையள் இப்ப தீர்வுத் திட்டம் தயாரிக்கிற அலுவலில மிகத் தீவிரமாகவல்லோ இருக்கினம்.

**கங்காணி:** அட! சங்கதி அப்படியே. எதுவா இருந்தாலும் வடக்கு மாகாண சபை ஆட்சி அமைச்ச உடனேயே தீர்வுத் திட்டத்தைத் தயாரித்திருக்கலாமல்லோ.

**விதானையார்:** கங்காணியார் இதென்ன கதை. வடக்கு மாகாண சபை ஆட்சி அமைத்தபோது தமிழ்மக்கள் பேரவை இருந்ததோ! இல்லையே!

2015 டிசெம்பர் 19 ஆம் திகதி தானே தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள்ள தீர்வுத் திட்டமொன்றைத் தயாரித்து அதைத் தமிழ் மக்களிட்ட முன்வைத்தினம்.

இதைப் பார்த்த வடக்கு மாகாண சபை தாங்களும் ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்கவேணும் என்றொரு தீர்மானத்தைக் கொண்டு வந்தினம்.

**கங்காணி:** தமிழ்மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்டத்தைப் பார்த்து அதையும் இதையும் மாத்திவிட்டால் புதியதொரு தீர்வுத் திட்டம்தானே!

**மூப்பர்:** கங்காணியார் சரியாகச் சொன்னியள். வடக்கு மாகாண சபை தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிக்கவேணும் என்று சொல்லிக் குந்தியிருந்து யோசித்த போது, ஒரு டாக்குத்தர் அமைச்சர் சொன்னவராம், தமிழ்மக்கள் பேரவையின்ர தீர்வுத் திட்டத்தின்ர கவர் பேப்பரைக் கழற்றிப் போட்டு வடக்கு மாகாண சபை என்று போட்டுக்குடுங்க என்று.

**வாத்தியார்:** அந்த மனுசன் தான் சரியாச் சொல்லியிருக்கிறார்.

**விதானையார்:** அது சரி வாத்தியார் இப்ப கொஞ்சக் காலமாய்ப் பார்க்கிறன் எங்கட வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவோட இசைந்து போறதில வடக்கு மாகாண சபையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ர தலைமையும் மிகக் கவனமாக இருக்கிறது தெரியுது.

இப்படியொரு மாற்றம் வாறதுக்கு என்ன காரணம்?

**வாத்தியார்:** எல்லாம் தமிழ் மக்கள் பேரவையின்ர உதயம்தான். தமிழ்மக்கள் பேரவை கூட்டமைப்புக்கு எதிரான ஒரு சக்தியாக மாறிவிடுமோ என்று பயந்தவர்கள் முதல்வர் விக்னேஸ்வரன் ஐயாவோட இசைந்து போறதுதான் ஒரே வழி என்று நினைச்சிருப்பினம்.

**கங்காணி:** அட சங்கதி அப்படியே! அப்ப இனிமேல் வடக்கு மாகாண சபையில இருக்கிற எங்கட இளம் உறுப்பினர்கள் நக்கல் நையாண்டி விடமாட்டினமோ!

**வாத்தியார்:** தொடுகிலும் விடமாட்டினம். இப்ப காலம் முதல்வருக்கும் சாதகமாகவல்லோ இருக்குது. கொழும்பில இருக்கிறவியளே அமைதியாகிவிட்டினம்.

**மூப்பர்:** அப்ப வாத்தியார் வடக்கு மாகாண சபையின்ர தீர்வுத் திட்டத்தில ஒரு நாடு இருதேசம் என்ற கொள்கை வருகுது என்றும் இது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தாற்ற கோஷம் என்றும் எனவே இதை ஏற்கமுடியாது என்றும் ஒரு இளம் உறுப்பினர் சொன்னவரல்லோ.

**வாத்தியார்:** ஒரு நாடு இரு தேசம் என்பதுதான் தமிழர்களுக்கான உரிமை என்பது தெரிந்தாலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதை முதலில வலியுறுத்திச் சொன்னதால அதை ஏற்கக் கூடாது என்பதுதான் சிலபேற்ற முடிபு. என்ன செய்யிறது சரியானதை யார் சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்வதுதான் உயர்ந்த பண்பு.


ஆனால் இப்ப இந்த உயர்ந்த பண்பு யாரிட்ட இருக்குது. விழுந்த பாட்டில குறிசுடுகிற பழக்கம்தானே இப்ப எங்களை ஆட்டிப் படைக்குது.

**பண்டிதர்:** சரி... சரி... தமிழ் மக்கள் பேரவையினர் தயாரித்த தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்த நிறைய வேலைத் திட்டம் நடக்கிறதாகக் கேள்வி. தமிழ்மக்களின்ர ஆதரவும் அதற்கு இருக்கிறதால பேரவையின்ர தீர்வுத் திட்டம் தொடர்பில நம்பிக்கையோடு இருப்பம்.

இப்படிப் பண்டிதர் கூற அதை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# அரசு தருவது தீர்வா! உரிமையை கொடுப்பது தீர்வா!




தமிழ் மக்கள் பேரவை மற்றும் வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத் திட்டங்களைக் கையளிப்பதில் ஒரு போட்டி நிலை ஏற்பட்டிருப்பதைக் காண முடிகின்றது.

தமிழ்மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட முன்மொழிவு ஒரு சாதனையாகிவிடும் என்ற பயப்பீதியில் வடக்கு மாகாண சபையும் ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்ற அதிரடி முடிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு சில தலைவர்களால் எடுக்கப்பட்டது.

தமிழ்மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்டத்தை ஆராய்ந்து அதில் சில திருத்தங்களைச் செய்யலாமே என்று சொல்வதற்கு வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களால் முடியாமல் போயிற்று.

எதுவாயினும் தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்டமே இலங்கையின் வரலாற்றில் ஐந்து அரசியல் கட்சிகளும் வடக்கு மாகாண முதலமைச்சரும் துறைசார் நிபுணர்களும் சேர்ந்து தயாரித்த தீர்வுத் திட்டமாகும்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் அபிப்பிராயங்களையும் பதிவு செய்து மீளவும் ஒன்றுகூடிய அரசியல் தீர்வுத் திட்டம் தயாரிக்கும் நிபுணர்கள் , சேர்க்க வேண்டியவற்றைச் சேர்த்தும் விலக்கவேண்டியவற்றை விலக்கியும் தீர்வுத் திட்டத்தின் இறுதி வடிவத்தைத் தயாரித்து வெளியிட்டனர்.

இந்த வகையில் பொது மக்களின் கருத்துக்களையும் உள்வாங்கி தயாரிக்கப்பட்ட இத்தீர்வுத் திட்டமானது கடந்த 25 ஆம் திகதி அரசியலமைப்புச் சீர்திருத்தக் குழுவிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இஃது ஒரு புறத்தில் நடைபெற மறுபுறத்தில் வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத்திட்டமானது கடந்த 28 ஆம் திகதி அரசியல் சீர்திருத்தக் குழுவின் தலைவராகிய சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்ட வரைபை முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தரிடம் கையளிப்பது என்று முடிவாகி இருந்த போதிலும் .அதிரடியாக அரசியலமைப்புச் சீர்திருத்தத்திற்குப் பொறுப்பான குழுவிடம் கையளித்தது எதற்காக என்பது புரியாமலே உள்ளது.

இருந்தும் இரண்டு காரணங்களுக்காக அந்த முடிவை வடக்கு மாகாண சபை எடுத்திருக்கமுடியும் என்றும் அனுமானிக்கலாம்.

அதாவது அரசியல் சீர்திருத்தம் தொடர்பிலான குழுவிடம் ஏலவே தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்ட முன்மொழிவு கையளிக்கப்பட்டது. கடந்த 25 ஆம் திகதி இக் கையளிப்பு இடம்பெற்றது.

இந்நிலையில் வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத் திட்ட முன்மொழிவை இரா. சம்பந்தரிடம் கையளித்து அதன் பின்னர் அரசியலமைப்பு சீர்திருத்தக் குழுவிடம் கையளிப்பதென்பது காலம் கடந்த நடவடிக்கையாகி விடும் என்பதால் சம்பந்தரிடம் கையளிப்பதற்கு முன்னதாக அரசியலமைப்புச் சீர்திருத்தக் குழுவிடம் கையளிப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கலாம்.

இக்காரணம் பொருத்தமற்றது எனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவரிடம் தீர்வுத் திட்ட முன்மொழிவு முதலில் கையளிக்கப்படுவதை வடக்கு மாகாண சபையில் இருக்கக் கூடிய சிலர் விரும்பவில்லை. இதன் காரணமாகவே அவசர அவசரமாக தீர்வுத் திட்ட முன்மொழிவு அரசியலமைப்புச் சீர்திருத்தக் குழுவிடம் கையளிக்கப்பட்டது என்ற முடிவுக்கு வரலாம்.

எது எப்படியாக இருப்பினும் வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத் திட்டம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரிடம் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி கையளிக்கப்படும். இதனை வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா ஆகியோர் இரா.சம்பந்தரிடம் கூட்டாகக் கையளிப்பர்.

இந்நிகழ்வு யாழ்ப்பாண பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்ற அவைத் தலைவரின் அறிவிப்பைக் கடந்து திடீரென அரசியலமைப்புச் சீர்திருத்தக் குழுவிடம் கையளிக்க வேண்டிய தேவை என்ன? என்று உள்ளார்ந்தமாக ஆராய்ந்தால் ஓர் உண்மை புலப்படும்.

அதாவது நல்லாட்சியைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது ஒற்றையாட்சியின் கீழ் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை உள்ளடக்கியதாக அமையும் என்றும் சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் ஏலவே முடிவாகியுள்ளது.

இந்த முடிவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தரும் உடன்பட்டிருந்த தான தகவல்கள் உண்டு.

தமிழ்மக்கள் -பேரவை அமைக்கப்பட்டு சமஷ்டி என்ற தீர்வை பேரவை வலியுறுத்தும் வரை இரா.சம்பந்தர் ஒற்றையாட்சிக்கே தனது ஆதரவைக் கொடுத்து வந்தார்.

இலங்கை அரசு எதைத் தருகிறதோ அதை வாங்கிக் கொண்டு நிம்மதியாக இருந்து விடலாம் என்பதுதான் சம்பந்தனதும் அவரை வழிப்படுத்துபவரினதும் முடிவு.

## இனப்பிரச்சினையை சாதியப் பிரச்சினையாக மாற்றச்சதி



அப்படியானால் கூட்டமைப்பிற்குள் இருக்கக்கூடிய ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களின் முடிவு என்ன? என்று கேட்டால், அவர்கள் பாவங்கள். கட்சிக்குள் நடப்பது என்ன என்பதே அவர்களுக்குத் தெரியாது.

சம்பந்தரும் அவரோடு சேர்ந்தவர்களும் எடுப்பது தான் தீர்மானம். இது கண்டு கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொதிப்படைந்தாலும் கட்சித் தலைமையிடம் துணிந்து கேள்வி கேட்கும் வல்லமை இவர்களிடம் அறவே இல்லை.

சம்பந்தருடன் பகைத்தால் அடுத்த தேர்தலுக்கு அந்தாள் சீற் தராது என்ற பயத்தால் எது நடந்தாலும் மௌனமாக இருப்போம். தமிழ் மக்களைச் சந்திக்கின்ற போது, தேர்தல் காலங்களின் போது கொஞ்சம் இறுக்கமாக- உறைப்பாகப் பேசிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற நினைப்பில் இவர்களின் சீவியமும் ஓடுகிறது.

ஆக, ஒற்றையாட்சிக்குள் தீர்வு காண்பதற்கு இணக்கம் தெரிவித்த சம்பந்தருக்கு இப்போது ஓர் உண்மை புலப்படுகிறது. அந்த உண்மை ஒற்றையாட்சிக்குள்ளும் அரசு தீர்வைத் தரப்போவதில்லை என்பதுதான்.

இலங்கை அரசாங்கத்தின் சமகாலப் போக்கைப் பார்க்கும்போது இலங்கையில் தமிழர்களுக்கு இனப்பிரச்சினை கிடையாது. மாறாக இலங்கைத் தமிழர்களிடம் சாதிப் பிரச்சினையே கடுமையாக உள்ளது. இந்தச் சாதிப்பிரச்சினை தமிழர்களால் ஏற்படுத்தப்பட்டது.

எனவே இதை அவர்கள் தீர்த்துக்கொண்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற கருத்தை முன்வைப்பதற்கு’ அரசு தயாராகி வருகிறது. இதற்குக் கட்டியம் கூறும் வகையில் சாதிப் பிரச்சினை என்பதை அரசியலமைப்புச் சீர்திருத்தக் குழுவினர் முன்னிறுத்தத் தொடங்கியுள்ளனர்.

நிலைமை இவ்வாறாக மாறும் என்று கனவிலும் நினைத்திருக்காத சம்பந்தருக்கு நல்லாட்சியின் நிலை மாற்றம் பேரதிர்ச்சியைக் கொடுத்தது.

அந்தோ! 2016 இல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று மக்களிடம் கூறிவிட்டேன். நான் கூறுவதை நம்புங்கள் என்றும் சொல்லிவிட்டேன்.

இந்நிலையில் நல்லாட்சியினர் தமிழர்களுக்கு இனப் பிரச்சினை என்று இல்லை; சாதிப்பிரச்சினைதான் உள்ளது என்று தொப்பியைப் பிரட்டுவதால் சமஷ்டி என்பதை மீளவும் கையிலெடுப்பதுதான் ஒரே வழி என்று முடிவு கட்டினார்.

அதன் வழியில்தான் கூட்டமைப்பின் நகர்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

நிலைமை இதுவாக இருக்கையில், இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை தயாரித்த தமிழ்மக்கள் பேரவை அதனை அரசியல் சீரமைப்புக்குழுவிடமும் இந்தியா மற்றும் பிரிட்டிஷ், ஐரோப்பிய யூனியன் உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடம் கையளித்து வருவது, இலங்கை அரசின் ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்ற முடிவில் மாற்றத்தை ஏற்படுத்தவே செய்யும்.

இந்த மாற்றத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வலியுறுத்துமாக இருந்தால் இலங்கை அரசு நினைப் பதை கொடுப்பது என்பதை விட, தமிழ் மக்கள் எதிர்பார்ப்பதைக் கொடுப்பதே நியாயம் என்ற நிலைப்பாட்டை ஏற்படுத்த முடியும்.

விதுரன்




மிக மிக நீண்ட காலத்துக்கு முன் ஆல்ப்ஸ் மலையின் சாரலில் ஒரு சின்ன நாடு இருந்தது. அது ஓர் பனி படர்ந்த நாடு. அந்த நாட்டை ஆண்டு வந்தான் மன்னன் ஒருவன்.

# பனிக்கட்டித் தேவதை

அவனுக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அவள் அழகே வடிவானவள். அவளுடைய அழகு, உலகம் பூராகவும் பேசப்படத் தக்க அழகாக இருந்தது. ஆகவே அவளை எப்படியாவது மணந்து கொள்ள வேண்டும் என்று பன்னாட்டு இளவரசர்களும் போட்டியிட்டனர்.

Panikatiஎனவே, தன்னை மணக்க வருபவர்களுக்கு அவள் போட்டி ஒன்றை வைத்தாள். அந்தப் போட்டியில் வெல்பவர்களை மணந்து கொள்வதாக அறிவித்தாள்.

தன்னை மணக்க வரும் இளவரசனுக்கு முதலில் ஒரு விருந்து தருவாள். அப்போது அவனுடன் அவளும் அந்த விருந்தில் கலந்து கொள்வாள். அதன் பிறகு ஒரு தட்டில் ஒரு பனிக் கட்டியைக் கொணரச் செய்து அவள் முன் வைப்பாள். அவனுடைய கையில் கெட்டியான நூல் ஒன்றினைக் கொடுத்து அதன் உதவியினால் பனிக் கட்டியை உயரத் தூக்கிக் காட்டச் சொல்வாள். அப்போது அந்தக் கயிற்றைப் பனிக் கட்டியைச் சுற்றிக் கொண்டு போகக் கூடாது என்று நிபந்தனையும் விதிப்பாள்.

அதாவது நூலின் ஒரு முனையானது பனிக் கட்டியின் மேல் பட்டுக் கொண்டிருக்க வேண்டும். வேண்டுமானால் அதைப் பனிக்கட்டியில் ஒட்டிக் கொள்ளலாம். ஆனால் அதை ஒட்ட பனிப் பொடியைத் தான் உபயோகிக்க வேண்டும் என்பதும் நிபந்தனைகளில் ஒன்று.


ஒவ்வொரு நாளும் பலப்பல ராஜகுமாரர்கள் வந்தனர். அவர்கள் காலை, மதியம், இரவுச் சாப்பாட்டு வேளையில் அழைக்கப்பட்டனர். தோற்றவர்களைச் சிறையில் பிடித்து அடைக்கும்படி கட்டளையிட்டாள்.

ஏன், இவ்வளவு பேசும் நீ அதைச் செய்து காட்டு என்று எவராவது துடுக்காகக் கேட்டால் அவள் அதைச் செய்தும் காட்டுவாள். இது ஏமாற்றும் வேலை அல்ல, எளிதில் வெல்லும் ஒரு சிறு தேர்வுதான் என்பாள். எனவே முகம் வாடி, அவமானப்பட்டு சிறைப் பட்டனர் இளவரசர்கள்! அவர்களை வழக்கமான குற்றவாளிகளை அடைக்கும் சிறைச்சாலையிலே அடைக்காமல் தன் அரண்மனையின் ஒரு பக்கத்திலுள்ள பெரிய மாளிகையிலேயே அடைத்து வைத்தாள்.

நாட்கள் ஓடின. ஓராண்டு விளையாட்டுப் போல ஓடி மறைந்தது. அந்த நாட்டுக்கு அருகிலே இன்னொரு பெரிய நாடு இருந்தது. அந்த நாட்டின் இளவரசனின் பெயர் ஜான். அவன் மேரியாவின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்டான். அவளை மணந்து கொள்ள ஆசைப்பட்டான். எனவே, மேரியாவின் நாட்டில் இருந்த முதல் அமைச்சருக்கு அவன் தனிப்பட்ட முறையில் ஒரு கடிதம் எழுதினான். தான் மேரியாவை மணந்து கொள்ள ஆசைப்படுவதாகவும், ஆகவே மேரியா வைக்கும் போட்டியில் கலந்து கொள்ளக் கிளம்பி வரப் போவதாகவும், எப்போது வர வேண்டும் என்றும் கேட்டிருந்தான்.

அந்த முதலமைச்சர் ஆபத்து ஒன்றில் மாட்டிக் கொண்டிருந்தார். அவர் அங்குள்ள இயற்கைக் காட்சியை ரசித்துக் கொண்டிருந்த போது எதிர பாராத விதமாக அவர் மீது ஒரு புலி பாய்ந்தது.

அந்த வேளையில் நிலை தடுமாறிய அவர் அங்குள்ள பள்ளத் தாக்கிலே உருண்டார். அது மிகவும் ஆழமான பள்ளத்தாக்கு. அதில் விழுந்தவர் இதுவரை உயிர்



பிழைத்ததே இல்லை. எனவே, அவர் கைக்குக் கிடைத்த மரக் கிளை ஒன்றைப் பிடித்துக் கொண்டு தொங்கினார்.

அவர் ஒரு வேளை தப்பி மேலே வரக் கூடும் என்பதை உணர்ந்த புலி மேலேயே உட்கார்ந்து இருந்தது. இதை அருகில் இருந்த மரத்தின் மீது அமைக்கப்பட்டிருந்த பரண் ஒன்றில் அமர்ந்திருந்த ஜான் கவனித்தான்.

ஆகவே, அவன் விரைந்து செயலாற்றினான். புலியை அம்புகள் எய்து கொன்றான். கால தாமதம் இல்லாமல் காட்டுக் கொடிகளை முறுக்கி பள்ளத் தாக்கில் தொங்கிக் கொண்டிருந்த முதல் அமைச்சரைப் பிடித்து வெளியே வந்து முதல் உதவிகளைச் செய்தான்.

அன்றைய தினத்திலிருந்து ஜானைத் தன் மகன் போல நேசித்தார். எனவே, தான் அவருக்குக் கடிதம் எழுதி இருந்தான் ஜான். முதல் அமைச்சர் அதற்கு உடனடியாகப் பதில் எழுதினார்.

""அவசரப்படாதே! போட்டியில் வெற்றி பெறுவது எப்படி என்பதை தெரிந்து கொள்ளலாம்.அதன் பின் போட்டியில் கலந்து கொள்ளலாம்!"

இதற்கிடையே அமைச்சர், மேரியா போட்டியில் எப்படி வென்று காட்டுகிறாள் என்று கண்ணும் கருத்துமாக கண்காணித்தார். ஒரு நாள் அவர் அதைக் கண்டு பிடித்தும் விட்டார்.

அதை அவனுக்குத் தெரியப் படுத்தினார் அமைச்சர்.""உடனே புறப்பட்டு வா" என்று அழைப்பும் அனுப்பினார். ஜான் புறப்பட்டு வந்தான். மேரியாவைச் சந்தித்தான். போட்டியில் கலந்து கொள்ளப் போகிறேன் என்றான்.

"போட்டியில் தோற்றால் சிறைச்சாலை!" என்று கூறினாள் மேரியா. ஜான் சம்மதித்தான். முதலில் விருந்தளிக்கப்பட்டது. பின் ஒருதட்டிலே பனிக் கட்டி கொண்டு வந்து வைக்கப்பட்டது. ஓர் உறுதியான நூலும் அவனிடம் தரப்பட்டது.

மேரியா கூறினாள்.

"இந்த நூலை உபயோகித்து இந்தப் பனிக் கட்டியினைத் தூக்குங்கள்!"

உடனே ஜான் நூலை எடுத்துப் பனிக்கட்டியின் அடியில் விட்டு சுற்றிலும் கட்டப் போனான். அப்போது மேரியா கூறினாள்.

"இளவரசே! நீங்கள் அப்படிச் செய்யக் கூடாது. அது சிறு பிள்ளை கூடச் செய்யும், பிள்ளை விளையாட்டு. நூலின் ஒரு நுனி மட்டுமே பனிக் கட்டியின் மேலே இருக்க வேண்டும். அந்த நுனியானது பனிக் கட்டியைப் பற்றிக் கொள்ள,

இன்னொரு நுனியைக் கொண்டு தூக்க வேண்டும்.

அதை ஒட்ட வைக்க இங்கு இருக்கும் பனித் தூளை வேண்டுமானால் உபயோகிக்கலாம்!"

இவ்வாறு, கூறிய அவள் ஒரு கிண்ணத்தில் பனித் தூளைப் போட்டு அவனிடம் தந்தாள்.

""ஓஹோ. இதை முன்பே சொல்லி இருக்கலாமே! இந்தப் பனிப் பொடியைக் கொண்டு இந்தப் பனிக் கட்டியை எளிதில் தூக்கி இருக்க முடியுமே!" என்று கூறினான் அவன்.

அவள் கிண்ணத்தைத் தரும் போதே அவளுக்குத் தெரியாமல் தன் வலது கையினால் தன் மடியில் உள்ள ஏதோ ஒன்றை எடுத்துச் சட்டென்று அக்கிண்ணத்தில் விட்டு விட்டு நூலின் ஒரு நுனியினை எடுத்துப் பனிக்கட்டி மீது வைத்துப் பனித் தூளை எடுத்து அதில் நன்றாக அமுக்கினான்.

பின் மேலும், சிறிதளவு பனிப் பொடியை எடுத்து அதில் போட்டு நன்றாக அமுக்கினான்.

"இந்தப் போட்டியில் நான் வெற்றி பெற்றால் நீ என்னை மணந்து தான் தீர வேண்டும், இல்லையா?" என்று கேட்டான்.

"ஆம். நிபந்தனையே அதுதான்! தோற்று விட்டால் உங்களுக்குச் சிறைவாசம்தான்!" என்று சொல்லிச் சிரித்தாள் அவள். இவ்வாறு அவர்களுக்குள் உரையாடல் ஒரு சில நிமிடங்கள் நடந்தன. அவன் நூலில் மற்ற நுனியைப் பிடித்துத் தூக்கினான். மெதுவாக அவன் அதைத் தூக்க அந்தப் பனிக் கட்டி உயரக் கிளம்பிச் சென்றது.

மேரியா ஆச்சரியமடைந்தாள். மறுகணமே அவள் மிக்வும் கோபத்தையும் அடைந்தாள். இருவருக்கும் காரசாரமான விவாதம் நடைபெற்றது. அந்த விவாதத்தில் ஜானே வென்றான். அவள் ஆத்திரத்துடன் தன் அந்தப்புரம் சென்றாள்.

ஜான் அதன் பின் எல்லா இளவரசர்களையும் விடுதலை செய்தான். அவரவர் நாட்டுக்கு மரியாதையுடன் அனுப்பி வைத்தான்.

## வர்ணம் தீட்டுங்கள்








வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532




முடி நரைத்துவிட்டது தனக்கென விளம்பரம் தேடுவதில்லை...

கீரிமலை என பெயர் வரக்காரணம் என்ன?

தெறி படம் பற்றி உங்கள் கருத்து?

**கோகிலா** நாதன்திட்டம்

**பெண்களின் நட்பு பற்றி?**

ஆண்களுடன் என்றால் அது நட்பாய் இருக்காது. பெண்களுடன் என்றால் அது நிலைத்திருக்காது.

**தர்ஷி** புன்னைநீராவி

**இக்கால ஆண், பெண் பற்றி?**

பெண்கள் அணிய வேண்டிய தோட்டையும் மெட்டியையும் ஆண்கள் அணிந்து கொண்டு தலைமுடியையும் வளர்த்துக் கொண்டு அலைய பெண்களோ! ஆண்கள் அணியும் ஜீன்சை அணிந்து கொண்டு (லெகின்ஸ் என்ற பெயர் வேறு) அலைய யார் ஆண்கள், யார் பெண்கள் என்ற வித்தியாசமே தெரியவில்லையே.

**திவ்வியா** மட்டுவில்

**24 மணிநேரமும் படிபடி எனக் கூறும் பெற்றோர் பற்றி?**

நன்றாகப் படித்து நல்ல வேலையில் இருக்கும் பெற்றோர்கள் மட்டும்தான் இப்படிக் கூறுகிறார்கள்.

**லயன்சன்** வளலாய்


**கீரிமலை என பெயர் வரக்காரணம் என்ன?**

முன்னொரு காலத்தில் நகுலமுனி எனும் முனிவருக்கு கீரி போன்ற முகம் இருந்ததனால் அவரை அனைவரும் அருவருத்து வெறுத்து ஒதுக்கினர். அவரும் மனமுடைந்து கீரிமலை தீர்த்தக் கரையில் இறைவனை நினைத்து நீராடினார். அவரின் கீரிமுகம் நீங்கி அவருக்கு மனித முகம் கிடைக்கப் பெற்றது. இதன் காரணமாகவே கீரிமுகம் நீங்கியதால் கீரிமலை என பெயர் பெற காரணமாயிற்று.

**தேனுஜன்** யாழ்ப்பாணம்

**துஷ்பிரயோகத்தை எப்படிக் கட்டுப்படுத்துவது?**

நாம் துஷ்பிரயோகம் என்றவுடன் பெண்கள் சிறுவர்களுக்கு எதிரானது என்பது மட்டும் என நினைத்துக் கொண்டிருக்கிறோம். இரண்டு ரூபாய்க்கு வாங்கும் றொபியின் பையை விரித்துப் பாருங்கள் அதை குப்பைக் கூடையில் போட அறிவுறுத்தப்பட்டிருக்கும். ஆனால் அதை நாம் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்கிறோமா? அப்படியெனில் நாமும் துஷ்பிரயோகம் செய்கிறோம் தானே.



**ரஜி** வல்வெட்டித்துறை

**முடி நரைத்துவிட்டது தனக்கென விளம்பரம் தேடுவதில்லை. ஆனால் கோடிக் கணக்கான ரசிகரை வைத்திருக்கும் அஜித் பற்றி?**

இது மட்டுமா மேடை நிகழ்வுகள், கேளிக்கை நிகழ்வுகள், எதிலும் கலந்துகொள்வதில்லை. பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தார்கள் என்பதற்காய் தனது ரசிகர் மன்றத்தையே கலைத்தவர். இப்படி அஜித்தைப்பற்றி சொல்லிக்கொண்டே போகலாம்.




**கௌரிகன்** வளலாய்

**பெண்களின் மனம் எப்படிப்பட்டது?**

தனக்கென்று நினைத்ததை யாரும் தட்டிப் பறிக்க நினைத்தாலே போதும் அதன்பின் அது எரிமலை.

**வனஜா** யாழ்ப்பாணம்

**நடிகை ஹன்சிகாவின் நடிப்புப்பற்றி?**

ஓ... அவா நடிக்கிறவா?
இரண்டு மூண்டு பெடியளிட்ட கேட்டன் அவங்கள் வேற மாதிரியெல்லோ சொன்னாங்கள். ஏதோ கொழுக்கட்டை மோதகமெண்டு.

உங்கள் கேள்விகளை அனுப்புங்கள்

குறுந்தகவல் (SMS)

021 567 1532

**கமல்** நெல்லியடி

**பணம் இல்லாவிட்டால் மனிதன் எப்படி இருந்திருப்பான்?**

மனிதனாக இருந்திருப்பான்.

**தர்ஷினி** விசுவமடு

**காதலித்து திருமணம் செய்வது தப்பா?**

காதலித்துவிட்டு திருமணம் செய்யாமல் விடுவதுதான் தப்பு.

**தர்மதன்** பொலிகண்டி

**ஒருபடம் வெற்றிப் படமா தோல்விப்படமா என்று எப்படி கண்டுபிடிப்பது?**

படத்திற்கு போட்ட காசை எடுத்தால் அது வெற்றிப்படம். போட்ட படத்தை நான்கு நாட்களில் தியேட்டரில் இருந்து எடுத்தால் அது தோல்விப்படம்.

**வேந்து** மட்டுவில்

**கிராம வாழ்க்கை பற்றி?**

சோலை நிறைந்த தோட்ட மத்தியில் ஓலைக் குடிசை. சாணமிட்டு மெழுகிய தாட்டாந்தரை. தாகமெடுத்தால் இளநீர். சாயங்காலமே கொஞ்சம் பதநீர். தென்றல் தேகம் தொட சொர்க்கம் சென்றதுபோல் சயனம். ஆஹா... இப்போ அது வெறும் நினைவு மட்டும் தான்.

**பிரஜன்** மட்டுவில்

**தெறி படம் பற்றி உங்கள் கருத்து?**

அடுத்த சுப்பர் ஸ்ரார் விஜயா, அஜித்தா என்ற போட்டியில் விஜய் வைத்த மைல்கல் தெறி. அடுத்த அஜித் படம் வரட்டுமே அதன்பின் பேசிக் கொள்வோம்.

**நந்தகுமார்** மானிப்பாய்

**நம்ம நாடு எங்க போகுது?**


என்ன செய்ய அடிமைப்பட்ட இனமாக சபிக்கப்பட்டவர்கள் தமிழர் நாம். எல்லாம் எட்டப்பன்களாலும் எலும்புத் துண்டுகளுக்கு ஆசைப்பட்டவர்களாலும்தான். அவர்கள் இப்போதும் எம்மத்தியில் நின்று தேசியம் பேசுவதுதான் வேடிக்கைக்குரியது.

**கௌசிதாஸ்** குப்பிளான்

**மகாபாரதத்தில் கதாநாயகன் யார்?**

பாரதப் போரை தனி ஒருவனாக நின்று வழி நடத்துகிறானே. தர்மம் அழிந்து அதர்மம் மேலோங்கும் வேளையில் நான் அவதாரம் எடுப்பேன் என்கிறானே அவன்தான்.

# கவிதைக் கலசம்



சட்டம் பேசி
அதில் பல திட்டம் பேசி
புள்ளடி வாங்கும் வரைக்கும்
ஒரு பெரிய வட்டம் பேசி
கதிரையில் அமர்ந்த பின்
தமிழர் எமக்கு நாமம் பூசி
விலங்கிற்கு வாலையும்
தமிழர்க்கு தலையையும் காட்டும்
தலைகளே
முதலில் கட்டம் போட்ட
சாரங்களின் சகவாசத்தை
கழற்றி விடுங்கள்- ஏனென்றால்
அடுத்த தேர்தலில் உங்களுக்கு நாம்
ஒரு நல்ல திட்டம் வைத்திருக்கிறோம்

மாவை. நா.கஜேந்திரன்

## நவீன புனைபெயர்

பற்றி எரிந்த நாட்டிற்கு இரையானோம்
அடையாளங்கள் அழிந்து போக
துன்ப துயரங்களுக்குள் தடைப்பட்டு
அவமானங்களை அணைத்துக்கொண்டே
பிறப்பின் உரிமைகளை மறந்து
அலை புரண்டு ஓடிச் சென்றோம்
அடைக்கலம் தேடிய வண்ணம்
கோலப் புன்னகை மறந்து
வீரத்தின் திறன்களை இழந்து
அச்ச வாழ்க்கை முற்றுகையிட
சொந்த மண்ணில் முகத்தை புதைத்து
மரணத்திற்கு வரவேற்பளித்தோம்
இனி இழப்பதற்கு எதுவுமல்லாமல்
நெஞ்சில் ரவைகளின் அடையாளம் பதித்து
குண்டுகள் முழக்கம் கேட்டு
இரத்த மழைகளில் நனைந்து
அழுவதற்கு கண்ணீர் இல்லாமல்-இன்று
அலைந்து கொண்டிருக்கின்றோம்
அடிமைகள் என்ற புனைபெயர்களோடு

**முல்லை அன்ரன்**

## அரங்கேறாமல் போன என் கவி

என் சிந்தையைக்
கீறிக் கிழித்து வெட்டி
துண்டு துண்டுகளாக
பிரசவமானது கவிதையொன்று
அந்தி மயங்கும் பொழுதும்
வானத்தை முத்தமிடும்
மலை உச்சிகளும்
கரை புரண்டு ஓடும் ஆறும்
பரந்து விரிந்த கடலும்
துள்ளிப் பாயும் கடலலையும்
நீல மேகமும்
வெண்பஞ்சு முகிலிடை
நாணி முகம் புதைக்கும்
வெண்ணிலவும்
மெல்ல வருடும்
தென்றல் காற்றும்
கன்னம் குழி விழச் சிரிக்கும்
என் கனவுக் காதலியுமாக
இயற்கையின் அழகுதனை
எழுத எழுத
கட்டுமீறிப் பாயும்
கற்பனை ஊற்றுக்கு
ஈடு கொடுக்க முடியாமல்
கரங்கள் சோர்ந்திட
கவிதையை நிறைவு செய்து
அடுக்கி வைக்கிறேன் மேசையில்
நாளைய வலம்புரிக்கு சேர்த்திட
நீண்ட நேர விழிப்பில்
கண்கள் சொருகிட
உறங்கிப் போகிறேன்
மிக மிக ஆழமாக
விடி காலையில் எழுந்து
கண்ட காட்சியில்
அதிர்ந்து போகின்றது மனம்
எனது கவிதைகளை
அரங்கேற்ற முடியாமல்
எலியொன்று
கீறிக் கிழித்து வெட்டி
துண்டு துண்டுகளாக்கி
அதில் படுக்கை சமைத்து
போட்டிருந்தது
நான்கு குட்டிகளை

**லீலா சிவவடிவேல்**
**இணுவில் மேற்கு**

## அழியாக் காவியம்

உள்ளுக்குள் உன்னை வைத்து
உணர்வுகளை மெல்லத் தொலைத்து
மேகமாக என்னை நினைத்து
வேகமான தென்றலுடன் இணைத்து
என் இதயந்தனில் கொண்டேனடி
காதல்... இன்று
வெறுங்கூடாய் வேகுதடி
என் தேகம் -பல
இரவுகளோடு போராடி- உன்
நினைவுகளிலே தினம் நீராடி- உன்னை
கற்பனையில் கவியாக எடுத்து
என் முதல் வரியாக தொடுத்து
வரைகிறேனடி ஓர் காவியம்
நீயே என்றும் என்னில்
அழிக்க முடியா ஓவியமும்
காதல் தேவியும்...

**ஞா.கட்டைக்கவிதன்**
**நெடுந்தீவு**

# மௌனத்தின் தேடல்- 299



## மண்ணின் மகிமை

மண்ணின் மகிமையை
மாண்புடன் விளங்க வைக்கும்
மண்பானை சட்டி வனையும்
பண்பாட்டுக் கைவண்ணம்
ஆண்டாண்டு காலமாய்
வண்ணமுறச் செய்யுந் தொழில்
உலோகப் பாத்திரங்களில் சமைப்பது
ஆரோக்கியத்துக்குகந்ததல்ல
பழைமையை மறந்திடாது
வாழ்வதே சிறந்ததாகும்

துரை
தென்மட்டுவில்

## புதுமை காணும் பழைமை

கொளுத்தும்
கோடை வெயிலுக்கு
மட்பாண்ட உணவுகள்
அருமருந்து
பண்பாட்டின்
அடையாளமாம் அவை
சில மனிதரின் வாழ்வாதாரமாம்
செய்யும் தொழிலே
தெய்வம் அதை
மறந்திடாதே மனிதா
நிலைமாறும்
மனிதர்கள் மத்தியில்
உன் தொழிலுக்கான
கேள்வி நிரந்தரமே...

ப.தர்ஷிகா
பொலிகண்டி

## இயற்கையுடன்...

பாரம்பரியமும் பண்பாடும்
பங்கீடு செய்யப்படும்
இந்நாளில்
பயன்பாடுமிக்க பாத்திரங்கள்
பக்குவமாக வனைந்திடுவீர்
உடல் நலத்தின் உறுதிதனை
உயர்வாகப் பேணிடவும்
செலவதனை சின்னதாக்கி
சேமிப்பில் சேர்த்திடலாம்

அணிஞ்சில்
புவபாலன்

## அற்புதமானது

பட்டம் பெற்று தொழில் தேடி
அலையும் நாட்டில்
வனையும் உன்
சுயதொழில் திட்டம்
அற்புதமானது

மா.செழியன்
வேலணை கிழக்கு

## இளைஞருக்கு ஒரு சபாஷ்

அரசாங்க வேலையையே
எதிர்பார்த்து
வீட்டில் முடங்கிக் கிடந்தால்
வீணாய் நம் காலம்தான்
கரைந்திடும்
இந்த இளைஞரைப்போல
சுயமாய்த்தொழில் செய்தால்
நிச்சயம் நாம் வாழ்வில்
உயர்ந்த நிலையை அடைந்திடலாம்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## மட்பாண்டம் மறைந்து போக

நம்வீடு கொண்ட விறகு
அடுப்பு விலகிப்போக
கப்பல் ஏறி வந்த காஸ்
அடுப்பில் கறி சமைக்க
கடைவந்த சில்வரில்
சாதம் பொங்க– சுவை
கூடியே தந்திடும்
மட்பாண்டமது மறந்து போக
நாம் வீடுதோறும் கொண்ட
எம் தொழில் வினாக்குறியானதே

கதிர்ஷன்
சந்நிதி

## மண் பயன்

எம் மண்ணே உயிர் வாழ்விடம்!
மண்வீடே குளிர்ச்சியின் பயன்
மண் திண்ணைகளே சாணியின்
சுகாதாரப் பயன்!
மட்பாண்டங்களே சமையல் பயன்!
மண் சிலைகள் பொம்மைகளே
கலாசார பயன்!
மண் கிணற்று நீரே பருகும் பயன்!
மண்ணை விட்டால் மண்ணுக்குள் நாம்
பிடி மண் விடாதே!
குடிதாகம் தீர
உணவும் பெறு மண்ணில்!

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

## துளிர்க்கப் போகிறது

சித்திரமும் கைப்பழக்கம்
செந்தமிழும் நாப்பழக்கமென்ற
சித்திரத்தை சிந்தையில்
சீர்தூக்கிப் பார்த்து
பொறுப்போடு
சேவையாற்றுவதை விடுத்து
வெட்டிப்பேச்சால் வீண் பொழுதை
தொட்டுச் செல்லும்
நல்லுள்ளங்களே...
நாட்டுக்காய் உழைப்பது
எம் கடன் என்பதை நினைந்து...
செயலாற்றும் நிலை எப்போது
எம் மனதில் துளிர்க்கப்போகிறது

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

# மௌனத்தின் தேடல் -300



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 04.05.2016ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# நீங்கள் அப்பாவா? அப்படியென்றால் இதைப்படியுங்கள்

**அன்பு என நினைக்கும் போதே நமக்கு தோன்றுவது என்னவோ "அம்மா" என்ற சொல்தான். அன்பின் உருவமே அம்மாதான். ஆனால், ஒரு தந்தையின் அன்பை நாம் எவ்வளவு பெரிய மனிதராக ஆகிறோம் என்பதை வைத்து தான் அறிந்துகொள்ள முடியும்.**

**இந்தியாவின் இன்ஃபோஸிஸ் நிறுவனத்தின் நிறுவுநரும், CEOவுமான, தொழிலதிபரும் கோடீஸ்வரருமான நாராயண மூர்த்தி, தன்னுடைய மகளுக்கு எழுதிய உருக்கமான கடிதம் இணையத்தில் வெளியாகியுள்ளது.**


அன்புடன் அக்ஷதாவுக்கு.

ஒரு அப்பாவாக ஆனது நான் நினைத்திராத அளவு என்னை மாற்றிவிட்டது. நான் மீண்டும் பழைய ஆளாக மாற முடிந்ததே இல்லை. உன்னுடைய வரவு கற்பனை செய்து கூட பார்க்காத அளவுக்கு மகிழ்ச்சியையும், ஒரு பெரிய பொறுப்பையும எனக்கு தந்தது. இப்போது நான் வெறும் மகனோ, கணவனோ, வளர்ந்து வரும் நிறுவனத்தின் ஊழியரோ மட்டும் இல்லை. நான் இப்போது ஒரு மகளின் வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் அவளின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப மாற வேண்டிய தந்தை.

உன்னுடைய பிறப்பு எல்லா வகையிலும் என் வாழ்வில் ஒரு அடையாளமாக மாறி விட்டது. வேலையிடத்தில் மிகவும் சிந்தித்தும் அளவிட்டும் மட்டுமே நான் பேச்சுவார்த்தை நிகழ்த்துகிறேன். வெளி உலகோடு நான் செய்யும் பரிமாற்றங்கள் அனைத்துமே மிகவும் கண்ணியமாகவும், முதிர்ந்த சிந்தனை உடையதாகவும் மாறி விட்டன. ஒவ்வொரு மனிதரையும் மிகவும் மரியாதையாகவும் கவனமாகவும் அணுக வேண்டிய அவசியத்தைப் புரிந்து கொண்டேன். ஏனெனில், என்றேனும் ஒருநாள் நீ வளர்ந்து வெளி உலகை புரிந்து கொள்ளும்போது, உன் தந்தை தவறிழைத்து விட்டார் என நீ எண்ணக் கூடாது.

அடிக்கடி என் மனம், நீ பிறந்த நேரத்திற்கு சென்று விடுகிறது. நானும் உன் அம்மாவும் அப்பொழுது மிகவும் இளமையானவர்கள். வாழ்க்கையில் தடம் பதிக்க அப்போதுதான் மிகவும் முயற்சித்துக் கொண்டு இருந்தோம். நீ பிறந்த 2 மாதங்களில் ஹூப்ளியில் இருந்து மும்பைக்கு வந்து விட்டோம். வெகு விரைவிலேயே, குழந்தையையும் வளர்த்துக் கொண்டு வேலையிலும் கவனம் செலுத்துவது மிகவும் கடினம் என உணர்ந்து விட்டோம். அதனால், சிறிது காலம் நீ உன் தாத்தா, பாட்டியோடு ஹூப்ளியில் இருக்க வேண்டும் என முடிவு செய்தோம். அந்த முடிவிற்கு வர நான் மிகவும் சிரமப்பட்டேன். ஒவ்வொரு வாரமும் பெல்காமிற்கு விமானத்தில் வந்து அங்கிருந்து ஹூப்ளிக்கு காரில் வருவேன். அதற்கு நிறைய பணம் செலவானது. ஆனால், என்னால் உன்னைக் காணாமல இருக்க முடியவில்லை.

அடிக்கடி, "என் குழந்தைகளுக்கு நான் என்ன அளித்துள்ளேன்?" எனும் கேள்வி என்னிடம் கேட்கப்படும். நான் அதற்கு கூறும் பதில், "உங்கள் தாய்தான் இந்த பெரிய பொறுப்பை தன் தோளில் சுமந்தாள். இப்போது நீங்கள் இருக்கும் நிலைக்கு உங்களைக் கொண்டு வந்ததற்கு நான் அவளுக்கு நன்றி உள்ளவன் ஆவேன். அவள் உங்களுக்கு வார்த்தைகளைக் காட்டிலும் செயலில்தான் அனைத்தையும் கற்றுக் கொடுத்தாள். உனக்கும் ரோஹனுக்கும் அவள் எளிமை, சிக்கனம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் கற்று கொடுத்திருக்கிறாள்" என்பதுதான். ஒருமுறை பெங்களூரில் இருக்கும் போது உன் பள்ளி விழாவிற்கு நீ ஒரு சிறப்பான உடையை அணிய வேண்டி இருந்தது. 80களில் Infosys தொடங்கிய காலம் அது. அப்போது அடிப்படையான விடயங்களைத் தவிர்த்து, வேறு ஏதும் வாங்க எங்களிடம் வசதி கிடையாது. உன் அம்மா உன்னிடம் "அந்த உடையை வாங்க முடியாது. அதனால் நீ அந்த போட்டியில் பங்கேற்க வேண்டாம்" எனக் கூறினாள். வெகு நாட்களுக்குப் பிறகு, நாங்கள் ஏன் அப்படி உன்னிடம் நடந்து கொண்டோம் என புரியவில்லை எனக் கூறினாய். அன்று ஒரு குழந்தையாக பள்ளியில் அந்த விழாவில் கலந்து கொள்ளாமல் நீ வருத்தப்பட்டது தெரியும். ஆனால, அது உனக்கு வாழ்க்கையில் சிக்கனத்தைப் பற்றிய மிகப் பெரிய பாடமாக அமைந்தது.




ஆனால், வாழ்க்கை இப்போது மாறி விட்டது. நம்மிடம் போதுமான அளவு பணம் உள்ளது. ஆனால், உனக்குத் தெரியும் நம் வாழ்ககை முறை எளிமையானது என்று. ஒரு முறை நமக்கு சிறிது பணம் வந்ததும், உங்களை காரில் பள்ளிக்கு அனுப்பலாம் எனக் கூறினேன். ஆனால் உன் அம்மா, "நீயும் ரோஹனும் எப்போதும் போல் ஆட்டோவில் மற்ற மாணவர்களுடன் செல்லட்டும்" எனக் கூறினாள். நீ ஆட்டோவின் ஓட்டுநர் "மாமா"வுடனும மற்ற குழந்தைகளுடனும் நல்ல நட்பு கொண்டு மகிழ்ச்சியோடு சென்றாய். சில நேரத்தில் இப்படி சின்ன சின்ன விடயம்தான் வாழ்வில் மகிழ்ச்சி.

நீ அடிக்கடி என்னிடம், "மற்ற குழந்தைகள் வீட்டில் தொலைக்காட்சி இருக்கும்போது ஏன் நம் வீட்டில் மட்டும் இல்லை?" எனக் கேட்பாய். ஆனால் உன் தாய், "படிப்பதற்கும், விளையாடுவதற்கும், நண்பர்களைச் சந்திப்பதற்கும் நேரம் இருக்காது" எனக் கூறி தொலைக்காட்சி வாங்க வேண்டாம் எனக் கூறிவிட்டாள்.

ஒரு மகள் திருமணமாகி செல்லும் போது, தந்தையின் மனநிலை மிகுந்த குழப்பத்தில் இருக்கும் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. அவளுடைய வாழ்வில் எல்லாமுமாக இருந்த அப்பாவின் இடத்தை, நம்பிக்கையுடைய வேறு ஒரு இளைஞன் பிடிப்பான். அவனிடம்தான் இனி அவள். அவளது சோகம், மகிழ்ச்சி என அனைத்தையும் பகிர்ந்து கொள்வாள் என்னும் விடயத்தை அனைத்து அப்பாவும் வெறுப்பார்கள். நீ உன் வாழ்க்கை துணையைக் கண்டுவிட்டாய் எனக் கூறியதும் எனக்கும் சிறிது சோகமாகவும், பொறாமையாகவும்தான் இருந்தது. ஆனால், நான் ரிஷியைச் சந்தித்ததும் அவனது தோற்றமும், தைரியமும், அனைத்திற்கும் மேலாக அவன் நேர்மையும் என்னைக் கவர்ந்த போதுதான், "நீ ஏன் உன் மனதைப் பறிகொடுத்தாய்?" எனத் தெரிந்து கொண்டேன். அதன் பிறகுதான் நீ அவனுடன் உன் வாழ்க்கையை வாழ நான் ஒப்புக் கொண்டேன்.

ஜூனியர் விகடன்




# அதிசயங்கள் நிறைந்த மனித உடல்

❖ மனித தாடை 80 கிலோ எடையை இழுத்து அசைக்கக் கூடியதாகும்.

❖ சிரிப்பது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துகிறது. 6 வயது வரை குழந்தைகள் ஒரு நாளைக்கு 300 தடவைகள் சிரிக்கின்றன. 18 வயதைக் கடந்தவர்கள் ஒரு நாளைக்கு 100 தடவை மட்டுமே சிரிக்கிறார்கள்.

❖ ஒரு மனிதனின் உடம்பில் 600-க்கும் அதிகமான தசைகள் இருக்கின்றன. இது உடல் எடையில் 40 சதவீதமாகும்.

❖ உலகில் மனிதர்களிடம் பொதுவாக காணப்படும் இரத்த குருப் ஓ. அபூர்வமான இரத்த குருப் ஏ-ஹெச். இந்த இரத்த குருப் கண்டு பிடிககப்பட்ட பின்னர் உலகில் மொத்தம் 10 பேரிடம் மட்டுமே இருப்பது அறியப்பட்டுள்ளது.

❖ மனிதனின் நரம்புகளை ஒட்டுமொத்தமாக நீளமாக்கினால அது 45 மைல் நீளமாக இருக்கும்.

❖ மனிதனின் உடலில் ஒரு நிமிடத்திற்கு 300 கோடி அணுக்கள் செத்து மடிகின்றன.

❖ மனித மூளையில் 85 சதவீதம் தண்ணீர்தான் உள்ளது.

❖ ஒரு மனிதனின் தலையில் சராசரியாக ஒரு இலட்சம் முடிகள் இருக்கும்.

❖ ஒரு மனிதன் தனது வாழ்நாளில 16 ஆயிரம் கலன் தண்ணீர் குடிக்கிறான்.

❖ வளர்ந்த மனித உடலில் 600 தசைகள், நூற்றுக்கும் மேலான இணைப்புகள், ஒரு இலட்சம் கிலோ மீற்றர் நீளம் உள்ள இர த்தக் குழாய்கள் 13000 மில்லியன் உயிரணுக்களும் உள்ளன.

❖ மனிதனுக்குள்ள 206 எலும்புகளில் பெரும்பாலானவை கைகளிலும் கால்களிலும் உள்ளன.

❖ ஆண்களில் விந்துவை உண்டாக்கும் விரை (விந்தகம்) நாள ஒன்றுக்கு 10 மில்லியன் வரை விந்து உயிரணுக்களை உற்பத்தி செய்யும். இவை அப்படியே உயிருடன் ஆறு மாத காலம் இருந்தால் மற்றொரு உலக சனத்தொகையை உருவாக்கக்கூடும்.

❖ மனித இதயம் ஒரு இயல்பான வாழ்நாளில் 2000 மில்லியன் முறை துடிக்கும். இந்த கால கட்டத்தில் 500 மில்லியன் இரத்தத்தை பம்ப் செய்யும். மனிதன் தூங்கும்போது கூட இதயம் ஒரு மணி நேரத்தில் சுமார் 340 லீற்றர் இரதத்தை பம்ப் செய்யும். ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் முறை துடிக்கும்.

❖ இளைஞனின் நாடித்துடிப்பு ஒரு நிமிடத்திற்கு 70 லிருந்து 72 முறை. ஆனால் இளம் பெண்ணின் நாடித்துடிப்பு ஒரு நிமிடத்திற்கு 78 லிருந்து 82 முறை இருக்கும்.

❖ மனிதனின் சிறுநீரகத்தில் ஒரு மில்லியன் வடி கட்டிகள் இருக்கின்றன. அவை ஒரு நிமிடத்திற்கு 1.3 லீற்றர் இரத்தத்தை வடி கட்டுகினறன. அந்த வடிப்பில் ஏற்பட்ட கழிச்சலை சிறுநீரகம் வெளியேற்றுகின்றன.

❖ மனித உடலில் உள்ள இரத்தத்தை நிமிடத்திற்கு 4.5 லீற்றர் விகிதம் நுரையீரலில் சுத்தப்படுத்தும்.

❖ மனித உடலில் சிவப்பணுக்களை எலும்புச் சோறு (எலும்பின் மச்சை) தயாரிக்கிறது. அந்த அணுக்கள 100லிருந்து 120 நாட்கள் வாழ்கினறன. மனித வாழ்வில் சுமார் அரை தொன் சிகப்பணுக்கள் தயாராகும்.

❖ ஒரு மனிதன் தன்னுடைய வாழ்நாளில் 50 தொன் உணவை சாப்பிடுகிறான். 50 ஆயிரம் லீற்றர் திரவத்தை குடிக்கிறான்.

❖ நாம் தினமும் கண் இமைகளை திறக்கவும் மூடவும் செய்கிறோம் அல்லவா? இந்த செயல் 6 விநாடிக்கொருமுறை நடக்கிறது. அதன்படி இந்த சிமிட்டலை நாம் நம்முடைய வாழ்நாளில் 250 மில்லியன் முறை (25 கோடி முறை) செய்கிறோம்.

❖ மனிதனுக்கு 15 வயது வரையில்தான் மூளை வளரும்.

❖ சாதாரண மனிதனின் தலையில் 10 ஆயிரம் ரோமங்கள் உள்ளன.

❖ ஒரு விஞ்ஞானி, மனிதனின் மரணத்திற்கு சில நொடிகளுக்கு முன்பு இருந்த எடையும் மரணமடைந்த உடனே இருந்த எடையும் ஒப்பிட்டு பார்த்து 21 கிராம் குறைவாக இருந்ததை அறிந்து அதன் மூலமாக ஜீவான்மாவின் எடை 21 கிராம் என்று நிரூபித்தார்.

❖ நாம் ஒரு நிமிடத்திற்கு சுமார் 25 முறை கண் இமைகளை மூடி திறக்கிறோம்.

❖ ஒரு ஆரோக்கியமான மனிதன் ஒரு நாளில் (24 மணிகளில்) 23000 முறை மூச்சிழுப்பான்.

❖ பெரும்பாலோர் இரவுத் தூக்கத்தில் 40 முறை அப்படியும் இப்படியும் புரளுவார்கள்.

❖ மனித உடலில் உள்ள அனைத்து இரத்தக் குழாய்களை வரிசையாக இணைத்தால் மொத்தம் ஒரு இலட்சம் கி.மீ நீளத்திற்கு சேரும். அந்த நீளம் பூமத்திய ரேகையை நான்கு தடவை சுற்றி வரக்கூடும்.

❖ மனிதன் மனமார சிரிக்கும் பொழுது 17 தசைகளும், கோபப்படும் பொழுது 43 தசைகளும் சுருக்கமடைகின்றன.

ஒரு மனிதன் இருமும் போது இருமலின் வேகம் மணிக்கு 100 கிலோ மீற்றர்.

❖ ஒரு சிசுவின் கையில் ரேகைகள் 3ஆவது மாதத்திலிருந்து உருவாகின்றன.

❖ கை, கால்கள் நகங்களின் அடிப்பகுதியிலிருந்து அதன் மேல் பாகம் வரை வளர்வதற்கு 6 மாதங்கள்ஆகின்றன. கால் நகங்களை விட கைவிரல் நகங்கள் வேகமாக வளர்கின்றன.

❖ ஒரு மனிதனுக்கு சரியாக தினமும் 40 முதல் 100 தலைமுடிகள் உதிர்ந்து விடுகின்றன.

❖ கணனியில் சில மணி நேரங்கள் பணிபுரிந்து விட்டு பார்வையை சில நொடிகள் வெள்ளை நிற காகிதத்தில் செலுத்தினால் அந்தக் காகிதம் இளஞ்சிவப்பு நிறமாகத் தெரியும்.

❖ ஆண்களின் உடல் பாகத்தில் மிகவும் வளரக்கூடிய முடி, தாடியில் வளரும் முடிதான். ஏனென்றால் ஒருவர் தனது வாழ்நாளில் தாடியை எடுக்காவிட்டால் அது 30 அடி நீளம் வரை வளர்ந்து விடும்.

❖ 60 வயதாகும்போது நாக்கின் சுவைமொட்டுகளின் பெரும் பகுதி அழிந்து போய்விடுகின்றன.

# கதவுகள் திறப்போம் காற்று உள்ளே வரட்டும்

## சிறுகதை

'இளைய நிலா' இங்கை வாம்மா, குடிக்கத் தண்ணீர் கொஞ்சம் தா,

யார் மாமாவா? வாங்க வாங்க, வெளியிலை கடும் வெயில் என்ன மாமா.

ஓம் பிள்ளை, கடும் வெயில்தான் அடிக்குது.தம்பி வரட்டும் என்று காத்திருந் துட்டுத்தான் வாறன், செழியன் வந்திட்டானா,?

ஓம் மாமா அவர் வந்திட்டார். கிணற்றடியிலை உடுப்புகள் கழுவிக் கொண்டிருக்கிறார். கூப்பிடட்டே?

வேண்டாம் பிள்ளை வேலையை முடிச்சிட்டு வரட்டும். மதுரிகாவை எங்கை காணேலை?

அவள் இப்பதான், சாப்பிட்டுட்டு படுத்தவள். நித்திரையாகிவிட்டாள் போலை இருக்கு. இருக்கட்டும், இருக்கட்டும்.

அப்ப என்ன மாமா சாப்பிட்டனீங்கள்? இங்கை வாருங்கோ சேர்ந்து இருக்கலாமெண்டால் பிடிவாதமாக மறுக்கிறீங்கள்.

இல்லைப்பிள்ளை,எனக்கு அது சுகமாக இருக்கிறது. இண்டைக்கு வெள்ளிக்கிழமையெல்லோ. இலைக்கஞ்சி காய்ச்சி குடிச்சனான். உழுந்துமாவை கொஞ்சம் அதிகமாக போட்டுட்டன் போலை ஜீரணமாகவில்லை.

ஓ.....அப்பாவா?எப்ப வந்தனீங்கள்?இந்த வெயிலுக்காலை....

இல்லைத்தம்பி நேரம் கிடைக்கிறபோது கதைக்க வேண்டியதைக் கதைத்து விட வேண்டும்.

அப்பிடி என்ன அவசரமான விசயம் அப்பா, வெயில் தணிந்தாப்போலை வந்திருக்கலாம்தானே. நான் கொஞ்ச உடுப்புகள் கழுவினனான்.

அதுசரி தம்பி,வெயில் குறையிறதெண்டால் பொழுது பட்டால்தான் குறையும். இரவிலும் சரியான வெக்கை. நல்லவேளையாக வீட்டுக்கூரையை பனை ஓலையால் மேய்ந்திருக்கிறன். ஒரு வகையில ஆறுதலாக இருக்கு. குளிர்ச்சியாகவும் இருக்கு.

ஓம் அப்பா,கண்டபடி மரங்களை வெட்டிச் சாய்க்க, சாய்க்க இயற்கைச் சமநிலை குழம்பி, பருவ மழையும் பெய்யுது இல்லை, மேற்காவுகை மழையும் இல்லை, போற போக்கைப் பார்த்தால் பாலைவனமாகிவிடும் போலை கிடக்கு.

அதுமட்டுமில்லைத்தம்பி, பெய்யிற மழை நீரையும் சேமிக்கிறதில்லை, குளங்களில் தூர் எடுப்பதில்லை, ஆழமாக்குவதில்லை, குளாய்க்கிணறுகளை அமைத்து நிலத்தடி நீரையும் உறிஞ்சி எடுக்கினம்,வரட்சி வராமல் என்ன செய்யும்.

இதற்கும் மேலாக குளங்களை நிரப்பிக் கட்டடங்களைக் கட்டி வாடகைக்கும் விட்டெல்லோ பணம் சம்பாதிக்கின்றார்கள்.

நல்ல தலைமையும் சீரான நிர்வாகக் கட்டமைப்பும் வராவிட்டால் மனிதன் அத்தியாவசிய தேவைகளுக்காக போராடவேண்டி வரும்.

வெள்ளைக்காரன் இங்கை மரம் நட்டதற்குப் பின்னர் இயக்கப் பெடியள்தான் மரம் நட்டு வளர்த்தவை. அதிலும் பெரும்பகுதி யுத்தத்திலை ஷெல்பட்டும்,தேவைகளுக்காக வெட்டியும் என அழிந்து போயிற்றுது,மற்றப்படி பெரும் எடுப்பிலை மரம் நடுவதெல்லாம் படப்பிடிப்புக்குத்தான். அண்டையோடை சரி,பிறகு யார் தண்ணி வார்க்கினம். செம்மணி வெளியில் இப்ப ஒரு புதுமுயற்சி. மரங்களும் வளர்கின்றன.

பிறந்தநாள்,நினைவுநாள், நிறைவு நாளென்று கொண்டாடேக்கையாயினும் ஒவ்வொரு மரம் நட்டு வளர்த்திருந்தால் இவ்வாறான வெப்ப அதிகரிப்பு சரியா என்பது தான் யோசிக்கின்றன்.

இது சரி மட்டுமல்லத்தம்பி, காலத்தின் கட்டாய தேவையும் கூட. எங்கட இனம், மொழி, சனம் என்று திரிந்தவர்களை வெறுப்புடனும் விரக்தியுடனும் வாழவிட முடியாது தம்பி. இதுபற்றி மேலும் கதைக்க விரும்பவில்லை. நாளை நல்லநாளாக இருக்கு,காலை 10 மணிக்கு வளர்மதியை எங்கட வீட்டுக்குக் கூட்டி வரப்போறன்.

தானே மாமி இறந்தவா என்று கூறினீர்கள்?

மாமி இறந்து 27 வருடங்களாகின்றது.இந்தக் காலத்தில் தான் உங்களையும் தமிழரசியையும் படிக்க வைத்து அரசதொழில் பார்க்க வைத்து கலியாணம் கட்டித் தந்து வளர்த்தவர்.மாமாவுக்கு இன்னொரு பெண் தேவைப்பட்டிருந்தால் அந்தக்காலங்களில் அவர் கட்டியிருக்க வேண்டும். வாறவள் உங்களை எப்படி நடத்துவாளோ என்று பயந்து உங்கள் நல்வாழ்வு

வந்திருக்காது.அது போகட்டும் தம்பி நான் நாளைக்கு வளர்மதியை வீட்டுக்குக்கூட்டி வர இருக்கிறன். அது பற்றிக் கதைக்கத்தான் வந்தனான்.

அது அவ்வளவு நல்லதில்லை விட்டுடுங்கோ என்றெல்லவோ கதைச்சனாங்கள். எது நல்லதில்லை தம்பி, அவள் தனியே இருந்து கஷ்டப்படுவது நல்லதில்லை. அவையள் எங்களைப் பாதுகாக்கப் போய் இன்று ஆதரவில்லாமல் இருப்பது நல்லதில்லை. அக்கா என்றும் அண்ணா என்றும் எங்கடைபெடியங்கள் என்று கூறித்திரிந்து விட்டு எல்லாம் இழந்து நிர்க்கதியாய் நிற்கும் போது பார்த்துக் கொண்டிருப்பது நல்லதில்லைத்தம்பி.

நீங்கள் முடிவெடுத்தால் மாற மாட்டீங்களென்பது நல்லாய் தெரியும். ஆனாலும்



சமுதாயம் ஏற்றுக் கொள்ள வேண்டுமெல்லோ. சமுதாயம் என்றால் யார்? நான், நீ, அவள், அவர்,அவைதானே. அதற்கும் மேலாகஎப்ப எங்கடை சமுதாயம் நல்லதை நினைத்தது? அதை விடு. சமுதாயம் என்ற போர்வேக்க ஒளிந்து கொள்ளாதை. உனது கருத்தென்ன?.

நீங்கள் சரியான முடிவெடுப்பீர்களென்பதில் எனக்கு இதுவரை சஞ்சலம் இருந்ததில்லை அப்பா.இது

நீங்களும் வரவேண்டும் என விரும்புறன்.சரி பிள்ளை யோசித்து முடிவெடுங்கோ. ஒருபோதும் கட்டாயப்படுத்த மாட்டன்.மதுரிகா எழும்பி விட்டாளா? பார் பிள்ளை. தாத்தா தன்னுடன் கதைக்கவில்லை என்று அழுவாள்.

ஓம்மாமா,அவள் அங்க எழும்பி வாறாள். உங்கடை குரல் கேட்டுட்டுது போலை.

ஓவாம்மா வா வா மது ரிகா, வாங்கோடா தாத்தாட்டை.

தமிழுக்கும் கணக்குக்கும் 100 மாக்ஸ் எடுத்தனான் தாத்தா.

எனக்குத் தெரியும்தானே. என்ரை பேர்த்தி கெட்டிக்காரி தானே, நன்றாகப்படிக்க வேண்டும்.நன்றாக விளையாடவும் வேண்டும்.வெயில் கொஞ்சம் தணிந்திருக்குப் போலை, நான் போய்வரட்டா

செல்லம்.

ஓம்,போய் வாருங்கள். வணக்கம் தாத்தா.

சரி தம்பி,பிள்ளை நான் போய் வருகிறேன்.

உங்கள் தங்கைச்சிக்கு இப்ப எத்தனை வயசாகின்றது?

என்ன இருந்தாப்போல புள்ளி விபரங்கள் எடுக்கிறாய்?ஒரு காரணமாய்த் தான். இப்ப 27 வயதிருக்குமா?ஓம் 89ஆம் ஆண்டு பிறந்தவள். எனக்கு 2வயது இளையவள்.

தங்கைச்சி பிறக்கும் போது

க்காக தன்னை அர்ப்பணித்தவர். தனது சுகத்தை விட மற்றவர்கள் நல்லாய் இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு உதவவேண்டும் என நினைக்கிறவர்.இப்ப வளர்மதியைக் கூட்டி வர நினைக்கிறார் என்றால் வலுவான காரணம் இருக்குமெண்டு ஏன் யோசிக்க மறுக்கிறீர்கள்.

ஓ,இதுக்குத்தான் இவ்வளவு கேள்விகளும் கேட்டனீயோ? அப்பாவுக்கு இப்ப 60-62 வயதிருக்கும். இவ்வளவு நாளும் மதிப்பு மரியாதையுடன் வாழ்ந்திட்டு இப்பபோய்....

இவ்வளவுகாலமும் இருந்தவருக்கு இன்னும் சில காலம் தனியே வாழமுடியாதெண்டு துணை தேடவில்லை என்று ஏன் நினைக்கக் கூடாது. வளர்மதி அன்ரி தனது இளமைப்பருவத்து உணர்வுகளைப் புதைத்துவிட்டு இனவிடுதலைக்காகப் போராடியவர்.அவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். இப்ப உதவிகள் இன்றி ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பது மட்டு மல்ல,ஏளனம் செய்யிற அளவுக்குத்தான் மக்கள் இருக்கினம். தான் வாழுமட்டும் தன்னோடை உதவியிலும் தனக்குப் பின்னால் தனது அரச ஒய்வூதியம் அவருக்குச் சேரட்டும் என்றும் நினைத்திருக்கலாம் தானே.வளர்மதி அன்ரிக்கும் உதவியது போலுமிருக்கும் தானே.

ஏதோ நீயே முன்னின்று கலியாணத்தை நடத்திவைப்பாய் போல இருக்கு.

மாமா அவசர முடிவெடுக்கிற ஆள் இல்லை.முடிவெடுத்த பின்னர் மாற்றி யோசிக்கிறவரும் இல்லை. நாளைக்குக் கல்யாணம் நடக்கும், நாங்கள் போவதுதான் நல்லது. நீங்கள் உங்கள் தங்கைக்கும் கூறி கூட்டிவரப்பாருங்கள். மாமாவுக்கு பிள்ளைகள் வரவில்லையே என்ற ஏக்கமும் வளர்மதி அன்ரி, ஒற்றுமையாய் வாழ்ந்த குடும்பம் தன்னால் பிரிந்து நிற்கிறதே என்ற பச்சாதாபமும் பட வேண்டாம்.

நீங்கள் வருவீங்கள் என்று எனக்கு நம்பிக்கை இருந்தது. ஆனாலும் ஒரு சிறு சந்தேகமும் இருந்தது.இன்று பௌர்ணமி நாள் முழு நிலவாக வளர்மதி வீட்டை வர இருக்கிறாள்.நான்போய்க் கூட்டிவருவன். நீங்கள் வந்தது சந்தோசம். இங்கை வாடி என்ரை பேர்த்தி என்று மதுரிகாவை அள்ளி அணைத்தார். உங்கடை அத்தையும் வருவாரா

செல்லம் என்று கேட்டபடி.

அதோ தமிழரசியும் குடும்பத்தினரும் வருகின்றார்கள் மாமா.

பிள்ளை நீ என்னைப் புரிந்திருக்கிறது போல எல்லோரும் புரிந்து கொள்வார்களோ என்ற அச்சமும் தமிழரசியின் மாமா, மாமி ஆட்கள் எப்பிடி இந்த விடயத்தை அணுகு வார்களோ என்ற பயமும் இருந்து கொண்டிருக்கு இளைய நிலா.

வாம்மா,தமிழரசி எல்லோரும் ஒன்றாய் கூடி நிற்பது மிகவும் சந்தோசமாய் இருக்கு எனக்கு.எனது தீர்க்கமான முடிவுக்குக்கிடைத்த அங்கீகாரம் இது.

நல்லவை எண்ணினால் பின்னால் வர நாலு பேராவது எப்போதும் இருப்பார்கள்.

சரி பிள்ளைகள் அலுவல்களைக் கவனியுங்கள். நான்போய் வளர்மதியைக் கூட்டிவாறன்.

இங்கை வா பிள்ளை இளையநிலா, இந்தக்குத்து விளக்குகளை ஏற்றம்மா.

இல்லைமாமா.வளர்மதி மாமிதான் இங்கை இனி விளக்கேற்றிவைக்க வந்திருக்கிறார்.

இன்றைய நன்னாளில் அவரே ஏற்றட்டும். வாருங்கோ மாமி விளக்கை ஏற்றுங்கள்.

பொறுங்கோ பொறுங்கோ,இந்த மாலைகளை இருவரும் அணிந்து கொண்டு விளக்கை ஏற்றலாம் என்றவாறு இரு மலர்மாலைகளைத் தமிழரசி தந்தாள்.

ஓ,அது வேறையா? சரி சரி தாருங்கள்.

அதுமட்டுமல்ல,இதுவும் இருக்கிறது என்றவாறு மஞ்சள் கட்டிய மங்கல நாணை எடுத்துத்தந்தார் தமிழரசியின் மாமனார்.

(ஓ அதுவும் நல்லது தான்.ஒரு கல்யாணம்போல நடத்தி முடித்து விட்டீர்கள் அனைவரும் சேர்ந்து. எல்லோருக்கும் நன்றி)

இன்னும் இருக்கப்பா.

அது என்ன?

அங்க பாருங்கோ திருமணப்பதிவுகாரர் வாறார். சட்டப்படியும் இனி எங்களுக்கு இவர்தான் அம்மா. என்னம்மா சரிதானே.

இப்படியொரு குடும்பத்துடன் இணைவதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்றார் வளர்மதி.

இல்லை வளர்மதி நீ உன் இளமைக்காலத்தையும் ஆசைகளையும் தாராளமாக அர்ப்பணித்திருக்கிறாய்.அந் தக் கொடைக்கு எதுவும் இணையாகாது.அந்தத் தியாகத்துக்கு முன்னால் இது ஒரு சிறியது. யாரும் செய்யக்கூடிய அலுவல்தான் நாம் செய்திருப்பது.

ஓம் எனக்கு இண்டைக்கு அப்பம்மா கிடைத்திருக்கிறார் என்று கட்டிக்கொண்டாள் மதுரிகா.

மயூரதன்
யாழ்ப்பாணம்.

# நீங்கள் முதலாளியா? தொழிலாளியா?



அநேகமாக உலக மக்கள் எல்லாரையும் இந்த இரு சொற்களில் ஏதேனும் ஒன்றில் வகைப் படுத்தி விடலாம். சிலர் எப்போதும் வேலையைச் செய்துவிட்டு பிறரிடம் சம்பளத்தை எதிர்பார்க்கும் தொழிலாளிகள், சிலர் பிறரை வேலை வாங்குகின்ற முதலாளிகள். இவர்களில் யார் உசத்தி என்ற குழப்பமே வேண்டியதில்லை. இருவருக்கும் வெவ்வேறு பலங்கள்



உண்டு. இருவரும் இருந்தால் தான் சமூகம் சரியாக இயங்கும்.

தனிப்பட்ட முறையில் நம்மில் சிலர் வாழ்நாள் முழுக்கத் தொழிலாளிகளாகவே இருந்து விடுகிறோம். சிலர் ஒரு கட்டத்தில் மனத்தை மாற்றிக் கொண்டு முதலாளியாகின்றனர்.

சம்பள வேலையில் இருந்தவர் வெளியே வந்து சொந்தத் தொழிலை தொடங்குவது போல!

நெடுநாள் தொழிலாளியாக இருந்த ஒருவருக்கு இந்த முதலாளி முயற்சி பயன்தரலாம். அல்லது தோற்று விடலாம். அவர்கள் மீண்டும் மனத்தை தேற்றிக் கொண்டு வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டியிருக்கிறது.

பல தொழிலாளிகள் இந்த பயத்தாலேயே தங்களுடைய முதலாளிக் கனவை ஒத்தி வைக்கிறார்கள். இன்னும் ஹோம் லோன் இருக்கே, பையன் காலேஜ் முடிச்சுடட்டுமே கொஞ்சம் வாங்க் பலன்ஸ் சேர்ந்தப் புறம் இதைப்பத்தி யோசிக்கலாமே என்றெல்லாம் காரணங்களைக் கற்பித்துக் கொள்கிறார்கள். ஒரே சோகம், இப்படி தள்ளி வைக்கிற பலர் என்றைக்கும் முதலாளிகளாக ஆவதில்லை. ஒரு காரணம் முடிந்தால் இன்னொரு காரணம் என்றேதான் அவர்களுடைய வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கும்.

முதலாளி, தொழிலாளி என்ற இரண்டில் ஒன்றைத்தான் நீங்கள் தேர்வு செய்ய வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இல்லை என்கிறது ஒரு சமீபத்திய புத்தகம். The 10% Entre-Preneur என்கிற அந்தப் புத்தகத்தை எழுதியவர் பேட்ரிக் ஜே மெக்கினிஸ்.

அதென்ன 10% Entre-preneur.

தமிழில் தொழில் முனைவோர் என்று சொல்லப்படும் இந்தப் பதம் முதலாளியைத்தான் குறிக்கிறது. அதேசமயம் அந்தச் சொல்லை சிலருக்கு மட்டும் உரியதாக ஆக்காமல் அதன் மீதுள்ள பயத்தைக் குறைத்து யார் வேண்டுமானாலும் தொழில் செய்ய முனையலாம் என்று ஊக்கப்படுத்துகிறது.

பேட்ரிக் மெக்கினிஸ் இந்தச் சொல்லை நமக்கு மேலும் நட்பாக்குகிறார். திடீரென்று தொழில் ஆரம்பிக்கிறது கஷ்டம்தான். புரியுது. சும்மா 10 வீத தொழில் முனைவோரா இருந்து பாருங்களேன் என்கிறார்.

அதாவது ஒருவர் தன்னுடைய வழக்கமான வேலையைக் கவனித்தபடி 10 வீத நேரம் மட்டும் தொழில் முனைவோராக இருப்பது தனது கனவை முயன்று பார்ப்பது.



இதன் அர்த்தம் அலுவலக நேரத்தில் சொந்த வேலையைக் கவனிப்பது அல்ல. வேலையை விட்டு விட்டு தொழில் ஆரம்பிப்பதற்கு ப[illegible] வேலையில் இருக்[illegible] போதே தனக்கு கிடைக்கும் ஓய்வு நேரத்தில் தொழில் முயற்சிகளைத் தொடங்குவது. அதிலுள்ள நெளிவு சுழிவுகளை கற்றுக் கொள்வது. அதன் பிறகு படிப்படியாக அந்தந்த 10 வீத நேரத்தை அதிகப்படுத்தி முழுநேர தொழில் முனைவோர் ஆவது... தமிழில் ஆழம் பார்த்து காலை விடுவது என்று சொல்லலாம்.

இங்கே 10 வீதம் என்பது வெறும் நேரம் மட்டுமல்ல உழைப்பு, பணமுதலீடு என்று எல்லாமே 10 வீதம் மட்டும்தான். இது எல்லோருக்கும் சாத்தியமாகக் கூடிய ஒன்று.

இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகத் தொழில் முனைவோராவதில் பல நன்மைகள் உள்ளன.

முதலாவதாக தொழில் முனைவோருக்குரிய அந்த மனோநிலை நமக்கு வருகிறதா? என்று நேரடியாகத் தெரிந்த கொள்ளலாம், நாலுபேருடன் பழகலாம், பிஸினஸ் பிடிக்கலாம், ஐந்தாறு பேரை வேலை வாங்கலாம், சொன்ன வேலையை நேரத்துக்குச் செய்து கொடுக்க வருகிறதா? என்று பார்க்கலாம், இன்வோய்ஸ், பர்ச்சேஸ் ஓர்டர், காசு வாங்குவது போன்ற விவகாரங்களைத் கற்றுக் கொள்ளலாம், வங்கிகளுடன் பேசிப்பார்க்கலாம், கடன் முதலீடு போன்ற விடயங்களைத் தெரிந்து கொள்ளலாம்... இத்தனையும் வழக்கமான வேலையில் இருந்தபடி ஓய்வுநேரத்தில் செய்யலாம். ஒருவேளை. இதெல்லாம் நமக்குச் சரிப்படவில்லை என்று தோன்றினால் சட்டென்று விலகி வந்து விடலாம். பெரிய ஆபத்து இல்லை.


மாறாக இவை நமக்கு பிடித்திருக்கிறது என்றால் அடுத்த கட்டத்துக்கு நகரலாம், தொழிலை முன்னேற்றலாம். தேவைப்பட்டால் அதில் முழுநேரமாக இறங்கலாம்.

ஆகவே இந்த 10 வீத தொழில் முனைவோர் பற்றி எல்லோருக்கும் சொல்லித்தர வேண்டும் என்கிறது இந்தப் புத்தகம். தயங்கி நிற்கிற பலருக்கு இது தைரியம் தரும். அட வேலையை விடணும்ன்னு அவசியம் இல்லைய்யா. ஒரு பக்கம் வேலையைப் பாரு ங்க, மாசா மாசம் சம்பளம் வரும். இன்னொரு பக்கம் வாங்க பழகுவோம், தினமும் கொஞ்ச நேரம் சொந்த தொழிலுக்கு செலவிடுவோம். சரிப்பட்டு வந்தா அப்படியே பிஸினஸ்மேன் ஆகிடலாம். இல்லாட்டி இப்படியே தொடரலாம்.

அதேபோல் மாணவர்களுக்கும் இந்தச் சிந்தனை வரவேண்டும். படிப்பை முடித்து விட்டு ஒரு பெரிய நிறுவனத்தில் வேலைக்குச் செல்ல வேண்டும். அல்லது சொந்தமாகத் தொழில் தொடங்க வேண்டும் என்கிற இரு சிந்தனைகள் தான் அவர்களை இயக்குகின்றன. இந்த இரண்டுக்கும் நடுவே இப்படி ஒரு சாத்தியமும் இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரிய வேண்டும்.

இதுபோன்ற 10 வீத வேலைகளை Side Projects என்று அழைக்கிறது இந்தப் புத்தகம். அதாவது வழக்கமான வேலைகளைச் செய்தபடி இதையும் செய்ய இயல வேண்டும். அப்போதுதான் அது வெற்றியடையும்.

உலகெங்கும் இப்படி Side Projects ஆக தொடங்கிய பல விடயங்கள் சம்பந்தப்பட்டவர்களுடைய முழுநேரத் தொழிலாக மாறியிருக்கின்றன. இதற்கான உதாரணங்களை நாம் பார்த்துக் கொண்டே இருக்கிறோம். நம்மாலும் அது இயலும் என்கிற நம்பிக்கை வந்து விட்டால் போதும் சரியான Side Projects ஐ கண்டறிந்து களத்தில் இறங்கலாம்.





# நீங்கள் எந்நேரமும் கையில் பணம் இல்லாமல் கடனிலேயே இருக்கிறீர்களா? வாழ்க்கையில் முன்னேறவே முடியாது.

வெற்றியாளர்கள் எப்போதும் கையில் அல்லது வங்கியில் பணம் வைத்திருக்கிறார்கள் அல்லது குறைந்தபட்சம் ரொக்கம் வைத்திருப்பவரையாவது உடன் வைத்திருக்கிறார்கள்.

பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்றால் அதற்கு இரண்டு விடயங்கள் மிக முக்கியம். ஒன்று பணம், மற்றொன்று முக்கிய மனிதர்களின் தொடர்பு.

இந்த உண்மையை வெற்றியாளர்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

அவர்கள் தொழிலில் பணத்தை மீண்டும் மீண்டும் முதலீடு செய்து கொண்டேயிருக்கிறார்கள். பெரிய சொத்துக்களை வாங்கினாலும் கூட அதையும் வங்கியில் அடைமானம் வைத்து குறைந்த வட்டிக்கு கடன் பெற்று தொழிலிலேயே திரும்ப முதலீடு செய்கிறார்கள்.

ரியல் எஸ்ரேட், ஹோட்டல்,தனியார் வைத்தியசாலை, தொழிற்சாலை போன்ற உடனடியாக இலாபம் தராத நீண்டகால நோக்கிலானஒருதொழிலைச் செய்தாலும்கூட அன்றாடச் செலவிற்கென ரொக்கப் புழக்கம் உள்ள தொழிலையும் உடன் வைத்துக்கொள்கிறார்கள்.

நான் பெரிய தொழிலதிபர் கிடையாது. சராசரியான நடுத்தர வர்க்கம். நான் எவ்வளவு பணத்தை ரொக்கமாக வைத்திருக்கவேண்டும் என்று நீங்கள் கேட்டால் உங்களுடைய ஒரு மாதச் சம்பளத்தையாவது ரொக்கமாக எந்நேரமும் வைத்திருக்க வேண்டியது அவசியம்.

இப்படி ரொக்கப் பணத்தைக் கையில் வைத்திருப்பதால் என்ன இலாபம்?

- நமக்கு ஏற்படும் திடீர் பிரச்சினைகளை சமாளிக்க முடியும்.
- அவசரப் பணத்தேவையின் போது யார் காலிலும் விழத் தேவையில்லை.
- நம்முடைய அவசரம் வெளியில் தெரிந்துவிட்டால் கடனுக்கான வட்டித் தொகையையும் பிறர் அதிகரித்து விடுவர்.
- ரொக்கம் இருந்தால் குறைந்த விலைக்கு பொருட்களை வாங்கலாம்.

எனவே கையில் எப்போதும் ரொக்கப் பணம் வைத்திருப்பது நல்லது.

இந்த உண்மையை வெற்றியாளர்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

பிரச்சினைகளின்போது ரொக்கத்திற்கு அடுத்தபடியாக பணத்தைப் புரட்ட வெற்றியாளர்கள் நம்புவது எதைத் தெரியுமா? தங்கத்தைத் தான்.



அதுமட்டுமல்ல நிலையான வைப்பு, இன்சூரன்ஸ் பத்திரம் போன்றவற்றைக்கூட அடைமானமாக வைத்து குறைந்த வட்டிக்குக் கடன் பெறமுடியும் என்பதை அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

அவர்கள் பெரும்பாலும் பின் திகதியிட்ட காசோலைகளை யாருக்கும் கொடுப்பதில்லை. அப்படிக் கொடுத்துவிட்டு காசோலைகளை வங்கிக்கு வருகின்ற அன்று பணம் புரட்ட ஓடுவதுமில்லை. இதெல்லாம் தம்முடைய மனநிம்மதியைப்பாதிக்கும் என்பதைப் நன்கு புரிந்திருக்கிறார்கள்.

வெற்றியாளர்கள் Time value of money என்ற உத்தியை தெரிந்து வைத்திருக்கின்றனர். அதாவது ஆண்டுக்கு எட்டு சதவீத விலை வீழ்ச்சி (Inflation) என்று வைத்துக்கொண்டால்அடுத்தஆண்டு கிடைக்கிற 100 ரூபாயைவிட இந்தாண்டு கிடைக்கிற 92 ரூபாய் உயர்வானது என்று நம்புகிறார்கள்.

உங்களுக்குப் புரியவில்லையா?

அதாவது 8 சதவீத விலை வீழ்ச்சி என்றால் இந்தாண்டு 92 அல்லது 93 ரூபாய்க்கு விற்கக்கூடிய ஒரு பொருள் அடுத்தாண்டு 100 ரூபாய்க்கு உயர்ந்துவிடும் என்று அர்த்தம். அப்படியானால் அடுத்த ஆண்டு நமக்கு வரவேண்டிய 100 ரூபாவை இந்தாண்டே அவர் தருவதாக இருந்தால் அவருக்கு 8 சதவீதம் தள்ளுபடி கொடுத்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

வங்கியில் கடன் வாங்குவதை விட வாடிக்கையாளருக்கு விலைக்கழிவு கொடுத்து முன்கூட்டியே பணத்தைப் பெற்றுக்கொள்வது சிறந்தது என்பது அவர்களுக்குத் தெரியும்.

இந்த உத்தியைத்தான் சிறு சேமிப்பு நிறுவனங்கள் அதிகம் பின்பற்றுகின்றன.

இப்படிப்பணம் குறித்த அக்கறையும் சிந்தனையும் நம்மிடமிருந்தால்நாமும் முன்கூட்டியே பிறரிடமிருந்து பணத்தைப் பெற்று முறையாக முதலீடு செய்து இலாபமீட்டி செல்வத்தைக் குவிக்கலாம் •




*கல்பனா கொலையில் நீங்க சம்பந்தப்பட்டிருக்கீங்க வசந்தன்!*

*நீங்க வழக்கத்தை விட அதிவேகமாக உங்க கார்ல பயணிச்சது பொது சிசிடிவி கமராவில பதிவாகியிருக்கு. அதை மட்டும் ஒரு காரணமாக வெச்சுக்கிட்டு என்மேல சந்தேகப்படறது தப்பு சார் இல்லை வசந்தன், உங்களுக்கும் கல்பனாவுக்குமிடையே விவாதம் முற்றிப் போய் அவளை தாக்கியிருக்கீங்க, அவ மயங்கி விழுந்ததும் மனசாட்சியில்லாமல் அவளோட உறவு வெச்சுட்டு அங்கிருந்து தப்பிச்சு உங்க கார்ல பெல்ட்கூட அணியாமல் அதிவேகமாக போயிருக்கீங்க. நான் பெல்ட் அணியலைங்கறதை யார் சார் சொன்னது? இல்லை வசந்தன் நீங்க பெல்ட் அணியவே இல்லை! இல்லை சார், நான் பெல்ட் அணிஞ்சிருந்தேன்!*

*இல்லை வசந்தன், நீங்க சீட் பெல்டும் அணியல, பாண்ட்பெல்டும் அணியலே! இல்லை சார், நான் பாண்ட் பெல்ட் அணிந்திரு ந்தேன்.*

*புதுசா பெல்ட் வாங்கினதுக்கு ஆதாரமா பில் கூட என்கிட்ட இருக்கு..!*

*வெரிகுட் வசந்தன், கல்பனாவை பெலிட்டால் கழுத்தை நெரிச்ச பொழுது தொலைந்த பெல்ட் பக்கிள்ஸ் எங்ககிட்டே ஆதாரமா இருக்கு!*



*வசந்தனுக்கு வியர்வை துளிக்க ஆரம்பித்தது! •*






மாமியார்:-என்ன மோனிகா இட்லிக்குள்ளே ஒரே மல்லிகைப்பூவா இருக்கு?
மோனிகா:-நீங்கதானே அத்தை சொன்னீங்க இட்லின்னா மல்லிகைப்பூ மாதிரி இருக்கணும் என்று.
அது தான் மாவிலே கொஞ்சம் மல்லிகைப்பூவை உதிர்த்திப் போட்டு இட்லி ஊத்தினேன். நல்லாயிருக்கா?



அந்த புரோக்கர் விபரமானவர் என்று எப்படி சொல்றே?
மழை காலத்தில் வீட்டுக்குள்ளே நீச்சலடிக்கும் வசதியுடன் கூடிய வீடு என்று சொல்லி வித்துடுறாரே...



பேஸ்புக் குருப்பைப் பத்தி படம் எடுத்தா டைட்டில் என்ன வைக்கலாம்? "தூங்கா ஜனம்..."



அந்த டாக்டர் கிட்ட போனா மணிக்கணக்கா உட்கார்ந்திருக்கணும்.
ஏன் அவ்வளவு கூட்டம் வருமா?
நீங்க வேற எப்பயாவது வர்ற ஒரு ஆளை மணிக்கணக்காக உட்கார வைச்சு பேசின்னு இருப்பாரு.




தலைவருக்கு விழா நாயகன்னு பட்டம் கொடுத்தாங்களாமே...ஏன்..?
கடுமையான போதையில இருந்தும் ஒரு தடவைகூட கீழே விழலையே...



மருந்தில அற்கஹோல் இருக்கன்னு தலைவர் கிட்ட சொன்னேன்...
என்னாச்சு?
இப்ப மருந்தையும் ஊறுகாய் தொட்டுத்தான் குடிக்கிறார்.!.


தலைவர் ஏன் உம்முன்னு இருக்காரு...
நடை பயணத்தில அவரை வரவேற்க நையாண்டி மேளம் அடிச்சாங்களாம்!






புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?
தங்கள் தந்தையாருக்கு அப்படி நிகழ்ந்திருக்கிறது மன்னா?

பத்திரிகை அலுவலகத்திற்கு போய் அந்த எழுத்தாளர் வறட்சி நிவாரணம் கேட்கிறாரா, ஏன்?
கற்பனை வறண்டு போயிடுச்சாம்!





அந்தப்புரத்தில் முகாமிட்டிருக்கும் மன்னர் முத்தத்தை விரும்பவில்லை என்று ஓலை அனுப்பச் சொல்லியிருக்கார்...
யோவ்...அது முத்தத்தை இல்லை...யுத்தத்தையாம்!

# ஐ.பி.எல்.கிண்ணத்தை வெல்ல தகுதியான அணியா ஆர்.சி.பி




ஒட்டுமொத்த இந்தியாவிலேயும் அதிக ரசிகர்கள் கொண்டிருந்த ஒரு ஐ.பி.எல் அணி என்றால் அது சி.எஸ்.கே தான். டோனி, ரெய்னா, பிராவோ போன்ற வீரர்களெல்லாம் சி.எஸ்.கே வெளியேற்றத்திற்குப் பிறகு ஒவ்வொரு அணியாகச் சென்றுவிட்ட நிலையில், இப்போ ஐ.பி.எல்லின் மிகவும் பிரபல்யமான டீம் எது தெரியுமா? சந்தேகமே வேண்டாம் ஆர்.சி.பி தான்.

இதற்குக் காரணம் உலகின் அனைத்து பவுலர்களுக்கும் சிம்ம சொப்பனமாய் விளங்கும் விராட் கோலி மட்டுமல்ல, சூறாவளி கிறிஸ் கெயில், அதிரடி வோட்சன், இவையனைத்தையும் தாண்டி, 'ஏண்டா இவன் நம்ம நாட்ல பொறக்கல' என அனைவரையும் ஏங்க வைக்கும் ஏ.பி.டிவில்லியர்ஸ் என சற்றும் குறைவில்லாத இந்த நட்சத்திரப் பட்டாளம் தான் காரணம்.

எல்லாம் சரி, ஆனாலும் இன்னும் கோப்பையைக் கைப்பற்ற முடியலயே என்று கேட்டால், அவ்வணி ரசிகர்கள் சொல்லும் பதில், "ஏற்கனவே நாங்க அப்படி. இப்போ வோட்சன் வேற இருக்காப்ல. கப் எங்களுக்குத் தான்" என்பதுதான்.

**கோப்பையை வெல்வதற்குத் தகுதியான அணிதானா ஆர்.சி.பி?**

ஆர்.சி.பி யை பொறுத்தவரை எல்லாமே இருக்குற




மாதிரி இருக்கும். ஆனா ஏதாவது ஒன்று இருக்காது. முதல் மூன்று சீசன்ல அதிரடி ஆட்டக்காரர் இல்ல. அப்புறம் கெயிலும் ஏ.பி யும் வந்தாங்க. வேகப்பந்து வீச்சு அட்ரஸ் இல்லாம இருந்துச்சு. ஜாகிர், ஸ்டார்க் லாம் இருந்தப்போ. நல்ல ஓல் ரவுண்டரும் மிடில் ஆர்டரும் இல்லாம இருந்துச்சு. இப்ப எல்லாம் செட் ஆன நேரத்துல, மறுபடியும் பவுலிங் படு கேவலமாகி நிக்குது. டொப் பவுலர்களான ஸ்டார்க், பத்ரி இருவரும் காயத்தால் அவதிப்பட, ஆரோன், சஹால், ஹர்ஷல், அபு நெகிம், அப்துல்லா என அனுபவமே இல்லாத இந்த வீரர்கள்தான் இப்போதைய ஆர்.சி.பி யின் பவுலிங் யூனிட். இவர்கள் தான் அணியின் மிகப்பெரிய வீக் பொயின்ட்.

எந்த அணிக்கும் கிடைத்திடாத ஓப்பனிங் பார்ட்னர்ஷிப் ரோயல் சேலஞ்சர்சுக்கு அமைந்துள்ளது. கோலி, கெயில் என கிளாஸ் + மாஸ் கூட்டணியோடு தொடங்கி, 360 டிகிரி மன்னன் டிவில்லியர்ஸ் வழியாக நீள்கிறது அவ்வணியின் அசாத்திய பட்டிங் படை. சமீபத்தில் ஓய்வு பெற்ற ஆஸியின் அதிரடி ஓல்ரவுண்டர் வோட்சன், பிக் பேஷில் சதமடித்துள்ள இளம் நம்பிக்கை நட்சத்திரம் ட்ராவிஸ் ஹெட் போன்றோர் அசுர பலம். அட என்னப்பா நாங்கெல்லாம் அதுக்கும் மேல என கடைசி கட்டத்தில் சுனாமியாய் சீறும் 'சோட்டா பீம்' சர்பராஸ், ரஞ்சி நாயகர்கள் கேதர் ஜாதவ், மன்தீப் என இன்னும் நீண்டு கொண்டே இருக்கிறது பட்டிங் டிப்பார்ட்மென்ட்.

பார்த்தா ஐ.சி.சி வெளியிடுகிற உலக லெவன் அணியோட பேட்டிங் ஆர்டர் மாதிரிதான் இருக்கு ஆர்.சி.பி யோட பட்டிங். ஒவ்வொரு போட்டியின் போதும் எதிரணி கப்டனின் இலக்கு இவர்களை 200 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்த வேண்டுமென்பதாகும். முதலில் பட் செய்தால் இவர்களுக்கு என்ன இலக்கு நிர்ணயிப்பது என்பது எதிரணிக்கு தண்ணி பட்டபாடுதான். டில்லிக்கு எதிரான போட்டியின்போது, "விராட்டை சேஸிங்கில் கட்டுப்படுத்துவது கடினம். எனவே முதலில் பவுலிங் செய்கிறோம்" என்று ஓப்பனாகவே சொன்னார். முதலிரண்டு போட்டியில் கெயில் சோபிக்கவில்லை. ஆனால் கோலி, ஏ.பி, வாட்டோ, சர்ஃபராஸ் என அனைவரும் பொளந்து கட்டினர். மும்பைக்கு எதிராக அனைவரும் சொதப்ப, சர்ஃபராசும் ஹெட்டும் அணியை நிலை நிறுத்தினர். அதுதான் ஆர்.சி.பியின் பலம்.

எல்லாம் சரி. 190 அடிச்சும் தோக்குது, 170 அடிச்சும் தோக்குது. என்னதான்பா பிரச்சினை? அந்தப் பாழாய்ப் போன பவுலிங் யூனிட்தான். ஸ்டார்க்கும் இல்ல, பத்ரியும் இல்ல. யாரைத்தான் பயன்படுத்துறது? இந்தக் கேள்விக்கான பதில் வெட்டோரிக்கும் டொனால்டுக்குமே இல்ல போல. மூன்று போட்டிகளில் மொத்தம் 9 பந்துவீச்சாளர்களைப் பயன்படுத்தியுள்ளது அவ்வணி. தகுதியான ஸ்பின்னரும் இல்லை. தரமான வேகப்பந்து வீச்சாளரும் இல்லை. இந்திய அணிக்காக விளையாடிய ஒரே பவுலர் ஆரோன் மட்டுமே என்பதுதான் கவலையான விடயம். மற்றவர்களெல்லாம் ரஞ்சியில் கூட சிறப்பாய் செயற்படாதவர்கள். தனது முதல் தொடரில் சிறப்பாய் செயற்பட்ட சஹால், பின்னர் சிக்சர்களாக வாரி வழங்கத் தொடங்கி விட்டார். ரசூலிடமோ, இக்பால் அப்துல்லாவிடமோ 'கன்சிஸ்டென்சி' சுத்தமாக இல்லை. மில்னே, ரிச்சர்ட்சன் போன்றோரும் அவ்வளவாக சோபிக்கத் தவறுகின்ற னர். மும்பைக்கு எதிராக முதலிரண்டு ஓவர்களை நன்றாக வீசிய ரிச்சர்ட்சனும் ஆரோனும் அடுத்த ஓவர்களில் சிக்சர்களை வாரி வழங்கினர்.

மொத்த அணியும் சார்ந்திருக்கும் ஒரே பவுலர் ஷேன் வாட்சன். முதலிரண்டு போட்டிகளில் தலா இரண்டு விக்கெட்டுகள் வீழ்த்தி, சிக்கனமாகவும் பந்து வீசிய அவரும் கூட மும்பை இந்தியன்சிடம் காலை வாரி விட்டார். இப்படி உள்ளூர் அணியை விட மோசமான பவுலிங்கை வைத்து என்னதான் செய்வது? எவ்வளவு ஓட்டங்கள் குவித்தாலும் அதைக் காப்பதென்பது அரிது. இன்னும் யாரை எப்போது பயன்படுத்துவதென்ற டெசிஷன், அணி நிர்வாகத்திற்கே பெரும் தலை வலியாகத்தான் இருக்கிறது. ஒருவேளை பத்ரி வந்த பிறகு பந்துவீச்சு சற்று முன்னேற்றம் காணலாம். ஆனால் மீதமுள்ள 16 ஓவர்கள்? சரியான காம்பினேஷனை தேர்ந்தெடுப்பது என்பது மிகவும் அவசியம்.

கெயில் தனது முழுத்திறமையையும் வெளிக்காட்டி பல ஆண்டுகள் ஆகிவிட்டது. ஒரு சீசனில் ஒரு போட்டியில் நன்றாக ஆடுவதற்காக அவரை 14 போட்டிகளிலும் வைத்துக்கொண்டிருப்பது பெரும் முட்டாள்தனம். அவர் அணியில் இருப்பதால் சிங்கிள், டபுள்ஸ் எடுப்பதிலும் பீல்டிங்கிலும் சற்று பின்னடைவுதான். அவர் ஒழுங்காய் ஆடாவிட்டாலும் அணி சிறப்பாய் செயற்படும் என்பது முதலிரண்டு போட்டிகளிலேயே தெரிந்தது. போன சீசனில் சில போட்டிகளில் மன்தீப் தனியாளாக வெற்றி தேடித்தந்தார். எனவே கெயிலுக்குப் பதிலாக அவரை களமிறக்கிவிட்டு, இரண்டு வெளிநாட்டுப் பந்துவீச்சாளர்களோடு களம் இறங்குவதுதான் கோப்பையை வெல்ல வேண்டுமென்ற நீண்ட நாள் கனவை நனவாக்க ஒரே வழி.

மும்பைக்கு எதிரான போட்டியில் 170 ஓட்டங்கள் எடுத்தாலும், 6 விக்கெட் வித்தியாசத்தில் தோற்றது ஆர்.சி.பி. இத்தோல்வியின் மூலம் மூன்று போட்டிகளில் ஒரேயொரு வெற்றியுடன் 2 புள்ளிகள் பெற்று ஆறாவது இடத்தில் இருக்கிறது அவ்வணி.


தங்கள் நீண்ட நாள் பிரச்சினையான பவுலிங் கோளாறை இனிவரும் போட்டிகளிலாவது ஆர்.சி.பி சரி செய்தால்தான், கோலியின் கையில் கோப்பை ஏறும்.

-நன்றி:-விகடன-



# காலத்தால் அழியாத கானங்கள் ...

திரைப்படம்:விக்கிரமாதித்தன்
இசை:எஸ்.ராஜேஸ்வர ராவ்
இயற்றியவர்:வாலி
பாடகர்: பி. சுசீலா
பாடல்:வெண் முகிலே.. வெண் முகிலே.



வெண் முகிலே கொஞ்ச நேரம் நில்லு
என் கண்ணீரின் கதை கேட்டு செல்லு
வெண் முகிலே கொஞ்ச நேரம் நில்லு
என் கண்ணீரின் கதை கேட்டு செல்லு

சொன்னதை நீ அவரிடத்தில் சொல்லு
இல்லை என்னையேனும் அங்கழைத்துச் செல்லு
என் கண்ணீரின் கதை கேட்டு செல்லு
வெண் முகிலே.ஏஏஏஏஏ

உறங்காமல் விழியிரண்டும் உறங்குதென்று சொல்லு
உறங்காமல் விழியிரண்டும் உறங்குதென்று சொல்லு
உயிரங்கே.. உடலிங்கே உள்ளதென்றும் சொல்லு
உருவிழந்து மகிழ்விழந்து கருகுவதாய் சொல்லு
உடலிழந்து போகும் முன்னே ஓடி வரவும் சொல்லு
ஓடி வரவும் சொல்லு

வெண் முகிலே கொஞ்ச நேரம் நில்லு
என் கண்ணீரின் கதை கேட்டு செல்லு
வெண் முகிலே. ஏஏஏஏஏஏஏ

ஆடும் மயில் ஆடவில்லை என்று மட்டும் சொல்லு
அழகு நிலா சிரிக்கவிலை என்பதையும் சொல்லு
வாடுவதை அவர் இதயம் வாடாமல் சொல்லு
நான் வாடுவதை அவர் இதயம் வாடாமல் சொல்லு
வருவதற்குள் நீ விரைந்து வந்து பதிலும் சொல்லு
வந்து பதிலும் சொல்லு

வெண் முகிலே கொஞ்ச நேரம் நில்லு
என் கண்ணீரின் கதை கேட்டு செல்லு
வெண் முகிலே ஏஏஏஏஏஏஏ

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
**விமலேஸ்வரி-உடுவில், கஜன், குமார், கமலன், பரமேஸ்வரி, பசுபதி, நவரெட்ணம், கந்தையா, செல்வராசா, ஜெயசோதி, இராசம்மா-மானிப்பாய்,**

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# அலெக்ஸ் பரந்தாமனின் 'தோற்றுப்போனவளின் வாக்குமூலம்' சிறுகதை ஒரு பார்வை

அலெக்ஸ் பரந்தாமனின் ''தோற்றுப் போனவளின் வாக்கு மூலம்'' எனும் இச் சிறுகதைத் தொகுப்பிற்கு ''ஓருரை'' வழங்குவதையிட்டு மிக்க மகிழ்வடைகின்றேன்.

சிறுகதையென்பது வடிவம் சிறிது வல் லமை பெரி தென்பார் எம்.எஸ்.பெருமாள். வாழ்க்கையிலிருந்து பிறந்து வாழ்க்கைக்கு வழிகாட்டுவது தானே இலக்கியம் என்று கூறுவார் சிற்பி-சரவணபவன் அவர்கள்.

அந்த வகையில் தான் வாழ்ந்து வரும் காலப்பகுதியில் காணப்படும் சிலபல சிறுமைகளைக் கண்டு மனம் வெதும் பும் படைப்புக்களாக பரந்தாமனின் சிறுகதைகளைத் தரிசிக் கக்கூடியதாக உள்ளது.தாம் சிறுமையாகக் கண்டு ஆதங் கப்பட்டவற்றை, அடையாளப்படுத்தும் ஒரு முயற் சியாகவும் இதிலுள்ள சிறுகதைகளைக் காண இயலும்.

இவர் காணும் ஆகப்பெரிய ஆதங்கமாக தலைமுறை இடைவெளி இனங்காணப்படுகின்றது.

"பாதைமாறிய பாதங்கள் ","மனப் புழுக்கங்கள்", "பொன்னாத்தை" போன்றவற்றை இதற்கு உதாரணங் களாகக் கொள்ளலாம். தலைமுறை இடைவெளியைக் கண்டு ஆதங்கப் படும் எழுத்தாளர் அதனுடன் சமரசம் செய்துகொள்ள இய லாது படும் அவஸ்தைகளே,அவரது சிறுகதைகளில் வெளி ப்படடு நிற்கின்றன. அதற்கானதீர்வுகளைக்காணும் முயற் சியும் அற்றுப்போய் ஒரு ''கையறு'' நிலையில் நின்று தவிப்பதனை இனங்காண முடிகின் றது.இதற்கான ஆக்க பூர்வமான தீர்வுகளைக் காண வழி நடத்தும் போக்கு இன்றி கழிவிரக்கம் காணும் ஒரு பழைய தலைமுறையாகவே சில கதைகள் காணப்படுகின்றன. இதில்வரும் பழைய தலை முறையினருடன் தம்மைப் பொருத்திப்பார்த்து ''கத்தாஸிஸ்'' எனப்படும் மனப்பாரத்தை இறக்கிவைத்து சுகம் காண வழிவகுப்பதுடன் படைப்புக்கள் நின்று விடுவதனை அவதானிக்க முடிகின்றது.




அதற்கு மேலாக வாசிக்கும் இளந்தலைமுறை தமது மூத்தோரின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு அவர்களது உணர்வுடன் ஒத்துணர்ந்து செயற்படும் போக்கினை வரித் துக் கொள்ள வழி சமைப்பதாக படைப்புக்கள் ஒரு சில அமைந்துள்ளன.பாதைமாறிய பாதங்கள்-திசை மாறிச் செல்லும் இளைஞர்களையும் அதனால் ஏற்படும் விளை வுகளையும் சொல்லி நிற்கின்றது.இதனை வாசிக்கும்போது வளைக்க வேண்டிய வயதில் வளைப்பதில் பெற்றோர்கள், ஆசிரியர்கள்,நாம் வாழும் சமூகம் ஒத்துழைத்துச் செயற்பட்டால் இத்தகைய அவல நிலைகளை நீக்கலாம் என்கின்ற எண்ணம், ஆசிரியர் என்கின்ற வகையில் என்னை நெருடச் செய்தது.

இந்த இளந்தலைமுறை தோற்றுப் போய்க்கொண்டிருப்பதற்கான காரணங்கள் இங்கு விஸ்தாரமாகக் கூறப்படா விட்டாலும் அதற்கான காரணிகளில் பங்காளிகளில் நாமும் ஒருவரா என எம்மைக் குடையச் செய்வதில் நெருடச் செய்வ தில் சிறுகதை எழுத்தாளர் வெற்றி பெறுகிறார் எனக் கூறலாம். "மனப்புழுக்கங்கள்" எனும் சிறுகதை சில அற்ப புழுக்களின் செயற்பாட்டையும் அதனால் எழும் மனப்புழுக்கத்தையும் தெட்டத் தெளிவாகச் சொல்லி நிற்கின் றது. அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.கடும் கோடை காலப்புழுக்கம் எமக்குப் பழகிப்போனதொன்று.ஒரு வாகனத் தினுள் அதிலும் சன நெரிசலில் ஏற்படும் புழுக்கம் எவ்வாறு வாட்டும் எனச்சொல்லத் தேவையில்லை.அதிலும் சன நெரிசலில் ஏற்படும் புழுக்கம்... மேலாகச் சிலதுகள் செய்யும் சில்மிஷங்களால் ஏற்படும் புழுக்கம். ஒரே புழுக்க மயம்... எழுத்தாளரின் எழுத்தாற்றலால் வரி வடிவங்களால் அவள் அனுபவிக்கும் புழுக்கத்தை நாமும் அனுபவிக்க வைத்து விடுகின்றார். இத்தனைக்கும் முத்தாரமாக, அந்த அற்பபுழுக்கள், வெளியே இறங்கிச் செல்லும்போது ஒன் றுமே தெரியாத அப்பாவிகள் மாதிரி, இறங்கிச் செல்கின் றனர். ஆனாலும் அந்தப் பெண்மணி தவிக்கும தவிப் பினை புழுக்கத்தை வாசகர் ஒவ்வொருவரும் தமக்கேற்பட்ட புழுக்கமாகத் தொற்ற வைக்கின்றார் எழுத்தாளர்.

தோற்றுப்போனவளின் வாக்குமூலத்தில் பாத்திரத்தின் வயதிற்கு மீறிய உணர்வுகளும் அவ்வுணர்வுகளை வெளி ப்படு த்தக்கையாண்ட வார்த்தைப் பிரயோகங்களும் கதை யுடன் ஒன்ற வைக்காது வாசகரை அந்நியப்படுத்த வைக் கும் ஒரு தன்மையைக் கொண்டுள் ளதாக உணர்கின்றேன். அந்த வயதுப்பிள்ளையின் வாக்குமூலமாக வன்றி கதை கூறியின் வாக்குமூலமாக வடித்திருந்தால் நாட்டிற்குத் தற்போதைய நிலையில் மிகவும் அவசியமானதொரு கரு மேலும் தாக்கமுடையதாக அமைந்திருக்கும் என்பது எனது வாசக அனுபவக் கணிப்பு.

வழமைபோல வாசிப்பை நேசித்து அதற்கான நேரத்தில் வாசிக்கும் போது இது வேறொரு தளத்தில் அனுபவத்தை வழங்கலாம். இவ்வாறாகச் சுவைபடக்கூறப்பட்ட இக்கதை கள் தொடர்ந்தும் வாசிக்கத் தூண்டுபவனவாக அமைந்து ள்ளன என்பது மறைக்க முடியாதவையாகும்.

**செ.செல்வராசா**
**ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்**
**முல்லைத்தீவு, கிளிநொச்சி.**


# ஈழத்து சினிமா

## கிளிக் குறும்படம் - ஓர் விமர்சன நோக்கு

அம்பலம் திரைக்கூடத்தின் தயாரிப்பில் உருவாக்கப்பட்டுள்ள குறும்படம் கிளிக். தீபனின் எழுதி இயக்கி யிருக்கின்றார். பாடசாலையில் கல்வி பயிலும் சிறார்களின் எளிய ஆசையைப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார் தீபன். சிறார்களின் பார்வையில் அவர்களின் உணர்வுகளின் அடிப்படையில் கனவுகளையும், கற்பனைகளையும் காட் சிப்படுத்தி அதன் வழியே அவர்களின் உலகம் எப்படித் தென்படுகிறது என்பதை வெளிப்படுத்தும் திரைப்படங்களை சிறுவர் திரைப்படங்களாகக் கொள்ள முடியும். சிறார்களின் உலகை புறவயமாகவும் அகவயமாகவும் எவ்வாறு எதிர் கொள்கிறார்கள், தங்களது ஆசைகள் அபிலாஷைகள் எவ்வாறு பெரியவர்களால் பாதிப்படைய வைக்கப்படுகின்றது என்பதை அவை தெளிவாக ஒப்பேற்றும். அவ்வகையான திரைப்படங்களை சிறார் சினிமாவாகக் கொள்ள முடியும். அவ்வகையான இயல்புகளைக் கொண்ட குறும்படமாக கிளிக் குறும்படம் அமைந்திருக்கின்றது.

புகைப்படம் எடுப்பதற்கு பின்னுள்ள ஆசையையும், அதற்கான ஏக்கங்களையும் சிறார்களுக்குரிய பார்வையில் வெளிப்படுத்த விளைந்துள்ளது கிளிக் குறும்படம். பாடசாலையில் விழாக்கள் நடைபெறும் போது சிறார்களுக்கு எப்போதும் கொண்டாட்டமாகவே இருக்கும். அங்கு எடுக்கப்படும் புகைப்படங்கள் அவர்களுக்கு மிகச்சிறந்த நினைவுப் பரிசாக இருக்கும். பல்வேறு வருடங்கள் கடந்த பின்னும் நினைவுகளை மீட்டிப்பார்க்க புகைப்படங்கள் பாரியளவில் உதவும். பரிசளிப்பு விழாக்களில் சிறு வயதுகளில் எடுத்த புகைப்படங்கள் எப்போதும் இன்னும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். அவ்வாறான தருணங்களில் புகைப்படம் எடுத்துக் கொள்வதன் மீதான ஆர்வம் சிறு வயதில் புகைப்படக் கருவி மேல் எழுந்த வினோதக் கவர்ச்சியால் இருக்கலாம்.

அவ்வாறு புகைப்படக்கருவி மேல் எழுந்த ஈர்ப்பினால் சிறுமியொருவர் பரிசளிப்புவிழாவில் தன்னுடைய படமும் எடுக்கப்படும் என்ற ஆவலில்




இருக்கிறார். ஆனால், பாடசாலையில் முதல் பரிசு பெறுபவர்களை மட்டுமே புகைப்படம் எடுக்கும்படி அதிபரினால் புகைப்பட நிருபருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. சிறுமியின் புகைப்படத்தை எடுக்க முடியாத நிர்பந்தத்தில் புகைப்படநிருபர் இருக்கின்றார். சிறுமியின் முகபாவனைகள் புகைப்படம் எடுக்கப்படும் என்ற நம்பிக்கையில் ஒளிப்படக் கருவியைப் பார்த்து ஏங்குகின்றது. அச்சிறுமியை புகைப்படம் எடுப்பமா? விடுவமா? என்று நிருபர் தத்தளிக்கின்றார். புகைப்படம் ஒன்றின் பெறுமதி அச்சிறுமிக்கு மிகப்பெரிய அளவில் இருகின்றது. அதற்கான பணத்தினை சேர்க்கத் தொடங்குகின்றாள். இறுதியில் என்னவாகின்றது என்பதே மீதிக் கதை.

மிகக் குறுகிய நேரத்தில் சொல்லவந்ததை கட்சிதமாக சொல்லிவிட்டுச் செல்கிறது. படத்தொகுப்பும் இசையும் குறும்படத்தை வலுப்படுத்துகின்றன. ஆனால், ஒளிப்பதிவு இன்னும் மேம்படுத்தப் பட்டிருக்கலாம். இசையும் சிறுமியின் நடிப்பும் குறும்படத்தை நிறைவுக்குள்ளாக்குகின்றது. அதிக மாக குறும்படங்கள் புலம்பெயர் தமிழர்களின் நிதியுதவியில் தாயகத்தில் உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும், அண்மையில் தாயகத்தில் உள்ளவர்களின் நிதியில் பெரு வாரியான குறும்பட ங்கள் உருவாக்கப்படுகின்றன. கிளிக் குறும்படத்தை மு.தீபன் தயாரித்திருக்கின்றார். இவர் யாழ். பல்கலைக் கழக பாதுபாப்பு உத்தியோகத்தர் என்பதும் கவனத்தில் கொள்ளத் தக்கது. விரைவில் பொதுவெளியில் குறும்படம் வெளியிடப்படவுள்ளது.

**அனோஜன் பாலகிருஷ்ணன்**

# மனிதன்

## திரைவிமர்சனம்



உதயநிதி தன்னை ஒரு நடிகனாக நிரூபித்தே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் உள்ளார்.

இதற்கு முன் வெளி வந்த அனைத்து படங்களும் சந்தானத்தின் காமெடி, ஹரிஸ் ஜெயராஜின் பாடல்களை நம்பி மட்டுமே படம் வெளிவந்தது.

கொஞ்சம் வித்தியாசமாக கெத்து படத்தில் சந்தானம் இல்லாமல் ஒரு அக்‌ஷன் படத்தில் களம் இறங்கினார். அந்த படம் பெரிதும் அவருக்கு கை கொடுக்கவில்லை,

அதனால், முதலில் தன்னை ஒரு நடிகனாக நிரூபிக்க வேண்டும் பாலிவுட்டில் மாபெரும் வெற்றி பெற்ற ஜாலி டாடி படத்தின் ரீமேக் உரிமையை வாங்கி தயாரித்து நடித்துள்ளார்.

ஒரு நடிகனாக உதயநிதி வெற்றி பெற்றாரா? என்பதை பார்ப்போம்.

### கதைக்களம்

ஊரில் வக்கீலுக்கு படித்து விட்டு எந்த கேஸும் கிடைக்காமல், போராடிக் கொண்டு இருக்கிறார் உதயநிதி, சுற்றி இருப்பவர்கள் தன்னை கிண்டல் செய்வது கூட தெரியாத அப்பாவி, ஒரு வழக்கில் வெற்றி பெற்றால் தான், தன் மாமாவிடம் பொண்ணு (ஹன்சிகா) கேட்க முடியும் என கோபமாக சென்னை கிளம்பி செல்கிறார்.

சென்னையில் இதற்கு மேல் கஷ்டப்படுகிறார், விவேக்கை நம்பி உதயநிதி சென்னை வந்தால் அவரே அங்கு ஊறுகாய் கடை போட்டு பிழைத்து வருகின்றார்.

இந்த நேரத்தில் தான் நாடே தீர்ப்பு எதிர்பார்க்கும் ஒரு வழக்கில் வாண்ட்டாக ஆஜர் ஆகிறார் உதயநிதி. நடைபாதையில் படுத்திருந்தவர்களை கார் ஏற்றி கொன்ற ஒரு பெரிய இடத்து பையன் வழக்கை, கையில் எடுக்கிறார். ஆனால், அந்த பையனுக்கு ஆதரவாக இந்தியாவில் நம்பர் 1 வக்கீலான பிரகாஷ்ராஜ் வாதாடுகிறார்.

ஊரே தன்னை ஒரு மொக்கை லாயர் என்று சொல்கின்றது, நாம் சாதிக்க இது தான் சரியான தருணம் என பிரகாஷ்ராஜுக்கு எதிராக உதயநிதி களமிறங்க, இறுதியில் வெற்றி யாருக்கு என்பதே மீதிக்கதை.

### படத்தை பற்றிய அலசல்

இதுவரை நடித்த 5 படங்களில் இது தான் உதயநிதியின் பெஸ்ட் என்று சொல்லிவிடலாம், எந்த ஒரு இடத்திலும் அலட்டிக் கொள்ளாத நடிப்பு, ஹீரோ திட்டு வாங்குகிறார், ஒரு சில இடங்களில் எல்லாம் ஜுனியர் ஆர்டிஸ்டே கலாய்க்கிறார்கள், அடி வாங்குகிறார், திணறி திணறி வாதாடுகிறார்.

இதுபோன்று தன் குறுகிய வட்டத்திலிருந்து வெளிவந்து முதன் முறையாக ஒரு ஹீரோவாக நம் மனதை உதயநிதி வென்றுவிட்டார்.

ஹன்சிகா உதயநிதிக்கு சப்போர்ட் தரும் கதாபாத்திரம் தான் என்றாலும் முதன்முறையாக ஓவர் ஆக்டிங் இல்லாமல் அளவான அழகான நடிப்பால் கவர்கிறார்.

ஐஸ்வர்யா ராஜேஷ், விவேக் ஆகியோர் கதைக்கு தேவையான நடிப்பை தந்துள்ளனர்.

படத்தின் மற்றொரு ஹீரோ கண்டிப்பாக பிரகாஷ்ராஜும், ராதாரவியும். படத்தில் இவர்கள்




எந்த அளவிற்கு முக்கியத்துவம் என்றால், இவர்கள் பெயரை தான் முதலில் போடுகிறார்கள், பிறகு தான் உதயநிதி பெயரே வருகின்றது.

பிரகாஷ்ராஜ் ஒரு சீனியர் லாயராக மிரட்டுகிறார், ஏதோ பள்ளி சிறுவனை ஆசிரியர் மிரட்டுவது போல் உதயநிதியை அதட்டி உட்கார வைக்கும் இடத்தில் கம்பீரம்.



ஆனால், ஒன்றே ஒன்று சொல்லியே ஆகனும், ராதா ரவி சார் நடிகர் சங்க தேர்தலில் தோற்றதால் மிகவும் சந்தோஷப்படுவது பல இயக்குநர்கள் தான்.

ஏனெனில் இப்படி ஒரு நடிகனை தான் நாம் இத்தனை நாட்கள் தொலைத்து விட்டோம், அவர் பேசினாலே திரையரங்கம் கைத்தட்ட ஆரம்பித்து விடுகின்றது, அதிலும் படத்தின் பாதி வரை அமைதியாகவும் நிதானமாகவும் இருந்து, ஒரு கட்டத்தில் கோபத்தில் கையை உயர்த்தி பேசும் இடத்தில் சார் சுப்பர்சார்.

படத்தின் பல காட்சியமைப்புகள் மிகவும் யதார்த்தமாக உள்ளது, உதயநிதி ஒரு சாதாரண மனுஷனாக கேஸை வாபஸ் வாங்க பணம் வாங்கி, அவர் திருந்தும் இடத்திற்கு வைத்த காட்சிகள் கிளாஸ், அதைவிட கிளைமேக்ஸில் நடைபாதையில் படுத்திருந்து தன் குடும்பத்தை இழந்தவர் கோர்ட்டில் பேசும் இடம் சுப்பர் அஹமத்.

படத்தின் மிகப்பெரும் பலமே ஒளிப்பதிவு, இசையும் தான், மதியின் கமராவில் நீதிமன்றத்தை நம்கண்முன்னே கொண்டு வந்துள்ளார், சந்தோஷ் நாராயணின் இசையின் பாடல்கள் அனைத்தும் ஏற்கனவே ஹிட் , அதை விட பின்னணி இசையில் கலக்கியுள்ளார், அதிலும் குறிப்பாக 'அதோ' BGM படத்தின் கதையை தாங்கி செல்கின் றது.

### க்ளாப்ஸ்

படத்தின் கதைக்கு பொருந்திய கதாபாத்திரங்கள், அனைவருமே சிறப்பாக நடித்துள்ளனர். பிரகாஷ்ராஜ் ராதாரவி போன்ற சீனியர் நடிகர்களின் பங்களிப்பு, படத்தின் இரண்டாம் பாதி வேகம் எடுக்கின்றது.

கிளைமேக்ஸில் உதயநிதியும், பிரகாஷ்ராஜும் பேசும் வசனங்கள் ரசிக்க வைக்கின்றது.

படத்தின் வசனம் 'உங்களுக்கு தெரியாத விடயத்தில் அறிவை தேவையில்லாமல் பயன்படுத்தாதீர்கள்' போன்றவை யோசிக்க வைத்து ரசிக்க வைக்கின்றது.

இவை அனைத்தையும் விட, ரீமேக் படம் என்றாலும், நம் சமூகத்தில் பணக்காரர்களால் நடக்கும் பெரிய விபத்துக்களை எப்படி மூடி மறைக்கிறார்கள் என காட்டிய களம்.


### பல்ப்ஸ்


படத்தின் முதல் பாதி கொஞ்சம் மெதுவாகவே நகர்கின்றது, எந்த இடத்திலும் சோர்வு இல்லை என்றாலும், இன்னும் கொஞ்சம் வேகமாக இருந்திருக்கலாம் என நினைக்க வைக்கின்றது.

சில யதார்த்த மீறல், காட்சிகளில் மட்டும். மொத்தத்தில் இந்த மனிதனில் எடுத்த வழக்கை உதயநிதி வெற்றிகரமாக முடித்தது மட்டுமல்லாமல், ஒரு நடிகனாகவும் வெற்றி பெற்று விட்டார்.



# பிரபாகரன் - விக்னேஸ்வரன் தெற்கிற்கு பிரிவினைவாதிகள்





பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் பொறிமுறையைக்கூட அமைக்க தயக்கம் காட்டும் அரசு நல்லிணக்கம், சமாதானம் என்று சாமரம் வீசுகிறது.

உண்மையில் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நல்லுறவை ஏற்படுத்த அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுமாயின் இன முரண்பாடுகளை இல்லாமல் ஒழித்துக் கட்ட முடியும்.

தமிழர் தரப்பில் முன்வைக்கப்படும் உரிமைக் கோரிக்கைகளை பரிசீலனை கூட செய்யும் நிலையில் அரசு இல்லாத போது நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பில்லை.

தருவதைப் பெற்றுக் கொள்ளுங்கள்,நாம் தரும்வரை அமைதியாக இருங்கள். அநீதிகள் ஏற்படும் அதை எதிர்க்கக்கூடாது. அவ்வாறு எதிர்ப்பது நாட்டைப் பிளவுபடுத்தும் பிரிவினை வாதச் சிந்தனை. பிரிவினைக்குத்துணை போனால் அல்லது பிரிவினைக்கு வித்திட்டால் பயங்கரவாதத் தடைச்சட்டம் பாயும். இவை ஒற்றையாட்சிக்குள் சிங்களவர்களுக்கு அடிமைகளாக தமிழர்கள் இருக்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட கோட்பாடுகள்.

அனைத்து மக்களுக்கும் அரசியலமைப்பு பொதுவானது என்று கூறப்பட்டாலும நடைமுறையில் பொதுவுடைமை துளியள வேனும் இல்லை.

சிங்களவர்களின் ஆட்சிக்கு தமிழர்களின் ஆதரவைப் பெற்றுக்கொண்டாலும் உரிமை சார் விடயங்களில் புறக்கணிப்பு ஒன்றே முன்னிலைப்படுத்தப் படுகிறது.

தமிழர்கள் தமது உரிமைகளுக்காக ஆயுத வழியில் போராடிய போதும் அரசியல் ரீதியாக போராடும் போதும் தென்னிலங்கை சிங்கள பேரினவாதிகள் பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள் என்ற குற்றச்சாட்டை தவிர்க்க முற்படவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம தமிழ் மக்களுக்கு இலங்கை அரச படைகள் கொடுக்காத பாதுகாப்பை வழங்கியது . ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவளித்து , ஒன்றித்து புலிகளுடன் உரிமைக்காக அனைத்துத் தமிழர்களும் திரள்வதற்கு இது முக்கிய காரணமாக அமைந்தது.

சிங்களப் படைகள் தமிழர் மீது கட்டவிழ்த்து விட்ட அநீதிகளை அடக்குவார்கள் என்ற எதிர்பார்ப்பில் இருந்தபோது இந்திய அமைதி காக்கும் படையும் அமைதியை சீர்குலைக்கவே தூபமிட்டது.

தமிழரின் ஆயுதப் போராட்டம் மே 18, 2009 ஆம் ஆண்டுடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவித்த போதும் ஆயுதப்போராட்ட உணர்வுடன் தான் தமிழர்கள் உள்ளனர். பயங்கரவாதிகள் மீண்டும் உருவாக இடமளிக்க மாட்டோம் என்று சிங்களவர்கள் கொக்கரிக்கின்றனர்.

வடக்கில் பெரும்பான்மையாக வாழும் தமிழர்கள் தமது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி ஏகோபித்த ஆதரவுடன் தெரிவு செய்த வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனையும் தெற்கிலுள்ள இனவாதிகள் பிரிவினைக்கு வித்திடுபவராகவே காண்பிக்கின்றனர்.

ஆயுதப்போராட்டத்தை வழி நடத்திய தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், வடமாகாணசபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் ஒரே மனோநிலையில் தமிழர்பிரச்சினைகளை அணுகுகின்றனர் என்று அமைச்சர் தயாசிறி குறிப்பிட்டுள்ளார்.

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையில் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் செயற்பாடுகள் அமைந்துள்ளதாகசுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் தயாசிறி, புலிகளின் தலைவர் பிரபாகரனின் எதிர்ப்புக்களைப் போன்று விக்னேஸ்வரனும் கடும் போக்குகளை வெளிப்படுத்தி வருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆக விக்னேஸ்வரன்-பிரபாகரன் ஆகியோர் தமிழர்களின் உரிமைகளுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவதால் தெற்கு அரசியல் வாதிகளுக்கு பிரிவினை வாதிகளாக தோற்றமளிக்கின்றனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலுள்ள முக்கிய தலைவர்களுக்கே முதல்வர் விக்னேஸ்வரனின் மீது கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளதை பலமுறைவெளிப்படுத்தியுள்ளனர்.

வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் இந்த எதிர்ப்பு மேலும் அதிகரித்ததோடு தென்னிலங்கை சிங்கள அரச தலைவர்களுடனான தமது தனிப்பட்ட உறவுகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுகின்றாரே என்றும் பதறிப் போயினர்.

அதுமட்டுமன்றி பாராளுமன்றத் தேர்தல் செலவுக்காக நிதி சேகரிக்க வெளிநாடு செல்ல மறுத்த முதலமைச்சரை கட்சியிலிருந்து நீக்க வேண்டும் என்றும் போர்க்கொடி தூக்கினர்.

கண்டம் விட்டு கண்டம் சென்றும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி தமக்கு எதிரான எதிர்ப்பை மேலும் அதிகரிக்கத் தலைப்பட்டனர்.

மாகாண சபையில் முதலமைச்சருக்கு எதிரான அணியை உருவாக்கி அவர்களையும் அந்நியப் படுத்தும் வேலையைச் செய்ததைத் தவிர வேறு எதையும் சாதிக்கவில்லை.

வடக்கிலும் தெற்கிலும் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக பலமாக எதிர்ப்புகள் முன்வைக்கப்படும் என்ற மாயை உருவாக்கப்பட்ட போதும் மக்களின் உரிமைக்குரலாய் ஒலிப்பதால் தவிர்க்க முடியாத மாபெரும் சக்தியாய் உயர்ந்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தமிழ் மக்களால் மறக்க முடியாத தலைவராக என்றும் இருப்பார். தமிழர்கள் மறக்க நினைத்தாலும் தயாசிறி போன்ற சிங்கள அரசியல் வாதிகள் தமது இருப்பைப் பலப்படுத்த பிரபாகரன் எனும் பெயரை உச்சரிப்பர்.

தெற்கிற்கு பிரிவினை வாதிகளாக விளங்கும் தலைவர் பிரபாகரன், முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோர் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் என்றும் மதிக்கப்படுவர்.

அதை எந்தவொரு சிங்கள தலைவர்களாலும் மாற்ற முடியாது.

ஆயுதப்போராட்டம் மூலம் அடைய முடியாத உரிமையை தமிழர்கள் அரசியல் ரீதியாக அடைவர்.

தமிழர்கள் உரிமைகளை பெற்று நிம்மதியாக வாழ வேண்டும் என்று முன்வைக்கும் கோரிக்கைகளை தொடர்ந்து சிங் களவர்கள் நிராகரிக்க முடியாது.

மகிந்த ஆட்சிக்காலத்தில் மனிதவுரிமை மீறல்கள் எல்லையைக் கடந்ததால் ஐக்கிய நாடுகள் சபையில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டதோடு ஆட்சிமாற்றத்து க்கும் உள்ளாகி இலஞ்ச ஊழல் விசாரணைக்கு முகம்கொடுத்து வருகிறார்.

தமிழர்களின் உரிமைகளைப் புறக்கணிப்பதன் மூலம் தமது எதிர்கால அரசியலை பலப்படுத்த முடியும் என்று நம்பிக்கெட்ட மகிந்த போன்றவர்கள் தற்போதும் உள்ளனர்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் துப்பாக்கியால் செய்ய முயன்றதை விக்னேஸ்வரன் அரசியல் பலம் ஊடாக செய்ய பார்க்கின்றார் என்று அமைச்சர் தயாசிறி குற்றம்சாட்டியுள்ளார்.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயக பூமியிலிருந்து உரிமைக் குரல் எழுப்பப்படும் போதெல்லாம் இவ்வாறு பயங்கரவாதிகள் என்ற முத்திரை குத்தப்படுவது வழமையே.

என்னதான் முத்திரை குத்தினாலும் காலத்துக்குக்காலம் உரிமைகளைக் கேட்டு தமிழர்கள் போராட்டங்களை முன்னெடுக்க தயங்குவதில்லை.

தமிழர் தரப்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் முக்கிய பங்காற்றி வருகிறார்.

முதல்வர் விக்னேஸ்வரனின் செயற்பாடுகள் தென்னிலங்கையிலுள்ள பொதுபல சேனா, சிங்கள ராவய, ராவணாபலய போன்ற பௌத்த அமைப்புக்களுக்கும்சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச, உதயகம் மன்பில, தயாசிறி போன்ற சிங்கள அரசியல் வாதிகளுக்கும் எதிர்ப்பை வெளிப்படுத்தி சிங்கள மக்களின் ஆதரவைப் பெறும் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளன.

தமிழரின் உரிமை களைப் பாதுகாக்கவும் மறுக்கப்படும் உரிமைகளைக் கேட்டு பெற்றுக் கொள்ளவும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் போன்று அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து குரல் கொடுத்தால் தமிழர் எதிர்பார்க்கும் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**காண்டீபன்**

facebook

# துஷ்டரைக் கண்டால் தூரவிலகு

ஒரு காட்டில் பல விலங்குகள் வாழ்ந்து வந்தன. அந்த விலங்குகளைப் பிடிக்க பலரும் அந்தக் காட்டுக்கு வேட்டைக்கு வருவது வழக்கம்.

ஒருமுறை வேட்டைக்காரன் ஒருவன் அந்தக் காட்டில் ஒரு கூண்டை வைத்துவிட்டுப் போய் விட்டான். அந்தக் கூண்டில் ஒரு புலி மாட்டிக் கொண்டது.

அந்தக் கூண்டில் அகப்பட்ட புலி உறுமிக் கொண்டே நடை பயின்று கொண்டிருந்தது. அப்போது அந்தக் காட்டுவழியே ஒரு வழிப்போக்கன் சென்று கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்து அந்தப் புலி ஐயா, தயவு செய்து என் அருகே வாரும் என்று அழைத்தது. புலியைக் கண்டு பயந்து தூர விலகிச் சென்றவன் அதன் அழைப்பைக் கேட்டு கூண்டின் அருகே வந்தான். அவனைப் பார்த்து, அந்தப் புலி பரிதாபமாகக் கூறியது.

ஐயா, எனக்கு மிகவும் வயதாகிவிட்டது. கண்ணும் தெரியவில்லை. இந்த வேட்டைக்காரன் என்னைப் பிடித்துப் போய் துன்புறுத்துவான். தயவு செய்து என்னை விடுவித்து விட்டுப் பிறகு உங்கள் வழியே போகலாம் ஐயா."

அதன் முகத்தையும் கூர்மையான அதன் பற்களையும் பார்த்துப் பயந்த அந்த வழிப்போக்கன், ஹூ...ஹூம் நான் மாட்டேன்.நீ துஷ்ட மிருகம். உன்னை வெளியேவிட்டால் என்னைக் கொன்று தின்று விடுவாய் என்று மறுத்தான். தன் வழியே போகத் தொடங்கினான்.

அப்போது அந்தப் புலி, ஐயா, நான் சைவமாக மாறி ரொம்ப காலமாயிற்று. இப்போதெல்லாம் நான் மனிதர்களையே தின்பதில்லை. என்னை வெளியே விட்டுப் பாருங்கள் ஐயா. அப்போது தான் தெரியும் நான் எவ்வளவு நல்லவன் என்று." எனக் கெஞ்சியது.

தயங்கி நின்ற வழிப்போக்கனிடம் அது கெஞ்சியது. மன்றாடியது. உன்னைத் தின்ன மாட்டேன் என்று சத்தியம் செய்தது.

அதன் தவிப்பைப் பார்த்த அந்த வழிப்போக்கன் பாவமாயிருக்கிறதே இந்தப் புலியைப் பார்க்க என எண்ணி அந்தக் கூண்டின் அருகே சென்று அதைத் திறந்து விட்டான்.

என்ன நடக்கும்? வெளியே வந்த புலி என்ன நண்பரே, நலமா? என்றா விசாரிக்கும்?

ஒரே பாய்ச்சலில் பாய்ந்து அந்த வழிப்போக்கனைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டது. அந்த மனிதன் பயந்து அலறினான்.

ஏ புலியே, என்னைத் தின்ன மாட்டேன் என்று சத்தியம் செய்தாயே, இப்போது கொல்ல வருகிறாயே,

அட அப்பாவி மனிதா, பட்டினியாய் இருப்பவர் முன் உணவு கிடைத்தால் உண்ணாமல் இருப்பது முட்டாள்தனம் அல்லவா? இது தெரியாதா உனக்கு?"

இதோ பார், நீ செய்வது நியாயம் என்று யாராவது சொன்னால் நான் உனக்கு உணவாகிறேன்." என்றான் நடுங்கியவாறே.

அந்த சமயம் பார்த்து ஒரு நரி அந்த இடத்துக்கு வந்தது. நரியைப் பார்த்த் வழிப்போக்கன் இந்த நரியிடம் நியாயம் கேட்போம் என்றான்.

புலி இதுவும் நம் இனத்தைச் சேர்ந்தது. எனக்கு சாதகமாகத் தான் சொல்லும் என எண்ணிக் கொண்டு நரியிடம் நியாயம் கேட்க சம்மதித்தது. அருகே வந்த



நரியைப் பார்த்து புலி அதிகாரத்துடன் பேசியது.

நரியாரே, நீரே நியாயம் சொல்லும்.நான் கூண்டுக்குள் இருந்தேனா, இந்த மனிதன் வெளியே போய்க்கொண்டு இருந்தார், என்று சொல்லும் போது நரி குறுக்கிட்டு, என்ன என்ன, யார் உள்ளே இருந்தது, ' யார் வெளியே இருந்தது?" என்று ஒன்றுமே புரியாதது போல் கேட்டது.

புலி பொறுமையாக மீண்டும் கூறத் தொடங்க, நரி ஓ..ஹோ.. இந்த மனிதன் கூண்டுக்குள்ளும் நீங்கள் வெளியிலும் இருந்தீர்களா? என்று வேண்டுமென்றே கூறியது.

புலி பொறுமையிழந்து, உறுமியது. அதைக்கண்டு அஞ்சியது போலப் பாசாங்கு செய்த நரி,

புலியாரே, மன்னியுங்கள் எனக்கும் வயதாகிவிட்டதால் மறதி அதிகம். சரி தாங்கள் எங்கு இருந்தீர்களோ அங்கு சென்று நின்று சொல்லுங்கள் என்றதும் புலி கூண்டுக்குள் சென்று நின்றது.

இதோ பார், நான் இங்குதான் இருந்தேன். இந்த மனிதன்... என்று நரிக்கு விளக்கமாக சொல்வதில் கவனமாக இருக்கும் போது, நரி மெதுவாக அந்த வழிப்போக்கனிடம், ஓய், சீக்கிரம் கூண்டுக் கதவைச் சாத்தும் ஐயா, நிற்கிறீரே என்று கூறவும் பாய்ந்து சென்று கூண்டுக் கதவைச் சாத்தி விட்டு அப் பாடா என்று பெருமூச்சு விட்டான் அந்த மனிதன்.

அந்தநரி, துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்ற பழமொழியை அறியமாட்டீரா, உங்கள் வழியைப் பார்த்துக் கொண்டு போங்கள் ஐயா என்று சொல்லிவிட்டுக் காட்டுக்குள் ஓடிவிட்டது.

உண்மைதான் அனுபவ பூர்வமாக அறிந்து கொண்டேன் என்று சொல்லியவாறே வேகமாக அங்கிருந்து நடந்தான் அந்த மனிதன்.


அறியாமையாலும் அவசரத்தாலும் ஆணவத்தாலும் மீண்டும் கூண்டுக்குள் அகப்பட்டுக் கொண்டதை எண்ணி உறுமியவாறு நின்றிருந்தது அந்தப் புலி.

நம் வாழ்க்கையிலும் நாம் இந்தப் பழமொழியை மறவாமல் இருந்தால் பல துன்பங்கள் நம்மை அணுகாது நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 707

Search for people, places and things | Nagendram Home


கோபிகிருஷ்ணா



கஜன் கஜன்சன்




சயந்தன்




சுரேஸ்குமார்



செந்தூரன்



ரவிராஜ்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# அநாவசிய கட்டுப்பாடுகள் ஆரோக்கியத்தை பாதிக்கும்

பகுதி - 3

அநாவசிய கட்டுப்பாடுகள் கட்டுக்கடங்காது நீண்டு செல்வதனால் பல சுகாதார பிரச்சினைகள் தோன்றுகின்றன. இனிப்பான பண்டங்களை உண்ணக் கூடாது என கட்டுப்பாடு விதிப்பது பலருக்கு மனக்கவலையை ஏற்படுத்தி நிற்பதுடன் சிலசமயம் எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்தி விடுகிறது.

சாதாரண நிறையுடைய ஆரோக்கியமான ஒருவர் அளவுடன் சீனி, சர்க்கரை போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்வது பாதுகாப்பானது.

அதிகரித்த பருமன், நீரிழிவு நோய் உள்ளவர்கள் சீனிக்கு பதிலாக சீனிச்சுவையை ஒத்த இனிப்பூட்டிகளை பாவிக்க முடியும். சிற்றுண்டி வகைகள், பாயாசம், குளிர்பானங்கள் போன்றவற்றிற்கு கூட இந்த இனிப்பூட்டிகளை பாவிக்க முடியும்.

இவை பாதுகாப்பானவை. நீரிழிவு நோய் உள்ளவர்கள் சில விசேட நிகழ்வுகளின் பொழுது சீனி சேர்க்கப்பட்ட உணவு வகைகளை உண்டு விட்டால் அது சம்பந்தமாக அதிகம் பயம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் அவற்றை அவர்களில் அன்றாட வாழ்க்கையில் தவிர்த்துக் கொள்வது நல்லது.

தினமும் 30 நிமிடங்கள் தொடக்கம் 60 நிமிடங்கள் வரை TV பார்ப்பது சுகாதாரப் பிரச்சினைகள் எதனையும் ஏற்படுத்தி விடப் போவதில்லை.

இன்றைய நிலையில் கைத்தொலைபேசி வாழ்க்கையின் ஒரு இன்றி அமையாத அங்கமாக மாறி இருக்கிறது.

இதனை பாவிப்பதனாலும் பாரிய சுகாதாரப்பிரச்சினைகள் எதுவும் ஏற்படாது.

ஆனால் இவற்றிற்கு அடிமையாகி இவற்றை தீய வழிமுறைகளுக்கு பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டிய தேவை இருக்கிறது.

மகிழ்ச்சியான வேளைகளில் சிரித்து குதூகலிப்பதற்கும், கவலையான வேளைகளில் அழுவதற்கும் இடமளிக்கப்பட வேண்டும். ஆனால் இந்த மன உணர்வு வெளிப்பாடுகள் இன்னொருவரை பாதிக்காதவாறு பார்த்துக் கொள்வது அவசியமாகின்றது.

எமது அன்றாட வாழ்க்கையில் ஓய்வு இன்றி அமையாததாகும். "சும்மா இருக்காதே" என்று ஒருவரை எந்த நேரமும் தொந்தரவு செய்து கொண்டிருப்பது ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல.

தொடரும்

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்.

# யாழ்.குடாநாட்டு நீரில் நைத்திரேற்று அதிகரிப்பை தடுப்பதற்கு

இன்றைய நாட்களில் குடாநாட்டின் நீரின் தரத்தைப் பற்றி நாம் எடுத்துக் கொள்ளும் போது அதில் முக்கியத்துவம் பெறுபவை நைத்திரேற் மற்றும் வன்தன்மை ஆகும். வன்தன்மையானது எமது குடாநாட்டின் புவியியல் சார்பாக நீரில் ஏற்படும் மாசாக்கமாகும்.

இது எம்மால்கட்டுப்படுத்திக் கொள்ள இயலாத ஒன்றாகும். ஆயினும் நைத்திரேற் தொற்றானது மனிதனால் ஏற்படுத்தப்படும் மாசாக்கமாகும். எனவே நாம் இதனைப் பற்றி தெளிவுற அறிந்து இதனைத் தடுப்பதற்கு இயலுமானவற்றைச் செய்தல் வேண்டும்.

நைத்திரேற் தொற்றினை அறிந்து கொள்வதற்கு முன்பாக நாம் நைத்திரேற்றின் சில இயல்புகளை அறிந்து கொள்வது நன்றாகும். இதன் மூலம் நாம் நைத்திரேற்றின் தொற்றல் அடையும் இயல்பு, நோயாக்கும் இயல்பு என்பவற்றை இலகுவாக அறிந்த கொள்ளக் கூடியதாக இருக்கும்.

நைத்திரேற் என்பது நைதரசன் மற்றும் ஒட்சிசன் சேர்ந்த ஓர் இரசாயன பதார்த்தம். இது வேறுபட்ட சேதன அசேதனப் பொருட்களுடன் இணைந்து காணப்படுகின்றது.

அநேகமான அசேதன நைத்திரேற் உப்புக்கள் சாதாரண அமுக்க வெப்பநிலையில் இலகுவாகக் கரையக் கூடியவை ஆகும். அதாவது கரைதிறன் கூடியதாகும்.

நைத்திரேற் ஆனது நைத்திரேற் வட்டம் மூலம் சூழலில் ஓர் சமநிலையிலும் பேணப்பட்டு உருவாகின்றது. ஆனால் மனிதனின் முறையற்ற செயற்பாடுகளின் மூலம் இவ்வட்டமானது குழப்பமடைந்து மனிதனுக்கே பெரும் தீங்கை ஏற்படுத்திய வண்ணம் உள்ளது.

நைத்திரேற் ஆனது விவசாயத் தேவைக்கான அசேதன உர உற்பத்தியில் அதன் கரையும் இயல்பையும் உயிரியல் ரீதியாக அழிவடையும் இயல்பையும் அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் நைத்திரேற் ஆனது தாவரங்களின் வளர்ச்சி மற்றும் போசணைக்கு இன்றியமையாத ஒன்றாகும்.

பொதுவாக நீரானது விவசாய நிலங்களின் நீர் மூலமும் மலசலக்கூடக்கழிவுகள்,தொழிற்சாலைக் கழிவுகள் மூலமும் நைத்திரேற்றின் தொற்றலுக்கு உள்ளாகின்றது. இதன் அதிக கரைதிறன் இலகுவான நீருடன் கொண்டு செல்ல ஏதுவாக அமைகின்றது.

யாழ்.குடாநாட்டைப்பொறுத்த வரை சில இடங்களில் மாத்திரமே நன்னீர் வளம் நிரந்தர நீராகக் காணப்படுகின்றது. இந் நிரந்தர நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்டு அப்பகுதியில் மக்கள் செறிந்த பிரதேசமாகக் காணப்படுவதுடன் இங்கு விவசாய நடவடிக்கைகளும் அதிகளவில் காணப்படுகின்றது.

குடாநாட்டின் நீர்வளமானது கல்சிய பாறைகளுக்கிடையில் காணப்படும் குகைகளில் சேமிக்கப்படுகின்றது. இப் பாறைகளின் மேல் காணப்படும் மண்படையானது மெல்லியதாகவும், பாறைகளின் உட்புகவிடும் தன்மையும் அதிகமாக காணப்படுவதால் விவசாய கழிவுகள் இலகுவாக இந்நிலக்கீழ் நீர் வளத்தை தொற்றலடையச் செய்கின்றன.

அத்துடன் விவசாயிகள் தமது விளைச்சலை மட்டும் கருத்தில் கொண்டு அதிகளவில் உரங்களைப் பயன்படுத்துவதும் அதிக நீரைப் பாய்ச்சுவதும் அதிகமாக நீர்வளம் நைத்திரேற் தொற்றுக்குள்ளாக காரணமாகின்றது.

இதன் செறிவானது உலக சுகாதார நிறுவனத்தால் ( WHO 4 th Edition )50 mg/l ஆக அதன் அனுமதிக்க கூடிய செறிவாக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

இது 11mg / l Nitrate As Nitrogen எனவும் கொள்ளலாம். இத்னை சார்பாகக் கொண்டே அனைத்து நாடுகளும் தமக்குரிய குடிநீரின் தரத்தை நிர்ணயித்துக் கொண்டுள்ளன.

அதன் பிரகாரமே இலங்கையில் SLS 614 part II (2013 ஆம் பதிப்பு) 50mg/l அதன் உச்சவரம்பாக அறிவித்துள்ளது. இந்த செறிவு எல்லையானது முழுமையாக Metho moglobinemia எனும் நீலக் குழந்தைகளை அடிப்படையாக வைத்தே நிர்ணயிக்கப்பட்டவை.

17 நைத்திரேற் Enterohepatic Metabolism ன் போது இடைநிலையாக நைத்திரைட் உருவாகின்றது. இந்த நைத்திரைட் ஆனது ஈமோகுளோபினில் உள்ள பெரசு (Ferrous – $Fe^{2+}$) அயன்களை பெரிக் (Ferric – $F^{3+}$) அயன் களாக ஒட்சியேற்றுவதால் ஈமோக்குளோபினின் ஒட்சிசனை காவும் தன்மை பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றது.

இதனால் அங்கங்களின் தசைகளில் ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்பட்டு ஆபத்தான நிலைமையை உருவாக்கின்றது.

இதுவே Methemoglobinemia என அழைக்கப்படுகின்றது. இது சிறு குழந்தைகளில் ஏற்படும் போது அது நீலக் குழந்தை நோய் என அழைக்கப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் இந்நோய்த் தாக்கத்தின் மூலம் இறப்பும் ஏற்படுகின்றது. ஆகவே கட்டாயமாக சிறுகுழந்தைகளும் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மாரும் இத்தொற்றான நீரைப் பருகுவதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

மற்றும் நைத்திரேற் ஆனது குறிப்பிடத்தக்களவிற்கு அதிகமாக மனிதனால் உள்ளெடுக்கப்படும் பொழுது அவை புற்றுநோயாக்கித் தொழிற்படும் சந்தர்ப்பங்களும் அதிகளவில் இருப்பதாகப் பல ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. அதாவது உள்ளெடுக்கப்படும் நைத்திரேற் ஆனது புற்றுநோயாக்கியான "நைத்திரோசமைனஸ்" (Nitrosamines ) ஆக உடலில் மாற்றம் அடைந்து உணவுக் கால்வாய் (Esophageal) மற்றும் வயிற்று (Stomach) புற்றுநோய்க்குக் காரணமாகின்றது. நைத்திரேற் எம் குடாநாட்டு நீரில் மற்றைய பகுதிகளிலும் பார்க்க அதிகமாக காணப்படுகின்றது என்பது அனைவரும் அறிந்ததே.

இதற்கு முக்கிய காரணம் எமது தரைக்கீழ் கட்டமைப்பும் விவசாய நடவடிக்கைகளும் என அறிந்து கொண்டோம். நைத்திரேற் எனும் ஓர் இரசாயன பதார்த்தம் மட்டும் அல்லாது அதனுடன் சேர்த்துப் பயன்படுத்தப்படும் ஏனைய மிகக்கொடிய நச்சான மற்றைய இரசாயன பதார்த்தங்கள் (Agro Chemicals –Pesticide weedicides fungicide etc) நீண்ட கால குறுகியகால விளைவுகளை ஏற்படுத்தவல்ல மிகக் கொடிய இரசாயனங்களாகும். Nitrate ஆனது ஓர் குறிப்பிட்ட அளவிற்கு மேலாகக் காணப்படுமாயின் அதனை ஓர் குறிகாட்டியாகக் (Index) கொண்டு அடுத்த கட்ட ஆய்வுகளுக்குச் செல்ல வேண்டியது கட்டாயமாகும்.

அத்துடன் Nitrate பரிகரிக்கும் (Treatments / Removals) நடைமுறைகளானது அதிகள்வாக காணப்படுகின்ற போதிலும் அவை அதிதொழில்நுட்பம் வாய்ந்தவையாகவும் அதிக செலவீனம் கொண்டவையாகவும் உள்நாட்டு சந்தையில் கிடைக்கப் பெறாத தொழில்நுட்பம் கொண்டவையாகவும் உள்ளது.

இன்று உள்நாட்டு சந்தையில் காணப்படும் Ro (Reverse Osmosis) தொழில்நுட்பம் மட்டும் ஓரளவு Nitrate ஐ அகற்றக் கூடியதாக உள்ளது. ஆயினும் Ro சுத்திகரிப்பானது அதிக விலை கொண்டதாகவும் பாரிய செலவு கொண்டதாகவும் உள்ளது. சாதாரண மக்களின் பாவனைக்கு எட்டும் வகையில் இவை இல்லை.

இந்த விவசாய இரசாயன தொற்றானது நிச்சயமாக முறையற்ற மற்றும் அதீத இரசாயன பாவனையினால் தான் ஏற்படுகின்றது.

ஆதலால் எம் மக்களுக்கு நைத்திரேற் பற்றிய விழிப்பூட்டல் மிகவும் அவசியமான ஒன்றாகும். இதன் மூலமே நிலத்தடி நீர்வளமானது விவசாய இரசாயன கழிவுகளின் தொற்றலில் இருந்து பாதுகாக்கப்படுவதற்கும் தொற்றுக்குள்ளான நீரில் இருந்து மக்கள் தம்மை பாதுகாத்துக் கொள்ளவும் முடியும்.

சு.சரவணன்
இரசாயனவியலாளர்.

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.